நம்பர் 717 உ
சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,
திருவள்ளுவர் நூல் நிலையம்,
பாகனேரி.

இஃது
ஸ்ரீமான் வெ. பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களால்
இனமளிக்கப்பெற்றது.

............ ஆண்டு ............ திங்கள் ............ நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

Chakravarthini Series 1.

# வியாஸப்ரகாசிகை.

# VYASAPRAKASIKA.

3459

A GUIDE

TO

**Essay writing in Tamil.**

FOR

**STUDENTS**

OF

**SCHOOLS & COLLEGES.**

FIRST EDITION.

PUBLISHED BY

**P. S. Appusami Aiyer,**

*Proprietor, CHAKRAVARTHINI.*

TRIPLICANE.

1910.

*All Rights Reserved.*

PRICE ] [ 8 ANNAS.

MADRAS

PRINTED BY KALVI PRAGASAM PRESS.

*Triplicane.*

# OPINIONS.

3459

Hindu High School, Triplicane,

24—11—10.

I have read portions of a Tamil publication "Vyasaprakasika," and I have no hesitation in saying that it is written in good easy Tamil. The subjects treated are numerous and varied, though many of them are abstract subjects. The book, if used well, may help the reader in writing good compositions in Tamil. It may be used with great advantage by the boys of the 4th, 5th and 6th forms of the High Schools.

(Sd). T. N. Swaminatha Aiyar,

*Head-Master.*

---

Hindu Primary School, Triplicane,

25—11—10.

DEAR SIR,

I have gone through your "Vyasaprakasika" and I have great pleasure in testifying that the various subjects treated therein will be of great help to the pupils of the High School, and may be very useful to the teachers of Elementary Schools.

(Sd) C. Ragavalu Naidu.

## சென்னை இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்.

### தமிழ்ப் பண்டிதர்.

### கோ. வடிவேலு செட்டியாரவர்களது அபிப்பிராயம்

வியாசப்பிரகாசிகை யென்னும் வசன வடிவப் புத்தகமொன்று எனது பார்வைக்கனுப்பப்பட்டது. அது தற்கால நடையுடை பாவனைகட்கேற்ப எளிய நடையில் தக்க பிரமாணங்களுடன் படிக்குந்தோறும் ஊக்கத்தை யுண்டாக்கத்தக்கதாயெழுதப்பட்டிருக்கின்றது. இதிலுள்ள விஷயம் எம்மதமும் சம்மதமெனும்படி பெரும்பான்மையும் அமைந்திருக்கின்றது.

இது யூனிவர்சிடி பரீக்ஷைக்கு வாசிக்குந்தமிழ்மாணவர்கள் வியாசமெழுதுவதற்குத் தக்க கருவியாயுள்ள புத்தகமாமென்று கருதுகின்றேன்.

---

திருவல்லிக்கேணி,

24—11—1910.

இந்த வியாசப்பிரகாசிகை யென்னும் நூல் இக்காலத்துப்புதிய ஏற்பாட்டின்படித் தமிழ் கற்கும் மாணுக்கர்களுக்கு நிரம்பவும் இன்றியமையாததாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

இங்ஙனம்,

தி. ராகவாசாரி,

தமிழ் உபாத்தியாயன்.

ஹிந்துஹைஸ்கூல், திருவல்லிக்கேணி.

# PREFACE.

—:‡|| § ||‡:—

These essays have appeared before, in the pages of that useful but unassuming Tamil Monthly 'The Chakravarthini' and are here presented to the public, at the request of several friends and wellwishers, as a book of selections for their favourable reception and kind perusal. They make no pretensions to any elaborate treatment of the subjects considered but give one an idea of what literary Tamil comes to when combined with popular Tamil and of what the condition of the Tamil prose is at the present time. They deal mainly with abstract subjects like poverty, wealth, health, knowlege, friendship etc and give an interesting reading to all people—men and women, boys and girls,

The publishers have taken advantage of the recent rulings of the Government as well as of the University that Tamil composition forms a compulsory portion of the School Final and Intermediate Examinations and have rendered an invaluable good to Tamil students in general. It is devoutly hoped that these selections will form a friend and guide to essay-writing in Tamil. But a caution seems to be very necessary. The students are not on any account advised to get by heart any of these essays; but they should be able to quote good lines and pithy sentences to suit the occasion like set diamonds in jewels.

The Publishers tender their best thanks to Mr. Varakavi Thiru. A. Subramania Bharathy, who has bestowed a fostering care on this little volume through all the stages of its growth, and frcm whose pen many of the essays here collected orginated; they again thank the contributors of the other essays and the writer of "how to write an essay" for his lucid exposition of the same, and many friends for their courteous assistance and advice while the sheets have been passing through the press.

In conclusion it is earnestly hoped that this little volume will supply a really longfelt want, and hence no apology is needed for its appearance. Should this meet with a favourble reception at the hands of the Tamil knowing public, the publishers intend to issue another volume, which will contain more matter than the present one, with this as the first of the series.

**TRIPLICANE,**
**13th November, 1910.**

K. C V.

# CONTENTS.


| | | Page. |
|---|---|---|
| 1. | How to write an essay ... ... | v |
| 2. | Good manners ... ... ... | 1 |
| 3. | Obedience ... ... ... | 5 |
| 4. | Fellowfeeling ... ... ... | 8 |
| 5. | Guilelessness ... ... | 10 |
| 6. | Truth ... ... ... | 13 |
| 7. | Benevolence ... ... ... | 17 |
| 8. | Gratefulness ... ... ... | 21 |
| 9. | Sweet words ... ... ... | 25 |
| 10. | Support your parents ... ... | 28 |
| 11. | The duties of man ... ... | 32 |
| 12. | Conscience ... ... ... | 35 |
| 13. | Health ... ... ... | 37 |
| 14. | Nourishment of the body ... ... | 40 |
| 15. | Poverty ... ... ... | 43 |
| 16. | Wealth ... ... ... | 48 |
| 17. | Brotherhood ... ... ... | 53 |
| 18. | Patience ... ... ... | 56 |
| 19. | Knowledge ... ... ... | 58 |
| 20. | Friendship ... ... ... | 61 |
| 21. | Travelling ... ... ... | 66 |
| 22. | Economy ... ... ... | 68 |
| 23. | Worldy knowledge ... ... | 70 |
| 24. | Music ... ... ... | 72 |
| 25. | Virtue ... ... ... | 74 |
| 26. | Prevention is better than cure ... | 77 |
| 27. | Day & night ... ... ... | 82 |
| 28. | Learning ... ... ... | 86 |
| 29. | Silk ... ... ... | 90 |
| 30. | Anger ... ... ... | 95 |
| 31. | Metals ... ... ... | 97 |
| 32. | Female Education ... ... | 104 |
| 33. | War and Peace ... ... | 107 |

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | வியாசம் எழுதும் முறை. ... ... | v |
| 2. | நல்லொழுக்கம். ... ... ... | 1 |
| 3. | கீழ்ப்படிதல். ... ... ... | 5 |
| 4. | ஜீவகாருண்யம். ... ... ... | 8 |
| 5. | திருடா திருத்தல். ... ... ... | 10 |
| 6. | உண்மை கூறுதல். ... ... ... | 13 |
| 7. | பரோபகாரம். ... ... ... | 17 |
| 8. | நன்றி மறவாமை. ... ... ... | 21 |
| 9. | இனிய மொழி கூறல். ... ... ... | 25 |
| 10. | தந்தை தாய்ப் பேணுதல். ... ... | 28 |
| 11. | மனிதனது கடமை. ... ... ... | 32 |
| 12. | மனச்சாட்சி. ... ... ... | 35 |
| 13. | சரீரசுகம். ... ... ... | 37 |
| 14. | சரீரசுகபோஷணை. ... ... ... | 40 |
| 15. | வறுமை. ... ... ... | 43 |
| 16. | செல்வம். ... ... ... | 48 |
| 17. | சகோதரத்வம். ... ... ... | 53 |
| 18. | பொறுமை. ... ... ... | 56 |
| 19. | அறிவு. ... ... ... | 58 |
| 20. | நற்சினேகம். ... ... ... | 61 |
| 21. | தேசசஞ்சாரம். ... ... ... | 66 |
| 22. | செட்டு. ... ... ... | 68 |
| 23. | உலகஞானம். ... ... ... | 70 |
| 24. | சங்கீதம். ... ... ... | 72 |
| 25 | அறம். ... ... ... | 74 |
| 26. | நோய்க்கிடங்கொடேல். ... ... | 77 |
| 27. | பகலும் இரவும். ... ... ... | 82 |
| 28. | கல்வி. ... ... ... | 86 |
| 29. | பட்டு. ... ... ... | 90 |
| 30. | கோபம். ... ... ... | 95 |
| 31. | லோகங்கள். ... ... ... | 97 |
| 32. | பெண் கல்வி. ... ... ... | 104 |
| 33. | சண்டையும் சமாதானமும். ... ... | 107 |

# வியாசம் எழுதும் முறை.

யாதேனும் ஓர் விஷயத்தைப் பற்றியாவது, பொருளைக்குறித் தாவது விரிவாய் எடுத்துக் கூறும் கிரந்தத்திற்கு "வியாசம்" எனப் பெயர். ஒரு வியாசத்தின் அங்கம் பல பகுதிகளாகப் (Paragraph) பிரிபடும். முதலில் எடுத்துக் கொண்ட விஷயத்தைக்குறித்துச் சுரு க்கமாகச் சொல்லுதல் தகுதி. பின் வரும் பகுதிகளில் விஷயத்திற் குச் சம்மந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவு (Parts) களையும் பற்றி விஸ் தாரமாய்ச் சொல்லுதல் நலம். பின் வரும் ஒவ்வொரு பகுதியும் முத லிற் கூறப்பட்டதின் கருத்தைத் தொடர்ந்து வரவேண்டும். முடி வில் வியாசத்திற் செய்த ஆராய்ச்சியின் கருத்தைக் கூறுதல் நன்று.

ஒரு பொருளைச் சிறு வாக்கியங்கள் பலவற்றால் தெரிவிக்க முய லுவதே வியாசம் எழுதக் கற்கும் எளிதான மார்க்கம். உதாரண மாக, ஒட்டகத்தைப் பற்றி ஒரு வியாசம் எழுதச் சொன்னால், பின் வருமாறு பிரித்து ஒவ்வொன்றின் கீழும் சிற்சில வாக்கியங்கள் எழு தலாம். நாலுகாற்பிராணி; நிறம்; நீண்டகழுத்து; வளைந்தமுதுகு; அகன்ற பாதம்; கோணலான கால்கள்; தோற்றம்; குணங்கள்; பிர யோஜனங்கள்; அசைபோடும் பிராணி; பளுவான சாமான்களை எளி திற் சுமக்கும்; வனாந்திரத்தில் தண்ணீர் குடியாமல் வெகு நாட்கள் பிரயாணம் செய்யும்; ஆகவே, வனாந்திரக் கப்பலென்று அதற்குப் பெயர்; சிருஷ்டி கர்த்தாவின் சக்தியைக் குறித்து வியந்து சந்தோஷி க்கலாம். ஒட்டகம் விசேஷமாகக் காணப்படும் தேசங்களைக் கூற லாம். அராபிதேசத்தார் அவற்றைப் பாதுகாக்கும் அருமையைச் செப்பலாம். ஐரோப்பா முதலிய இடங்களுக்கு அவற்றைக் கண்கா க்ஷிக்காகக் கொண்டு போவதையும் குறிக்கலாம். இவ்விதமாகவே யெழுதி முடித்தால் முழுவதும் ஒரு சிறு வியாசரூபமாய் விளங்கும்.

ஒவ்வொரு பகுதி ( Para ) யிலும் முக்கியமான ஒரு விஷயத்தைப் பற்றியே சொல்லவேண்டும். பின் வரும் ஒவ்வொரு வாக்கியமும் முன் சென்ற வாக்கியத்தின் தொடர்ச்சியாகவே யிருக்கவேண்டும். உதாரணமாய்:—நிரம்பிய ஓர் பொருளுக்கும் அதன் பகுதிக்கும் எவ்வளவு வித்தியாசமுளதோ, அவ்வளவே ஒரு தேசத்திற்கும் மாகாணத்திற்குமுள்ள வித்தியாசத்தினளவு. ஒரு தேசத்தில் அநேக மாகாணங்கள் இருக்கின்றன. ஆனதுபற்றி ஒருமாகாணமானது ஒரு தேசத்தினுட்பிரிவு. இந்தியாவானது ஒரு தேசம். சென்னையானது ஓர் மாகாணம். ஆனால் சென்னையைத்தவிர்த்து இன்னமும் அநேக மாகாணங்கள் இந்தியாவில் இருக்கின்றன. ஒன்றையொன்றடுத்ததாயும் ஒரே அரசாக்ஷிக்குக் கீழ்ப்பட்டதாயுமுள்ள அநேக மாகாணங்கள் பொருந்தியது ஒரு தேசம், என்றபடி.

சித்திரம் வரைவோன் ஒருவன் எவ்வாறு தான் எழுதப்புகும் உருவத்தின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் மனதில் நினைத்துப் பிறகு முழு உருவத்தையும் கடிதத்தில் வரைகின்றனோ அவ்விதமே, வியாசம் எழுத ஆரம்பிப்போர் ஒவ்வொருவரும் தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றி முதலில் ஆழ்ந்தாலோசனை செய்து பலபிரிவுகளையும் நன்றாய் மனதின்கண் பதியவைத்து, எளிய நடையிலும் எழுத முயலுவாரேயாயின், அவ்வியாசம் சிறந்ததாகவே யிருக்கும். இனிமையான எளிய நடையில் எழுதுவதே வியாசத்திற்கழகு. "சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல்" வியாசம் எழுதுபவரின் முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். அனாவசியமான விஷயங்களையெல்லாம் எழுதுவதினின்றும் விலக்கவேண்டும். உதாரணமாய்: 'இச்சங்கதியைக் கேட்டவுடன் அவன் தானிருந்த நாற்காலியை விட்டெழுந்து, கையிலிருந்த புஸ்தகங்களைக் கீழேபோட்டுவிட்டு, அவசரத்துடன் போஜனத்தைச் செய்து முடித்துக்கொண்டு, வண்டியொன்றைத் திட்டம் செய்து வரச்சொல்லி, ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு கல்கத்தாவிற்குப்போக ஒரு சீட்டு ( Ticket ) வாங்கிக்கொண்டு 6-மணி வண்டியில் புறப்பட்டான்' என்று சொல்லுவதைப்பார்க்கி

லும், 'அவன் இச்சங்கதியைக் கேள்விப்பட்டவுடன் 6-மணி வண்டியில் கல்கத்தாவிற்குப் பிரயாணமானன்' என்று சொல்லுவது நன்று. தவிர, வியாசத்திற் சொல்லப்படும் ஒவ்வொரு விஷயமும் படிப்பவர் மனதிலும் கேட்பவர் மனதிலும் ஆழ்ந்துவேரூன்றிப் பதியும்படி வற்புறுத்திக் கூறுதல் வேண்டும்; மேலும் வாக்கியங் களெல்லாம், ஓர்வித அழகுடன் கோர்வையாய் அமையப்பெறுதல வசியம். முழுமையும் சிற்சிறு அல்லது நீண்ட வாக்கியங்களாகவே யிருந்தால் படிப்பவர் மனம் சடுதியில் சலிப்புறும். ஆனதுபற்றி இரண்டும் மிதமாய்க் கலந்து அழகாய் அமைவதே வியாசத்திற்கணி.

ஒவ்வொரு விஷயத்தையும் தகுதியான விடங்களில் சமயோசித மாய்க் கூறவேண்டும். ஒரு தொழிற்சாலைக்குச் சென்றதைப் பற்றி ஒரு வியாசம் எழுத ஆரம்பித்தால், அநேக பிரிவுகளின் கீழ் எழுத லாம்: (1) தொழிற்சாலையின் கட்டிடத்தை வருணிக்கலாம் (2) அங்கு உபயோகித்து வரும் யந்திரங்களைப் பற்றி யெழுதலாம் (3) அங்கு நடை பெற்றுவரும் தொழிலைப் பற்றிச் சொல்லலாம் (4) அங்கு வேலை செய்து வரும் மனிதர்கள் படும் துயரத்தையும், அதனாலவர்க் குறும் பிணிகளையும் பற்றி யெழுதலாம். ஒரு மாதத்தில் அவர்களு க்கு எவ்வளவு காலம் விடுமுறை நாளென்பதையும், தினந்தோறும் அவர்களுக்கு சாப்பாட்டினிமித்தமாய் விடும் இடை நேரத்தைக் குறி த்தும் நான்காவது பிரிவின் கீழ் விஸ்தாரமாய் ஆராய்தல் தகுதி. மற்ற மூன்றின் கீழ்ச் சொல்லுதல் இடம் பிறழ்வாகும்.

சாதாரணமாக, வியாசங்களை மூவகையாகப் பிரிக்கலாம்:—

## (*a*) கதை நடையானவை (Narrative).

இதுதான் மூன்று வகுப்பிலும் எளிதானது. ஒருவன் தான் படித்த அல்லது கேள்விப்பட்ட கதையையாவது சரித்திரத்தையா வது வசனரூபமாய் எழுதுவது இவ்வகுப்பின்பாற்படும். உதாரண மாக "ஓர் கிழவனும் அவனது மூன்று குமாரர்களும்" என்ற கதை

யைப்பற்றி எழுதச் சொன்னால் கீழ்வரும் விஷயங்களைக் குறித்து சிற்சில வாக்கியங்கள் எழுதலாம். கிழவனது அந்திகாலம்; மூன்று புத்திரர்களையும் வரவழைத்தான்; சிறு கழிகளைக் கட்டாகக்கட்டி, ஒவ்வொருவரையும் தனித்தனியே அதை முறிக்கச்சொன்னான். ஒருவனாலும் சாத்தியப் படவில்லை. பிறகு கட்டைப்பிரித்து ஒவ்வொரு கழியையும் தனித்தனியாக முறிக்கச் சொன்னான். அவர்கள் அதை எளிதில் முடித்தார்கள். உடனே தகப்பனாகிய கிழவன் தன் புத்திரர்களைப் பார்த்து "நீங்கள் மூவரும் ஐக்கியமாயிருப்பீர்களேயாகில் பலமுற்று வாழ்வீர்கள்; இல்லையெனில் நிலைகுலைவீர்கள்" என்று புத்தி சொன்னான்—என்றபடி.

## (b) வருணனையிற்சேர்ந்தவை (Descriptive).

தான் பார்த்த அல்லது கேள்விப்பட்ட ஒரு இயற்கை அல்லது செயற்கை அழகைப் பற்றி வருணிப்பது இவ்வகுப்பின்பாற்படும். எடுத்துக் கொண்ட பொருள் அல்லது காக்ஷியைத் தான் கண்ணெதிர் நின்று பார்ப்பதுபோல மனதில் எண்ணி பிறகு எழுத முயன்றாலன்றி இவ்வகுப்பிற் கூறும் வியாசம் நன்கமையாது. உதாரணமாக:

அதிகாலையிலெழுந்து கடற்கரைமோரமாய்ச் சென்றால் வெகு நேர்த்தியாயிருக்கும். இடைவிடாது ஆரவாரித்துக் கொண்டிருக்கும் அவ்வலைகளின் ஓசையும், இளந்தென்றலின் இனிமையும், கதிரவன் கம்பீரமாய்த்தனது கிரணங்களை உலகெங்கும் பரப்பி பசும்பொன்மேனியனாய் உதயமாவதும், காண்போர் மனதைக் களிப்புறச்செய்யுமென்பதற்குச் சந்தேகமுமுண்டோ! அவ்வாறு வானில் சூரியன் உதிக்குங்காலையில் இராப்பொழுதும், இரவிற் சொரியும் பனியும் நீங்கும்; உலகத்தாரது மனமும், கண்களும் மலர்ச்சி பெறும்; எண்திசைகளும் பூமியும் பிரகாசமடையும்; தடாகங்களும் சோலைகளும் பொலிவுற்று ரமணீயமாய் விளங்கும்; பறவைகளும், விலங்குகளும் ஆரவாரம் செய்யும்; மங்களகரமான முரசம், சங்கம் முதலிய வாத்தியங்கள் முழங்கும்—என்றபடி.

(c) வியாக்கியானத்திற் சேர்ந்தவை (Expository)

அநேகமாய் இவ்வகுப்பின்கண் வரும் விஷயங்கள் குணப்பெயராயும், பண்புப்பெயராயும் (Abstract Noun) இருப்பதுபற்றி, மற்றிருவகுப்பினையும் விட இங்கு கூறும் விஷயங்கள் வியாசம் எழுதச் சற்றுகடிமானவையே. யோஜனை செய்யும் திறமையும் காரண சக்தியும் மனதின்கண் அமைதல் வேண்டும். "பெண்கல்வி", "நல்லொழுக்கம்", "உண்மை பேசுதல்", என்ற விஷயங்களைப்பற்றி வியாசம் யெழுதச் சொன்னால், அவற்றைப் பல அங்கங்களாகப் பிரித்து, நன்றாய் ஆலோசித்து, ஒவ்வொன்றைப் பற்றியும் சிற்சில வாக்கியங்கள்எழுத முயற்சிசெய்தல் நன்று. உதாரணமாக:—

பெண்கல்வியை எடுத்துக் கொண்டால் பின்வருமாறு பிரித்து எழுதலாம். மனிதருக்கும் மற்றுமுள்ள ஜீவராசிகளுக்குமுள்ள வித்தியாசம், (2) கல்வி கற்பது மனிதருக்கே சாத்தியமானது; ஆகவே அவருள் இருபாலரும் ஒத்த கல்வித் திறமுடையவர். (3) பெண்கல்வியின் சரித்திரம் முற்கால நிலைமையும் தற்கால ஸ்திதியும் (4) பெண்கள் கற்கவேண்டிய விஷயங்கள் பல: கணிதம், சுகவழி, சரீர சாஸ்திரம், மதவிஷயமான நூல்கள் முதலியன; (5) இராஜாங்க விஷயங்களில் பெண்கள் பிரவேசிப்பதால் விளையும் பயன்கள். கற்றறிந்த தாய்மார்கள் புத்திபுகட்டுவதால் புத்திரர்கள் பெறும்பேறு. பிறகு முடிவில், பெண்கல்வியால் உலகத்தாரடையும் பயன்களையும், அஃதில்லாவிட்டால் அவர்க்குறும் நஷ்டத்தையும் எடுத்துச்சொல்லி, இனிய நடையில் எழுதி முடித்தால், அவ்வியாசம் படிப்பதற்கு வெகு நேர்த்தியாகவே விளங்கும்.

இனி வியாசம் எழுதுபவர் ஒவ்வொருவரும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் சிலவற்றை இங்கு கூறுவோம். வியாசம் எழுத ஆரம்பிப்பதற்கு முன், நியமித்த விஷயம் அல்லது பொருளைப்பற்றி நன்கு யோஜித்து குறிப்புகள் (abstract) எழுதிக்கொள்

ளுதல்வேண்டும். பிறகு அவற்றை விவரித்து எழுதல் நன்று. வியாசம் எழுதி முடிந்தபின் பலமுறை அதைத்திரும்பப்படிப்பதவசியம். அவ்வாறு செய்வதால் அநேக பிழைகளைத் திருத்தலாம். நமது மாணவரில் பெரும்பாலர், இதைச் செய்ய சோம்புகிறார்கள். அது முற்றிலும் தவறுதலான காரியம். சமயோசிதமாக, சிற்சில பழமொழிகளையும் வாக்கியங்களையும் இடையிடையே எடுத்துக் கூறுவதால், வியாசம் படிப்பதற்கழகாயிருக்கும். கல்வியைப் பற்றி எழுதும் பொழுது "இளமையிற்கல்" "எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்" "கற்றவர்க்கழகு கசடறமொழிதல்" என்பவற்றை எடுத்துரைக்கலாம். செல்வத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்பதையும் "உடா அது முண்ணாதுந் தம்முடம்பு செற்றும்" என்ற பாட்டையும் எழுதலாம். வெளியே செல்லும் பொழுது ஒவ்வொரு காக்ஷியையும், உலக நடையையுப் பொருளையும், நன்றாக உற்றுப்பார்க்கும் குணத்தையும் மேன்மேலும் விருத்தி செய்யவேண்டும்.

உபாத்தியாயர்கள் வாரத்தில் இருமுறையாவது தங்கள் மாணாக்கர்களை குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி சிறுவியாசங்கள் எழுதிவரச் சொல்லி, அவற்றைச் சரிவரத் திருத்தி, அவ்வித திருத்தங்கள் செய்ததற்குக் காரணங்களையும் கற்பித்து வருவார்களேயாகில், கூடிய சீக்கிரத்தில் அச்சிறுவர்கள் வியாசம் எழுதுவதில் மிகவும் தேர்ச்சி பெற்று விளங்குவார்கள்.

# வியாஸப்ரகாசிகை.

—————(0)—————

## நல்லொழுக்கம்.

"ஒழுக்க முடைமை குடிமை யிழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

ஒழுக்கம் உடைமை—நல் ஒழுக்கத்தை உடையவராயிருத்தலே, குடிமை—ஒருவருக்கு உயர்ந்த குலத்தில் பிறந்ததாகும்; இழுக்கம்—(அதில் நின்று) தவறிநடப்பதே, இழிந்தபிறப்பு ஆய்விடும்—தாழ்ந்த குலத்தில் பிறந்ததாகும். ஆதலால் ஒருவனுக்கு உயர்வுந் தாழ்வும் தான் பிறந்த குலத்தினுலுண்டாவதில்லை. பின்னர் எதனுல் உண்டாவது என்றுல், தன்னுடைய நடக்கையினுலே தான் உண்டாகும். ஒழுக்கம் என்றுல் நடக்கை என்று அர்த்தம். இது வடமொழியில் ஆசாரமென்று கூறப்படும். இதனை பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்று கூறப்படும் நாலு ஜாதியாரும், தங்கள் தங்கள் வருணத்துக்குச் செய்யும்படி நூல்களில் கூறியிருக்கும் விதிகளின்படி தவருமல் நடப்பதும், விலக்கப்படவேண்டுமென்று கூறியவைகளை ஒழித்து நடப்பதுமாம் என்று மேற்குறித்த செய்யுள் உரையாசிரியர் கூறினுர். அவ்வவ்வருணத்துக்குச் சிறப்பாகக் கூறப்பட்டவைகளை அவரவர் வருணுசார விதிகளில் கண்டு தெரிந்துகொள்ளக்கூடும். ஆதலால் அதை ஒழித்து எல்லாருக்கும் பொதுவானதும், சிறுவர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியதுமானவைகளில் சிலவற்றை இங்கே எழுதுவோம். ஒழுக்கம் என்பது நல் ஒழுக்கம், தீய ஒழுக்கம் என்று இரண்டு வகைப்படும். நாம்

நல்ல ஒழுக்கத்தைக் கைக்கொண்டு தீய ஒழுக்கத்தை விலக்கி நடக்க வேண்டும். நல்ல ஒழுக்கத்தைக் கைக்கொண்டு நடந்தால் அவன் ஈன குலத்தில் பிறந்தவனானாலும் அவனை உயர்ந்த குலத்தில் பிறந்தவனென்று அறிவுள்ளோர் எண்ணுவார்கள். அவனை எல்லாரும் வெகு பெருமையாக மதிப்பார்கள். அவனுக்கு நல்ல கீர்த்தியுண்டு. இம்மையிலும் மறுமையிலும் சுகவாழ்வு கிடைக்கும். தெய்வாநுக்கிரகமுண்டாகும். அவனுக்குக் கவலை யென்பதேயில்லை. தீய ஒழுக்கத்தைக்கைக்கொண்டால் ஈனகுலத்தில் பிறந்தவனென்று எல்லாராலும் இகழப்படுவதும் அல்லாமல், இம்மை மறுமை யிரண்டிலும் துக்கமுண்டாவது மன்றி அபகீர்த்தியும் தீராதகவலையும் அடைந்து வருத்தமடைவான். ஆகையால் சிறுவரும் சிறுமிபரும் இளமையிலேயே நல்ல ஒழுக்கத்தில் பழகி, தீய ஒழுக்கங்களை ஒழிக்கவேண்டும். அப்படியானால் நல்ல ஒழுக்கம் இது வென்றும் தீய ஒழுக்கம் இது வென்றும் எப்படித் தெரிந்து கொள்வது என்றால் சொல்லுவோம்.

தெய்வம் உண்டு என்கிறஆஸ்திகபுத்தி, தந்தை தாயரைப்பேணுதல், பரோபகார சிந்தை, பிறர் செய்த நன்றியை மறவாதிருத்தல், ஜீவகாருண்யம், இனிய மொழிகூறல், எல்லாரிடத்திலும் வணக்கமாயிருத்தல், அறிவுள்ளவரோடு கூடுதல், உண்மைபேசுதல், திருடாதிருத்தல், கபடின்றியிருத்தல், மனச்சாக்ஷிக்குவிரோதமில்லாமல் நடத்தல் ஆகிய இவை முதலிய பல அங்கங்களோடு கூடியிருப்பதே நல் ஒழுக்கமாம். நல்லொழுக்கத்திற்கு இன்னும் பல அங்கங்களுள. அவையெல்லாம் மேற்குறித்தவைகளுள் அடங்கியிருக்கும். ஆதலால் சிறியவர்கள் இந்தக் குணங்களில் பழகவேண்டும். இவற்றுக்குமாறான நாஸ்திகத்தன்மை, தந்தைதாயாரைப் பேணாமை, பிறருக்குக் கெடுதி செய்தல், வஞ்சகமா யிருத்தல், மனச்சாட்சிக்கு விரோதமாய் நடத்தல் இவைபோல்வனவெல்லாம் தீயஒழுக்கத்தின் அங்கங்களாம். இவை துன்பந் தருவன வாதலால் சிறியவர்கள் இவைகளைப்பற்றற ஒழித்துவிடவேண்டும். இளம் பருவத்தில் எந்த விஷயத்தில் புத்தி

பழகுகிறதோ அதிலேயே மனம் எப்பொழுதும் நாட்டமாயிருக்கும். இதனாலேதான் ஔவையார் "இளமையிற்கல்" என்று கூறினர். கல்வி கற்பதெல்லாம் நல்லறிவு பெற்று நல்லொழுக்கம் இதுவென்று அறிந்து அதில் ஒழுகி இம்மை மறுமைப் பயனை அடைவதற்கேயாம். ஆதலால் இளம் பிள்ளைகள் கல்வி கற்கும் பொழுதே நல்லொழுக்கத்தில் பழகவேண்டும். அப்படியில்லாமல் வயது சென்றபின் அவைகளில் பழகமுடியாது. ஏனென்றால் பெரியவர்களானபோது புத்தியும் ஒருவாறு முதிர்ச்சியடைந்து விடுதலால், அது தான்பிடித்ததையே பிடிக்கும். வேறொன்றிலும் செல்லுவதருமை. அப்பொழுது நல்லொழுக்கத்தில் மனதைப்பழக்குவது மிகவும்கடினம். தீய ஒழுக்கங்களோ வெகு எளிதிற் பழகத் தக்கவை. ஏனென்றால், மனிதருள் நல்லொழுக்க முள்ளவர் மிகச்சிலரும் தீய ஒழுக்கமுள்ளவரே பெரும்பாலருமாயிருத்தலால் என்றறிக.

தெய்வ முண்டென்னும் உண்மையான நம்பிக்கையுள்ளவன் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்வானேயன்றித் தீய ஒழுக்கங்களைக் கருதான். அவற்றுக்கு அஞ்சுவான். நல்லொழுக்கமுள்ளவனுக்கே தெய்வாநுக்கிரகமுண்டாகும் என்றும், தீயவொழுக்க முள்ளவனுக்குத் தெய்வ கிருபை கிடையாதென்றும் தேவன் அருளியதாகக்கருதப்படும் வேத முதலாகிய நூல்களும், அவற்றை அறிந்து அதன்படி நடக்கும் ஆஸ்திகப்பெரியோரும்கூறுதலாலேயாம். தெய்வமுண்டென்று ஆஸ்திகரும் இல்லையென்று நாஸ்திகரும் சொல்லுகிறார்கள். இவற்றுள் எதை மெய்யென்று கொள்வது எதைப்பொய்யென்று தள்ளுவது என்றால், தெய்வமுண்டு என்னும் ஆஸ்திகர் மொழியையே மெய்யென்று கொண்டு அதன்படி தெய்வவழிபாடுசெய்து நன்னெறியில் ஒழுகுவதே நன்மை தரத்தக்கதென்று தோன்றுகிறது. தெய்வம் உண்டு என்பதற்கு வேத முதலிய நூல்களும், அவைகளை யுணர்ந்து அதன்படி நடக்கும் பெரியோர் வாய்மொழியுமேயன்றி வேறுபிரத்தியக்ஷப் பிரமாணங்கள் காண்பது அருமை. தெய்வமில்லை என்பதற்கும் பதார்த்தகுணசாஸ்திரங்களும், அவை

களை யுணர்ந்த புத்திமான்கள் வாய்மொழியுமே யன்றி வேறு பிரத்தியக்ஷமில்லை. இரண்டும் ஒரே மாதிரியாகக் காணப்படும். ஆனாலும் தெய்வம் உண்டென்று நம்பித் தேவனை ஆராதித்து நல்லவழியில் நடப்பவனுக்கு நாஸ்திகர் கொள்கைப்படி தேவனில்லாமற் போனாலும், மோட்சமென்பதில்லாமற் போவதே யல்லாமல் வேறு தண்டனை கிடையாது. தெய்வமில்லையென்று நம்பித் தீயவழியில் நடப்பவனுக்கு, ஆஸ்திகர்கொள்கைப்படி தெய்வமிருந்துவிட்டால் மோட்சமில்லாமற்போவதுந்தவிர நரகதண்டனை முதலிய துன்பங்களுசம் உண்டாகுமாதலால், ஆஸ்திக புத்தியுடையவர்களாயிருப்பதே நன்மையாகுமென்று தோன்றுகிறது. இது யாவரும் அறியக்கூடிய விஷயமாகையால், ஆஸ்திகர்கொள்கையை அநுசரிப்பதே மனிதர்களுக்குச் சிறந்ததென்று கொள்க. ஆகையால் மறுமையில் நரகதண்டனை முதலிய துன்பங்களொழிந்து சதானந்தம் அநுபவிக்கக்கூடியதென்று கருதப்படுவதாகிய ஆஸ்திக மார்க்கத்திலேயே சிறுவர்களைப்பழக்கவேண்டும். மனிதருள் பெரும்பாலர் இராஜதண்டனைக்குப் பயந்து நல்லவழியில் நடப்பதைக் காண்கிறோம். மறுமையில் தெய்வதண்டனையுண்டென்னும் பயமிருந்தாலல்லாமல் பாபஞ்செய்ய அஞ்சமாட்டார்கள். அஞ்சாமல் நடந்தால் முன்சொன்னபடி தெய்வமிருந்துவிட்டால் நரகதண்டனை யுண்டாகுமென்று அறிக. இனித் தெய்வவழிபாடு ஒவ்வொருதேசத்துக்கும் ஒவ்வொரு ஜாதிக்கும் வேறுபட்டிருக்கு மாகையால், பெற்றோர்கள் தங்கள் தங்கள் தேசாசாரத்துக்கும் குலாசாரத்துக்கும் மாறுபடாதபடி பிள்ளைகளைத் தெய்வபக்தியில் பழக்குவதே உசிதமாகும். இதற்கு மாறாகப் பழகும்படி விடுவது நன்மையல்ல; ஏனென்றால், முன் சொன்னபடி தெய்வ இலட்சணம், மோட்ச இலட்சணம், ஜீவ இலட்சணம் ஆகிய இவைகளில் மாறுபட்டுக் கூறும் மதங்கள் அநந்தமாகக்காணப்படுகின்றன. அவைகளுள் உண்மை யிதுவென்றும், தவறு இதுவென்றும் கண்டுகொள்வது எவருக்கும் சிறிது கஷ்டந்தான். இவைகளை ஆராயப்புகுந்தால் பிரயாசமும் புத்திமயக்கமும் உண்டாகுமேயன்றி முடிவுபெறாது. சிறுவர்

கள் தங்கள் தங்கள் சுய புத்தியைக்கொண்டு கண்டுகொள்வதும் முடியாத விஷயமாதலால், பெற்ரோர் தங்கள் முன்னோர்கள் அநுஷ்டித்து வந்த குலாசாரப்படியும் தேசாசாரப்படியும் சிறுவர்களுக்குத் தெய்வ பக்தியைப் புகட்டி வழிபடுத்துவதுதான் சிலாக்கியமுடையது. இவ்வாறு இளமையில் பழக்கிவிட்டால், அது சிறுவர் மனதில் வேரூன்றி முதுமையில் நற்பயன் தரும்.

## கீழ்ப்படிதல்.

---

கீழ்ப்படிதல் என்பது வணங்கிநடத்தல். இது மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் அனுசரித்துவரவேண்டிய குணங்களில் இன்றியமையாததொன்று. அதினும் நன்மை தீமையறியாத சிறுவர்கள் மிகவும் அவசியமாய்க் கொள்ளத்தக்கது. இக்குண மில்லாவிடத்து உலகவாழ்விற் குரிய சாதகங்கள் பெறுவது கஷ்டம். எவன் கர்வத்தை யடைகிருனே அவனிடத்தில் இந்தக் கீழ்ப்படிதல் என்னும் உத்தமகுணம் பிரகாசியாது. கர்வமானது மானபங்கத்தை யுண்டாக்கும். கீழ்ப்படிதல் உலகத்தில் பெருங் கீர்த்தியைத்தரும். பரலோகத்திலும் மேன்மை யளிக்கும். கர்வங்கொண்டவன் நாசமடைவான் என்பதற்கு ஒரு சிறு கதை சொல்வதுண்டு. ஒரு ஆற்றங்கரையில் ஒரு வேம்பும் அதன் அருகே சிறுநாணற் கொத்தொன்று மிருந்தன. வேம்பானது நாணற்கொத்தைப் பார்த்து "நீ இப்படி மெலிந்திருக்கிருயே, ஆற்றில் பெருவெள்ளம் வருமானுல் உன்னை அடித்துக்கொண்டு போய்விடும், நீ என்ன செய்வாய், என்னைப்போல் பலமாய் நீ நிமிர்ந்து நின்றாலல்லவா இப்படிப்பட்ட ஆபத்துக்குத் தப்பமுடியும்" என்று சொல்லிற்று. அதற்கு நாணலானது "சரி ஜலம் வரும்போது பார்க்கலாம் யார் பலவானென்பதை" என்று பதிலளித்துச் சும்மாவிருந்து விட்டது. பின், சிலநாளைக்கெல்லாம் ஆற்றில் வெள்ளம் பெருகிற்று. அப்பொழுது வேம்பானது தன் கர்வத்தால் தலைநிமிர்ந்து

ஜலத்தை எதிர்த்து நின்றது. நாணல் ஜலத்துக்குத் தலைகுனிந்து கீழ்ப்படிந்து தன்னை வணைந்து கொடுத்துப் பின் சிறிது நேரத்திற் கெல்லாம் ஆற்றின் வெள்ளம் வடிந்ததும் நிமிர்ந்து நின்றது. கர்வங் கொண்டு நின்ற வேம்பை வெள்ளமானது வேரோடு பறித்துக் கீழே தள்ளி அடித்துக் கொண்டு போய் விட்டது. நாணலுக்கு க்ஷேமமும் கர்வமடைந்து நின்ற வேம்புக்கு அழிவும் உண்டாயிற்று. இது போல் கீழ்ப்படிதல் என்னும் குணமுள்ளவனே சுகம் பெறுவான்.

நிற்க, யாருக்குக்கீழ்ப்படியவேண்டுமென்று கவனிப்போம். நம்மைச் சிருஷ்டித்த ஸர்வேசுவரன், பத்துமாதம் சுமந்திருந்து கஷ்டங்களைச் சகித்திருந்து பெற்று வளர்த்த தாய், ஆதரித்த தந்தை, கல்வி போதித்த ஆசான், உலகம் புரக்கும் மன்னன் ஆகிய இவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது அவசியமாகும்.

ஸர்வேசுவரனது திருவருளாலேயே சகல கோடி ஜீவராசிகளும் சுகம் பெறவேண்டும். அந்தப் பரமகாருண்ணிய மூர்த்தியே நம்மை நடத்துகிறவன். அவன் கட்டளையே நிறைவேறும். அவனன்றி அணுவும் அசையாது. ஆகைபால் அந்த புவன்கர்த்தாவுக்குக் கீழ்ப் படிந்து நடத்தல் மிகவும் அவசியம்.

**2-பெற்றோர்**— இவர்களுக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிதல் அவசியமாகும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று நமது ஔவைப்பிராட்டி திருவாய்மலர்ந் தருளியவாறு இவர்களே நமக்கு முதல்தெய்வம். தாயாரானவள் உதரத்தில் வந்தநாள் முதல் சிறிதும் வெறுப்பின்றிக் கருணையோடு நம்மைப் பாதுகாத்து வருகிறாள். பிதாவும் நம்ஜனனகால முதல் தன் ஆருயிராகப் பாவித்து வளர்த்துவந்து கல்வி பயிலும்படி செய்விக்கிறான். பிதாவுக்கு நம் மீது சிறிதும் வெறுப்புண்டாவதில்லை. இருவரிடத்திலும் கருணையே மிகுந்திருக்கிறது. லோகநாயகனுக்குக் கருணாகரன் என்று ஒரு பெயருண்டு. அவர் சகல கோடி ஜீவராசிகளிடத்துங் காட்டுங்கருணை நிமித்தமாகவே இப்பெயர் அவரிடம் பிரகாசிக்கின்றது. அந்தக்

கருணையானது பெற்றோர்களிடத்தும் விளங்குவதால் இவர்கள் தெய்வத்துக் கொப்பாவார்கள். ஆகையால் இவர்களுக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டும்.

3. கல்வியறிவூட்டும்ஆசான்— "கண்ணுடையரென்பர் கற்றோர்" என்பதற்கேற்ப, நமக்குக் கல்வி யறிவுண்டாக்குவதால், உலகத்தில் நாம் நல்வழி பற்றிச்செல்லக் கல்வியாகிய கண்ணைக்கொடுத்தவனுகிறுன் ஆசான். அக்கல்வியே நமக்கு நன்மை தீமையை விளக்குவது. நம்மை அக்ஞானமாகிய அந்தகாரத்தினின்றும் ஈடேற்றுவது. தந்தை நமக்குத் தேடிவைக்குஞ் செல்வத்தைக் காட்டிலும் கல்விப்பொருளே சிலாக்கியமானது. அது நம்மை விட்டு நீங்காது. பிறருக்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்துகொண்டேயிருக்கும். கள்வர் முதலியவர்களால் கவரப்படாதது. இப்பொய்யுலக உண்மையை விளக்கிப் பரம்பொருளின் பெருமையைத் தெரிவிப்பது. ஆகையால் இத்தகைய கல்வி யென்னும் அரும்பெருஞ் செல்வத்தை நமக்கூட்டும் ஆசானுக்குக் கீழ்ப்படிய வேண்டுவ தவசியமென்பதைச்சொல்லவும் வேண்டுமா ?

4. அரசன்—அரசனுக்குக் கீழ்ப்படிய வேண்டுவதவசியம். அவன் நம்மைப் பரிபாலிப்பவனுகையாலும் அரசனில்லாவிட்டால் குடிகளின் நிலைமை கெட்டுவிடுமாதலாலும் அவனுக்குக் கீழ்ப்படிதல் அவசியமாகும்.

இன்னும் பெரியோர், தமையன், கல்விமான் இவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

கீழ்ப்படிதல் என்னும் இந்த உத்தம குணமானது இளம் வயது முதற்கொண்டே பழக்கத்தில் இருந்து வரவேண்டும். அப்பொழுது தான் அகங்காரம் டம்பம் கர்வம் முதலிய இழிகுணங்கள் நம்மை விட்டு விலகி, இகபரசாதகம் பெறலாகுமென்றறிக.

# ஜீவகாருண்யம்.

ஜீவகாருண்யமென்பது ஜீவன்-காருண்யம் என்கிற இருசொற்களாலாய ஒருசொல். ஜீவன் என்பதற்கு ஆன்மா, உயிர் என்று கூறுவதுண்டு. காருண்ய மென்பது கிருபை, அருள், தயை, இரக்கம் என்று சொல்லப்படுவது. ஆகவே ஜீவகாருண்ய மென்பது ஜீவனிடத்துக்காட்டப்படும் இரக்கமென்று பொருள்படும். கொல்லாமை, வெகுளாமை, துன்பஞ்செய்யாமை முதலியவைகள் இந்த ஜீவகாருண்யத்துள் அடங்கும். உலகத்தில் பாபம் ஒருவனுக்குண்டாவது பலவழிகளிலாயினும் ஜீவஹிம்சையால் ஏற்படுவதையே ஆதி காரணமாகச் சொல்லவேண்டும். இதுபோல் ஒருவனுக்குப் புண்ணியம் பலவகையிற் கிடைக்கக் கூடியதாயினும் இந்த ஜீவகாருண்யத்தினால் ஏற்படுவதே சிலாக்கியம். ஏனெனில் இதனினும் சிறந்த அறம் ஒன்றில்லை. இது சர்வமதஸ்தர்களுக்கும் சம்மதமான அறம். இதனினும் சிறந்த அறம் ஒன்று உண்டென்று எந்நூற்களிலும் கண்டறியோம். மற்றுக் கேட்டுமறியோம்.

"அல்லல் அருளாள்வார்க்கில்லை வளி வழங்கு மல்லல் மாஞாலம் கரி" என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறியபடி ஜீவர்களிடத்திரக்கமாகிய அருள் உடையவர்களுக்கு இம்மையில் அதாவது இப்பூவுலகில் துன்பமென்பது இல்லையாம். அதற்குச்சாட்சி, இந்த உலகத்தில் இரக்கமுடைய பெரியோர்கள் துன்பமடையாதிருப்பதைப் பிரத்தியக்ஷத்தில் காண்பதேயாகும் எனக்கூறுவதாலுங் கண்டுணர்க. ஜீவகாருண்யம் என்கிற அருட்செல்வத்தையுடையவர்களுக்கு இம்மைப் பயனன்றி மறுமைப் பயனும் உண்டு என்பதை "அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை, யிருள் சேர்ந்த இன்னா உலகம் புகல்" என்ற செய்யுளால் ஆசிரியர் திருவள்ளுவர் கூறியுள்ளதையும் காண்க. ஒருவனிடத்து ஏனைய அறங்களெல்லாம் இருந்தும் இந்த ஜீவகாரு

ண்யமென்பது இல்லையாயின் அவ்வறங்களனைத்தும் பயனற்றதாய் விடும். இவ்வறமொன்றுமே மற்றைய அறங்களின் பயன்களை யளிக்கக்கூடியது. இந்தப் பேரறமாகிய ஜீவகாருண்யம் எவனிடத்து இல்லையோ அவனை மனிதனென மதிப்பது சிறிதுந்தகாது. அவனை மிருகத்திலும் கடையாகவே கொள்ளவேண்டும். ஜீவகாருண்ய முள்ளவன் ஒரு உயிரைத் தன் கையால் இம்சைசெய்யக் கருதான். பிறர் செய்யும் ஜீவஹிம்சையைக் கண்ணுற்காணவும் சகியான். காண்பானேயாகில், அவன் தேகம் நடுங்கும். அவன் தனக்குப்பிறரால் நேரிடும் செய்கைகளில் எவைகளைத்தான் துன்பமாகக் கருதுகிறனே அவைகளைத் தான் பிறஜீவனுக்குச் செய்ய அஞ்சுவான். ஒருவனே தன் மனது பிற உயிர்களைக்கோபிக்கவும், துன்புறுத்தவும் எண்ணுமாகில், உடனே அவன் தன் மனதைக் கண்டித்து, அதை அடக்கி, அக்கொடிய வழிகளிற் செல்லவொட்டாமற் றடுப்பான். இதனுல் அவனுக்குப் பேரும் புகழும் இகத்தில் பெருகுவதன்றிப் பரத்திலும் நன்மையுண்டாம். மனிதவகுப்பாருள் சிலர் மனிதரை யொழித்து மற்றவைகளை இம்சித்தலாலும் கொல்லுதலாலும் பாபமில்லை என்று கூறிக்கொன்று தின்கிறுர்கள். இது மனிதர்க்குமட்டுமே ஆத்மா உள்ளதென்றும் மற்றப்பிராணிகளுக்கு ஆத்மா இல்லை என்றும் கூறித்திரிபவர்களுடைய கொள்கையாம். எல்லாப் பிராணிகளிடத்திலும் ஆத்மாவுண்டு. ஆகையால், கொசுகு, மோட்டுப் பூச்சி முதலிய அற்ப ஜந்துக்களைக் கொல்லுதலும் பாவமாம். ஜீவன்களில் ஓரறிவுடைய ஜீவன்கள் மரம் செடி கொடிகளாகிய தாவரங்களேயாம். சங்கு, சிப்பி முதலியவை பரிசத்தோடு ரஸ உணர்ச்சியுமுள்ள ஈரறிவுயிர்களாம். எறும்பு கரையான் முதலியஅநந்தகோடி ஜீவன்கள் பரிஸம், ரசம் என்கிற இவ்விரண்டு உணர்ச்சியோடு வாசனையையும் அறியும் மூவறிவுயிர்களாம். வண்டு, ஈ முதலியவை அம்மூன்றினேடு சத்தத்தையுமறிகிற ஐயறிவுயிர்கள். இனித்தேவர் மக்கள் நரகர் முதலாயினேர் மேற் கூறப்பட்ட ஐயுணர்வை யன்றி மனதி அந்தக்கரணங்களுமுடைய ஆறறிவுடையாரெனப்படுவர். இவர்கள் இது நன்மை, இது தீமை என்பன

வாதி பேதங்களையறியுந் தன்மையுடையவராதலால், இவர்களுக்கே பரம்பொருளைத் தவம், யோகம் முதலியவைகளால் கண்டறியத்தக்க ஆற்றலுண்டு. இவர்கள் ஜீவஹிம்சை செய்து கொன்று தின்னத்தலைப் படுவார்களாயின், கண்ணுக்குத்தென்படும் பிராணிகளைப் பிடித்துத் தின்னும் புலி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களுக்கும் இவர்களுக்கும் பேதம் கூறுவதெங்ஙனம்? ஆகையால் ஜீவராசிகளுக்கெல்லாம் மேம்பட்டவர்களாகிய நாம் பிற ஜீவன்களைச்சிறிதும் ஹிம்சியாமலிருப்பதே இகபரமிரண்டிலும் நன்மைபயக்குமெனவறிந்து, நல்வழிச்சென்றுய்வோமாக.

# திருடாதிருத்தல்

திருடாதிருத்தல் என்றால், பிறருக்குரியதான ஒரு பொருளை அவர் அறியாமல் எடுத்துக்கொண்டு தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாதிருத்தல்; இதனைக் கள்ளாமை யென்பர். திருடுதல், தீமைகள் எல்லாவற்றுள்ளும் பெரிது. அந்தத் தொழிலையுடையானுக்கு எல்லாரும் பகையாவதுமன்றிக் கொடிய மரணபயமும் இராஜதண்டனையும், உலகநிந்தையும், மறுமையில் நரகதுன்பமும், ஜன்மந்தோறும் தீராத தரித்திரமும், தேவகோபமும் உண்டாம். இகபரமிரண்டிலும் துக்கமேயன்றிச் சுகமில்லை. நல்லோர், பெரியோர், சிநேகிதர் முன்னிலையிற் செல்ல மனம் நாணும். உற்றாரும் பெற்றாரும் மனைவி மக்களும் அவனை நம்பார்கள். அவனுடைய சொல்லுக்கு மதிப்பே கிடையாது. இத்தன்மை யுடையோன் உலகத்தி லுயிரோடிருந்தும் செத்தவனென்றே கருதப்படுவன். பிறரை வஞ்சித்து அவர் பொருளைக்கவர்ந்து கொள்ளுகிற கொடுஞ்செயலை எப்படி மறைத்தபோதிலும் ஒருகாலத்தில் வெளிப்படாமலிராது. வெளிப்பட்டேதீரும் அவ்வாறு வெளிப்படாமற் போனாலும் எல்லாம் வல்ல கடவுள் சந்நதியில் வெளிப்பட்டேயிருக்கும். அதுபற்றியே,

"வஞ்சித் தொழுகு மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
தெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவதறிவு" என்று கூறினர் பெரியோர்.

(இதன் பொருள்) பிறரை ஏமாற்றிப் பொருள் கவர்ந்து திரியும் அறிவில்லாத மூடர்களே! நீங்கள் எல்லாரையும் ஏமாற்றிவிட்டோமென்று மகிழ்ச்சியடையாதிருங்கள். அவ்வாறு நீங்கள் பிறரை ஏமாற்றிய கள்ளத்தொழிலை எங்கும் நிறைந்திருக்கிற ஏகநாயகனாகிய கடவுள் நன்றாயறிந்திருக்கிறாரென் றுணர்ந்து (அத்தொழிலுக்காக) சரீரம் நடுங்குகிறதே புத்திசாலித்தனமாம். என்றதனால் உலகத்தார் ஒருக்கால் அறியாமற்போனாலும் எல்லாம் வல்ல கடவுள் அறிவாரென்பது நிச்சயம். ஒருவன் திருட்டுத் தொழிலைச்செய்ய வேண்டுவதில்லை; திருடவேண்டுமென்று மனதில் நினைத்தாலும் போதும்; அதுகூடத் திருட்டுத் தொழிலேயாகி நரக துன்பத்தைக் கொடுக்கும்.

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கொள்வேமெனல்"

(இதன் பொருள்) பிறன் பொருளை—மற்றவனுக்குரியதான ஒரு பொருளை; கள்ளத்தால்—திருட்டுத் தொழிலினால்; கொள்வோம் எனல்—அபகரித்துக்கொள்வோமென்பதை; உள்ளத்தால் உள்ளலும் தீது ஏ—மனதினாலே நினைப்பதும் கெடுதியேயாம். மனதினால் திருட வேண்டுமென்று கருதுதல் களவுத்தொழிலாகாவிடினும், திருட்டுக்கு மூலமாய் நின்று மனதைக் களங்கப்படுத்துகிறதனால் அதுவும் திருட்டுப்போலவே பாவத்தை உண்டாக்கி நரகத்தைத்தரும். அந்த மனத்தின் தன்மையைக் கடவுள் அறிவாராதலால், அவர் அதில் விளங்கமாட்டார். விளங்காதொழியவே அவன் எவ்வகை நன்மையையும் அடையமாட்டானென்பது திண்ணமாம்.

"களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக்கெடும்"

(இ-ள்) களவினால்—திருட்டுத்தொழிலினால்; ஆகிய ஆக்கம்—உண்டான திரவியம்; அளவு இறந்து—எல்லையற்றதாய் (ஏராளமாய்) ஆவதுபோல—உண்டாகிறதுபோல (காணப்பட்டு); கெடும்—போம், வழிதெரியாமல் அழிந்துபோய்விடும் என்பது. திருட்டுத்தொழிலால் உண்டாகும் செல்வம் கரைகடந்ததாகத் தோன்றினாலும் அது ஏற்கனவேயுள்ள கைப்பொருளையுங்கூடக் கொண்டுபோய்விடும். எனவே மிகத்தரித்திரத்தையும், துன்பத்தையும் நிலைநிறுத்தித் தான் போய்விடுமாதலால், திருடிச் சம்பாதிக்க நினைப்பது மிக்க மதியீனமாம். அது தான் மாத்திரம் போவதில்லை; அவன் ஏதேனும் சிறுது புண்ணியஞ்செய்திருந்தால், அதையுங் கொண்டுபோம்; கொடும்பாவத்தை அவனிடத்தில் நிறுத்திவிடும். திருடனுக்கு மிச்சமிருப்பது பாவம் ஒன்றேயாம். அதுவே அவன் மரணத்தின்பின் அவனைத் தொடர்ந்து போவதாம். அதனால் அவன் மறுமையில் நரகத்துன்பத்தையும், மறுபிறப்புகளில் தரித்திர கஷ்டத்தையும் அனுபவிக்க நேரும். அதனால் மோக்ஷானந்த சுகத்தையடைவது மிகவரிதாம்.

"எள்ளாமை வேண்டுவானென்பா னெனைத்தொன்றும்
கள்ளாமை காக்கத்தன் னெஞ்சு"

(இ-ள்) எள்ளாமை வேண்டுவான் என்பான்—மோக்ஷத்தை இகழாமல் அடைய விரும்புவோன்; யாதொன்றும்—பிறனுக்குரியதான எந்தப்பொருளையும்; கள்ளாமை—அவனை வஞ்சித்து அபகரித்துக்கொள்ளக் கருதாதபடி; தன்நெஞ்சுகாக்க—தன்மனதை அடக்கிக் காத்துக்கொள்ளக்கடவன் என்பது. திருடுதலால் இம்மை மறுமை, மோக்ஷம் என்பனவற்றை யிழந்து, உலகத்தில் பழியும் பாவமு மடைந்து, பின்னர் நரகதுன்பத்தையும், மறுபிறப்புகளில் தரித்திர துன்பத்தையும் பெற்றுத் துக்கத்தையே யடையப்படுதலை யுணர்ந்து, அத்தொழிலைச் செய்யக் கனவிலும் கருதாமலும், அவ்வித எண்ணம் ஒருபோதும் நமக்கு உண்டாகாதபடி சர்வ ஜீவதயாபரனாகிய ஜகதீசன் திருவடிகளைச் சிந்தித்து வாழக்கடவோம்.

# உண்மை கூறுதல்.

உண்மை யென்றால் உள்ளது என்பது பொருள். இது வடமொழியில் "சத்தியம்" என்று கூறப்படும். இறப்பு நிகழ்வு எதிர்வு ஆகிய மூன்றுகாலங்களிலும் தன்னிலைதிரியாமல் உள்ளது எதுவோ அதுவே சத்தியம் என்னப்படும். இது ஈசுவரனுடைய சொரூப இலக்கணங்களுள் ஒன்று. அவ்விலக்கணம் சத்து சித்து ஆநந்தம் என்பன. இவற்றுள் "சத்து" என்றதுவே சத்தியமென்பதுமாம். ஈசுவரன் எக்காலத்திலும் தன்னிலை மாறாம லுள்ளவராதலால், அவரது இலக்கணங்களுள் ஒன்றாகிய சத்தியம் என்பதும் முக்காலத்தும் எக்காலத்தும் மாறாமல் நிலைபெறுமென்பது நிச்சயம். ஆதலால் மாறுதல் அடையாமல் உள்ளதை உள்ளபடி கூறுவதே சத்தியம், உண்மை என்பதாம். இல்லாததையும், நடவாதவிஷயத்தையும் கூறுதல் உண்மையாகா. அவை இல்லாதன ஆதலால் பொய்யெனப்படும். ஆதலால் உள்ளதை உள்ளவாறு கூறுபவனே சத்தியவந்தன், உண்மை பேசுவோன் என்னப்படுவான். தேவனுடைய இலக்கணமாகிய உண்மையைப் பெருமையாகக் கொண்டு அதனைக் கூறிவருபவனை அத்தெய்வத்தன்மையுடையவ னென்றே மகிமைப் படுத்திப் புகழ்வார் பெரியோர்கள். இதனால் அவன்பூமியிற் கீர்த்தியும் பெருமையும் உடையவனாய் வாழ்ந்து மறுமையில் மோட்சத்தையும் பெறுவான். இந்த உண்மையென்பது வாய் என்னும் அவயவத்துக்குப் பெருமை யுண்டாக்கி அதை அலங்கரித்து நிற்றலால்"வாய்மை" என்றுங் கூறப்படும். "வாய்மை" என்றால் வாய்க்குரிய குணம் என்பது பொருள். ஆதலால் மனிதரது வாயிலிருந்து பிறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையுள்ளதாகவே யிருக்கவேண்டும் என்பது பெரியோர் கருத்து. அவ்வாறு உண்மை கூறுவோன் மனதிற் பரிசுத்த முடையவனாவான். மனம் பரிசுத்த மானாலன்றி ஒருவன் தேவனுக்கு அடியானாவதில்லை. தெய்வத்துக்கு அடிமை செய்து அத்தெய்வத்தைக் கண்டு வாழ விரும்புகிறவன் உண்மையில் தன் மனதைப்

பரிசுத்த மாக்கிக் கொள்ள வேண்டும். மனப் பரிசுத்தத்திற்கு உண் மையைத்தவிர வேறுயாதொன்று மில்லை. இதனை

"புறத்தூய்மை நீரா னமையு மகத்தூய்மை
வாய்மையாற் காணப்படும்"

என்பதினுலறிக. இதன்பொருள். புறம்—சரீரத்தின்; தூய்மை—சுத்தமானது; நீரான் அமையும்—தண்ணீரால் உண்டாகும்; (அது போல) அகம் தூய்மை—மனப்பரிசுத்தம்; வாய்மையால்—உண்மையால்; காணப்படும்—உண்டாகும். தண்ணீரால் உடம்பு பரிசுத்தமாவதுபோல உண்மையான் மனம் பரிசுத்தமாமென்பது. உண்மை கூறுதலால் மனம் பரிசுத்தமடைந்து விளக்கம் பெற்ருல், அவ்வுள்ளத்தில் ஈசன் மகிழ்ந்து வசித்திருப்பார். எல்லாம் வல்ல கடவுளே அவனுள்ளத்தில் வசிப்பாராயின், அவனுக்கு எதுதான் பெரியது? உண்மை பேசுதல் இவ்வளவு சிறப்புடையதாயினும் ஜீவகாருண்ய மெனும் ஈசவர குணத்துக்கு மாறுபடாம லிருக்கவேண்டும். அதாவது யாதொரு ஜீவனுக்கும் இம்சை யுண்டாகாமல் உண்மைகூறவேண்டும். பிறஜீவனுக்கு இம்சை யுண்டாமாயின் உண்மை கூறுதலும் பயன் படா தென்பது ஆன்ருேர் கருத்து.

"வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமையில்லாத சொலல்" என்றதனுலுணர்க.

இதன் பொருள், வாய்மை யெனப்படுவது—மெய்மையென்று கூறப்படுவது; தீமையாதொன்றும்—(பிறஜீவனுக்கு) யாதொரு கெடுதியும்; இல்லாத சொலல்—உண்டாக்காதவைகளைச் சொல்லுதலாம். பிறஜீவனுக்குத் துன்பம் உண்டாகாதபடி சொல்லுதலே வாய்மையெனப் படுவதாமென்பது இதனுல் ஜீவ இம்சை யுண்டாக்காதிருப்பதே பெருந் தருமமா மென்பதும், எல்லாராலும் சிறப்பித்துக் கூறப்படும் வாய்மையென்பது ஜீவ இம்சைக்குக் காரணமாயின், அந்த வாய்மையாற் பயனில்லை யென்பதும், ஜீவ இம்சை யுண்டாகாதபடி கூறும் வாய்மையே பெரும் பயனளிக்கு மென்பதும் கொள்ளப் படும். ஜீவனுக்குண்டாம் துன்பத்தை நீக்கும் பொருட்டுக் கூறப்

படும் பொய்மைகூட ஒருசமையம் உண்மைகூறுதலின்பயனை யளிக்கு மென்றனர் திருவள்ளுவ நாயனார்.

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" என்றதனாலறிக.

இதன் பொருள், புரைதீர்ந்தநன்மை பயக்கும் எனின்—குற்ற மற்ற நன்மையைச் செய்யுமானால்;| பொய்மையும்—(அதனிமித்தம் கூறப்படும்) பொய்கூட; வாய்மையிடத்த—உண்மையின் தன்மையை யுடையதாம். பிறஜீவனுக்குற்ற நன்மையைச் செய்யுநிமித்தம் பொய்கூறினால் அந்தப் பொய்கூட உண்மையைப் போலப் பெரும் பயனளிக்கு மென்பது. அப்படியானால் ஊரைக்கொள்ளையிட்டு வருத்துவோர், கொலைபாதகர் முதலிய மஹாபாதகரையும் காப்பாற்று நிமித்தம் பொய்கூற நேரும். அவ்வாறு கூறி அவர்களைத் தப்பித் துவிட்டால் அப்பாதகரால் பெருத் தீமை நேரிடுமே, அச்செய்கை நன்மை தருவது எவ்வாறு எனின்; இது அசட்டுக் கேள்வியேயாம் ஏனெனில் "புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்று கூறிய தின் கருத்து அறியாமையே இந்தக் கேள்விக்குக் காரணமாயிற்று. ஒரு ஜீவனுக்குத் துன்பமுண்டாக்காததுதான் வாய்மையெனின், அநேகம் பேர்களுக்குத் தீமையை யுண்டாக்குவது வாய்மை யென் பதின் கருத்து ஆகுமோ? ஆகாது. ஏனெனில் ஒரு துஷ்டனால். ஒரு குடும்பத்துக்குக் கஷ்டநேரிடுமாயின், அவனை ஒழிக்கலாமெனவும், ஒரு குடும்பத்தால் ஒரு ஊருக்குத் துன்பம் நேர்வதாயின், அக் குடும்பத்தை யொழிக்கலா மெனவும், ஒரு ஊரால் ஒருநாட்டுக்குத் துன்பமுண்டாவதானால், அவ்வூரையே யழிக்கலாமெனவும் கூறப்படும் ஜீவ இம்சை நீக்குதலின் முறைமைக்கு மாறாக ஒரு போதும் நாயனார் கூறார். ஆதலால் பலபேருக்குத் தீமைசெய்வானைக் காப் பாற்று நிமித்தம் பொய்மை கூறுதல் மகா பாதகமேயாம். அது வாய்மை யாகாது, மனு முதலிய மஹான்களால் கூறப்பட்ட அறநெறிக்கு மாறுபடத் திருவள்ளுவர் கூறார். திருட்டு முத லிய துஷ்டச் செயல்களாற் பலபேருக்குத் தீமை செய்வோ

ைத் தண்டித்தலேயன்றிக் காத்தல் பயன் தருமென்பதும் அச்செய் யுளின் கருத்தாகாது. ஆதலால் துஷ்டர்களால் துன்பமடைவானைப் பொய் கூறியாவது காப்பாற்றுதலே பயன் தருமென்பது இதன் கருத்தென்று கொள்க. ஜீவகாருண்யத்தோடு கூடியபொய்யும் மெய்போலப் பயன் தருமென்றதனால், அது நீங்கிய மற்றைய வெல்லாம் தீமை பயக்கு மென்பதாம். காமம், பேராசை, அகங்காரம் முதலிய காரணமாகக் கூறப்படுவன வென்க. இவையே தீமைபயக்கும் பொய்மைக்குக் காரணங்களாம். இவை காரணமாகக் கூறப்படும் வாய்மையும் தீமையே பயக்கும். இவை பிரத்தியட்சானுபவமுமாதலால், நாம் விரிக்கவேண்டுவ தில்லை. இக்குணங்கள் நீங்கிய ஒருவன் தான் ஒரு நன்மையைப் பெறக் கருதிப் பொய் கூறுதலாலும், அவன் கூறுவதெல்லாம் பிறர் நன்மையின் பொருட்டேயா மாதலாலும் அந்தப் பொய்மையும் நன்மை தருமென்றார். இதுபற்றியே.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்." என்றார்.

பிறருக்குத் தீமையுண்டாக்குவன வென்று தன்மனதிற்குத் தெரிந்த விஷயங்களில் பொய்கூறக் கூடாதென்பது இதன்கருத்து.

"மனத்தொடு வாய்மை மொழியிற்றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை."

இதன் பொருள், மனத்தோ டொத்திருக்கும் உண்மையைக் கூறுவானாயின் அவன் தானம் தவம்புரியும் இல்லறத்தார் துறவறத்தார் எல்லாரினு மேம்பட்டவனாவான். மனத்தோடு பொருந்திய உண்மையாவது. மனச்சாட்சிக்கு விரோதமில்லாதவாறு கூறும் உண்மை. தன் இயற்கை யறிவினாலும், கல்வியறிவினாலும், கேள்வியாலும் தன் மனதிற்குச் சரியென்று காணப்படுவது எதுவோ அதுவே மனச்சாட்சிக்கு விரோதமில்லாததாம். அவ்வாறு உண்மை யென்பது இன்னதென வுணர்ந்து அவ்வுணர்ச்சிக்கு மாறுபடாமலும், பால்மாறுமலும் வாய்மைகூறி ஒழுகுவானாயின், அவன் சகல தருமங்களையும் செய்த பயனையடைந்து, உலகத்தில் கீர்த்தியும் சுகமுமனுபவித்து மறுமையில் மோட்சலோகத்தையு மடைவான்.

# பரோபகாரம்.

பரோபகாரம், பர+உபகாரம்=பரோபகாரம்; இதன் பொருள் தன்னை ஒழிந்த மற்றவர்களுக்கு உபகாரம் செய்தலென்பது. இது தேசத்துக் கொத்தபடியும், மதங்களுக்குத் தக்கபடியும் பலவகையாக வேறுபட்டுள்ளது. சிலர் தாமே தேடிச்சம்பாதிக்கச் சக்தி யில்லாத கூன், குருடு, சப்பாணி முதலியவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரிப்பதே பரோபகாரமென்பர். அஃதன்றியும் ஏழை யானவர்களுக்கு உதவி புரிவதும் பரோபகாரமென்பர். எவ்வாறு கூறினும் அவையெல்லாம் துன்பம் அடைகிறவர்களுக்கு உதவி செய்வதுதான் பரோபகார மென்பது நன்ருய் விளங்கும். துன்பம் அடைந்தவர்களை அந்தத் துன்பத்தினின்றும் விடுவித்துச் சுகமடையும்படி செய்வதே பரோபகாரமென்பதுதான் எல்லாருக்கும் ஒப்ப முடிந்தது. மனிதரேயன்றி எறும்பு முதல் யானை இறுதியாயுள்ள சகல ஜீவராசிகளையும் ஒப்பக்கருதி அவற்றுக்கெல்லாம் உதவி செய்வதுதான் பரோபகாரமென்பது நம்மர் கொள்கை. இன்ப துன்ப அனுபவத்தில் எல்லா ஜீவன்களும் ஒரேதன்மையனவாதலால், இது உசிதமானதே. உபகார மென்பது பொருள் முதலிய சாதனங்களால் மாத்திரம் செய்யப்படுவதன்று. அவையில்லாதவர்களும் பரோபகாரஞ் செய்யலாம். சரீரத்தாலும் வாயாலும் கூடச் செய்யலாம். புத்தியைப் பிரயோகித்தும் செய்யலாம். புத்தியால் பரோபகாரஞ் செய்வது பஞ்சதந்திரம் சுகிர்லாபமென்னும் பகுதியில் காக்கையும் ஆமையும் எலியும் மானும் ஒன்றை ஒன்று காப்பாற்றி உபகரித்ததனுல் நன்ருய் விளங்கும். பகுத்தறிவில்லாத இந்த ஜந்துக்களே யிவ்வாறு செய்யக்கூடுமானல், பகுத்தறிவுள்ள மனிதர்கள் தங்களுடைய புத்தியினுல் எவ்வளவு செய்யக்கூடும் என்பதை புத்தியுள்ளவர்கள் ஊகித்து அறியத்தக்கது. வாயால் உபகரிப்பதாகிய சக்தி சிலருக்கு உண்டு. அதனை "சொல்வன்மை உண்டெனிற்

கொன்னேவிடுத்தொழிதல், நல்வினை கோறலின் வேறல்ல" என்றத ஞல் முன்னோர் விளக்கியுள்ளார். இதைத்தான் செல்வாக்கு என்பர். தம் கையில் பொருளில்லாவிட்டாலும் பிறருக்கு உபகரிக்கத்தக்க சரீரபலம் இல்லாமற் போனாலும் அவ்விருவகை சக்தியும் உடையா ரிடம் கூறி உபகரிக்கச் செய்யலாம். இது அநேகமாய் எல்லாரா லுஞ் செய்யக்கூடியதே. காலத்தையும் இடத்தையும் அறிந்து புத் தியைச் செலுத்திப் பயன்படுத்தினால் எல்லாரும் பரோபகாரிகளாக இருக்கலாம். பொருளினுலியற்றப்படும் உபகாரம் நெடுநாள் நிலைத்தி ராது. பொருளற்றபொழுது செய்ய முடியாமையினாலேயாம். பிறர் துன்பங்கண்ட பொழுது மனத்தில் இரக்கங்கொண்டு அதனை நீக்க முயலுதலே மனத்தால் செய்யப்படு முபகாரமென்பர். பிறஜீ வனுக்குண்டான துன்பத்தைக் கண்டபோழுது தன் சரீர பலங் கொண்டு அதனை நீக்குதலே காயத்தால் செய்யப்படும் உபகார மாம். இதனுல் மனோவாக்குக் காயங்களாலும் பொருளாலும் பரோ பகாரஞ் செய்யப்படலாம் என்பது துணிபப் படுதலால், ஒவ்வொரு வரும் தமக்கு எந்தவகையால் பரோபகாரம் செய்யக்கூடுமோ அந்த வகையால் செய்து இம்மையில் கீர்த்தி பெறுவதுமன்றி மறுமையில் போகபோக்கியங்களையும் அனுபவிக்கலாம்.

பரோபகார மென்பது, எல்லாராலுஞ் செய்யத்தக்கதாதலால் யாவரும் தத்தஞ்சக்திக் கேற்றபடி பரோபகாரத் தொழிலைச் செய்து வரவேண்டும். பரோபகாரமென்பது, ஜீவகாருண்யத்தையும் இரக்க த்தையும் துணையாகக் கொண்டிருப்பது. தனித்திருப்பதல்ல. ஜீவ காருண்ய மென்பது, எல்லா ஜீவன்களிடத்திலும் தயவு பாராட்டு வது இரக்கமென்பது பிறஜீவன்களின் துன்பத்தைக்கண்டவிடத் தில் உண்டாகும் மன உருக்கம். இவ்விரண்டு குணங்களும் யாரிடத் திலிருக்கின்றனவோ அவனே பரோபகாரியாவான். இந்த குணங்கள் கடவுளுக்கு இயற்கையானவை. ஆதலால் இக்குணங்களுடையவன் களங்கமற்ற சித்தமுடையவனுப் கடவுள் கருணைக்குப் பாத்தி ரமாவான். இவையில்லாதவன் பாவியாய்க் கடவுளுண்டென்னும்

எண்ணமே யில்லாதவனுய்த் தேகாந்தத்தில் நரகானுபவத்தை யடைவான். தெய்வத்தன்மையுள்ள இக்குணங்களை யெப்படியாவது முயன்று பெற்றுப் பரோபகாரியாயிருந்து பூவுலகத்தில் ஒழியாத கீர்த்தியை நிலை நிறுத்தி மறுமையில் பேரானந்த சொர்க்கானுபவத்தையும் அடைவதே மனிதற்குரிய இலக்கணமாம். நமது மதத்தின்படி சகல ஜீவன்களுக்கும் உதவி புரிந்து அவற்றின் துன்பங்களை நீக்குவதே நன்று. எல்லாம் வல்ல கடவுள் எல்லாச்சீவன்களையும் சிருஷ்டித்திருப்பதால், அவருக்கு எல்லாம் சமமே! ஒன்று உயர்வு ஒன்று தாழ்வு என்பது இல்லை. எந்த உயிருக்கு உபகாரம் புரிந்தாலும் அவருக்குத் திருப்தியேயாம். மனிதனுய்ப்பிறந்த ஒருவன் தன் சுகத்தை மாத்திரம் பெரிதென்று நினைத்திருப்பது கூடாது. அது பகுத்தறிவில்லாத மிருகபட்சிகளின் இயல்பு. பகுத்தறிவுள்ள மனிதனே தன்னைப் போலவே எல்லாச் சீவன்களுக்கும் இன்பதுன்ப உணர்ச்சி உண்டென்று கொண்டு எவற்றுக்கும் துன்பமுண்டாகாதபடி நடந்து உபகாரம் புரியத்தகுந்தவனுகவே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறுன். ஆதலால் தன் நலத்தையுங் கருதிப்பாராமல் பரோபகாரம் புரிவதையே மேலாக எண்ணவேண்டும். பிறருக்கு உபகாரம் செய்ய மனமில்லாத மனிதன், மற்றவர் தனக்கு உதவி செய்யவில்லையென்று கூறுவது மான ஈனமாம். உபகார சிந்தையுடையவன், முதலில் தன் இனத்தாருக்கு உபசரித்தல் வேண்டும். இனத்தார் கஷ்டப்படும்போது அதனைக்கவனியாமல் விட்டு மற்றவர்க்கு உதவிசெய்வது அவ்வளவு சிறந்ததன்று. "எடுப்பின் கிளையுட் கழிந்தாரை யெடுக்க" என்ற ஆன்றோர் வசனம் அமிர்தம்போல்வது. தன் இனத்தாரிடத்தில் அன்பும் இரக்கமுமில்லாதவன் மற்ற அந்நியரிடத்தில் அன்புடையவனுயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றுல், அன்பும் இரக்கமும் எல்லாச் சீவன்களிடத்திலும் பொதுவில் உண்டாகும் குணமாதலால், அவன் மற்றவரிடத்தில் பாராட்டும் அன்பும் இரக்கமும் மெய்யாகமாட்டா. அவை ஏதாவது தனக்கொரு பிரயோஜனத்தைக் குறித்தாவது, இடம்பத்தி னிமித்தமாகவாவது இருக்குமே யொழிய உண்மையாக யிருக்கமாட்டா.

அதனால் அவன் செய்யும் உதவி பரோபகாரமாகமாட்டாது. தனக்குப் பிரதியுபகாரத்தை எதிர் பாராமல் செய்யப்படும் உபகாரமே பரோபகார மென்னப்படும். பரோபகார சிந்தையுள்ளவர்கள் சம்சாரசுகத்தையும், தமக்கு நேரிடும் கஷ்டத்தையும், மானத்தையுங்கூடப் பொருளென மதியாமல் இருந்தார்கள் என்பது நூல்களால் விளங்குகின்றது. சிபிச்சக்கிரவர்த்தி ஒரு புறுவைக் காப்பாற்று நிமித்தம் தன் சரீரத்திலுள்ள சதை முழுவதையும் அறுத்துக்கொடுத்தார். புரூரவ சக்கிரவர்த்தி ஊர்வசி யென்ற ஒரு தெய்வப்பெண்ணைக் காப்பாற்றும் பொருட்டுத் தன் சுகதுக்கங்களை யோசியாமல் அளவற்ற இராட்சதர்களோடெதிர்த்துக் கொடுஞ்சமர்புரிந்து அவளை விடுவித்தார். சீதையை மீட்டும் பொருட்டுச் சடாயுவென்ற கழுகரசன் இராவணனை யெதிர்த்துத் தன் உயிரையிழந்தான். காட்டுத்தீயில் விழுந்து வேகிற சர்ப்பத்தை நளமஹாராஜன் விடுவித்தான். இந்திரனைக் காக்கும் நிமித்தம் அர்ச்சுனன் காலகேய நிவாத கவசர் என்கிற மூன்றுகோடியே அறுபதுனாயிரம் தானவரை யெதிர்த்து யுத்தம்புரிந்து ஜயித்தான். இன்னும் அளவில்லாத சரித்திரங்களுண்டு இப்படித் தனது சுகதுக்கங்களைப் பாராட்டாமலும் பிரதியுபகாரத்தை யெதிர்பார்க்காமலும் செய்யப்படுவதே பரோபகாரம். பிரதியுபகாரத்தை யெதிர்பார்த்துச் செய்தால் அது கூலிக்கு வேலை செய்வதே தவிர உபகாரமாகமாட்டாது. பரோபகாரமானது எத்தருணத்தில் எவருக்கு எதனைச்செய்தால் அவருக்கு சுகம் உண்டாகுமோ அதைத் தடைபடாமல் உடனே செய்வதேயாம். அப்படியில்லாமல் தனக்கு இஷ்டம்போலச் செய்தால், அது அச்சமயம் அவருக்குப் பயன்படாவிட்டால், அதனால் என்ன பிரயோஜனம்? பசியால் வருந்திக் களைத்திருக்கும் ஒருவனுக்குக் கலவராகனைக்கொடுத்தாலும் அது அத்தருணம் பயன் படாமையால் அது உபகாரமன்று. பிறரால் இம்சிக்கப்பட்ட ஒருவனுக்கு அத்தருணம் வேறு எதைக் கொடுத்தாலும் அவனுக்குப் பயன்படாது. வியாதியால் வருந்தும் ஒருவனுக்குவயிறு நிரம்ப அன்னம் இட்டாலும் அது உபயோகப்படாது. சேற்றில் புதைந்து வருந்தும் ஒருபசுவுக்கு அத்தருணம் கொள்ளும் பருத்திக்

கொட்டையும் வைத்தால் என்னபயன். எவன் எத்தருணத்தில் எதனால் வருந்துகிருனே அதனை யுணர்ந்து துன்பம் நீக்குவதே பரோபகாரம். "புழுநெளிந்து புண்ணழுகிபோசனை நாறும், கழிமுடை நாற்றத்த வேனும்,—விழலர், விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார், சுளியார் சுமைபோடுதற்கு" "தம்முடையாற்றலு மானமுந் தோற்றுத்தம், இன்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்ச், சிறுவரையானு மன்றதமக்காங் கிறுவரையில்லையெனின்" "களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியுமற்றோர், விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய, தானுடம்பென்று புகழுடம்போம்புதற்கே, தானுடம்பட்டார்க டாம்" என்ற நீதி வசனங்களை யுணர்ந்து, நிலையற்றழியும் சரீரத்தைப் பொருள்படுத்தாமல், இம்மையிலுண்டாகும் புகழ்ச்சியையும், மறுமையிலுண்டாகும் பேரின்ப வாழ்க்கையையுமே பெருமையாகப் பாராட்டி, இன்ன ஜீவனென்று யோசியாமல், எல்லாம் சமனே யென்றுகொண்டு, மனதிற் களங்கமில்லாமல், வெறுப்பின்றிச் செய்யப்படுவதே பரோபகாரமாம். இதுமுன்னே கூறியபடி எல்லாராலும் செய்யக்கூடிய தாகையால், நாம் எல்லாரும் பரோபகார சிந்தை யுடையவர்களா யிருந்து ஈசன் திருவருளுக்குப்பாத்திராகும்படி முயல்வோமாக

## நன்றி மறவாமை.

---

நன்றி—நன்மை யென்பதுபொருள்; அது உபகாரத்துக்குப் பெரும்பாலும் வழங்குகின்றது—மறவாமை அவ்வுபகாரத்தை மறவாமலிருப்பது. ஆகவே பிறர் செய்த உபகாரத்தை மறவாமலிருப்பது என்பது "நன்றிமறவாமை" யென்பதன் பொருளாம். இது நாய், ஆடு மாடு முதலிய தாழ்ந்த ஜீவன்களிடத்திலுங் கூடச் சிறந்து விளங்குவது பிரத்தியட்சானுபவம். ஐயறிவுயிர்களாகிய மிருகபட்சிகளினிடத்திலும் சிறப் புற்றோங்கும் இதனை மனிதர்கள் வெறுத்து ஒதுக்

குவது எவ்வளவு மதியீனம்; மனிதருட் பெரும்பாலர் இந்த அரிய செயலை அறவே ஒழித்து விட்டிருப்பதனுலேதான் நீதிநூல்களில் "நன்றிமறவாமை" என்பது வெகுவாகவிரித்துக் கூறப்பட்டுள்ளது போலும். இதனைக் கைக்கொள்ளாத மனிதர்கள் மிருகபட்சிகளினும் தாழ்ந்தவராய் உலகத்தாரால் ஏசப்பட்டுத் தேகாந்தத்தில் நரகதுன்பபத்தையும் அடைவார்கள். ஒவ்வொருவனும் தனக்குப்பிறர் உபகாரம் செய்ய வேண்டுமென்று இச்சிக்கிறுன். தான்மாத்திரம் அதன்படி நடக்க நினைப்பதேயில்லை. தான்பிறர்க்கு உபகாரம் செய்யாவிட்டாலும் பிறர் செய்த உபகாரங்களை மறவாமலிருக்கக்கூடாதா? இது சாதாரணமாய்ச் செய்யக்கூடியதே தவிர அசாத்தியமானதல்ல. அதனையும் மறந்திருக்கும் பேதை மானிடர்க்குத் தேய்வகிருபையும் உண்டாகாது. உலகத்தில் மனிதர்களும் அவனைப்பொருளாக மதியார்கள். இதனுல் இம்மை மறுமை இரண்டிலும் அவனுக்குத் துன்பந்தான் பிராப்தியாகும். இதைப்பற்றித்தான் "எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்றமகற்கு" எனத்திருக்குறள் கூறியது. இதன் பொருள்; எவ்விதமான பெரிய தருமங்களையழித்தவனுக்கும் (மஹா பாதகங்களைச் செய்தவனுக்கும்) பிராயச் சித்தமுண்டு. தனக்குப் பிறர்செய்த உபகாரத்தை மறந்த ஈனனுக்குப் பிராயச்சித்தமே யில்லையென்பது. ஸ்மிருதி சாஸ்திரங்களும், இதிகாச புராணங்களும் இப்படியே சொல்லுகின்றன. இதனுல் மறுமையில் நல்லகதி கிடைக்கமாட்டாதென்பது வெளிப்பட்டது. "நாடி நமரென்று நன்கு புறந்தந்தார்க்குக், கேடுபிறரோடு சூழல்—கிளர்மணி, நீடுகல்வெற்ப! நினைப்பின்றித் தாமிருந்த கோடு குறைத்துவிடல்" என்றதனுல் செய்ந்நன்றி மறந்தவர்க்கு உண்டாந் தீமை கூறப்பட்டது அதாவது நமக்குரியவரென்று நினைத்து ஆபத்துக்காலத்தி லுதவிசெய்பவர்களுக்கு விரோதமாக, அவரது விரோதிகளோடு கூடிக்கொண்டு கெடுதி நினைப்பது தாமேறி உட்கார்ந்து கொண்டிருந்த மரக்கிளையை ஞாபகமில்லாமல் வெட்டிவிடுவதையொக்குமென்பது. உபகாரஞ்செய்தவர்க்கு அபகாரம் செய்வது தாமுட்கார்ந்திருந்த மரக்கிளையை மறதியால் வெட்டுவதுபோல இருக்கிறது

என்றால், மரக்கிளை தனக்கு ஆதாரமாயிருக்கிறது என்பதை யோசியாமல் அந்தக்கிளையை வெட்டிவிடுதல். அப்படிச் செய்வதனால் தனக்கும் மரக்கிளைக்கும் ஆபத்து நேர்ந்து வருவதுபோல என்று கொள்க. அதுபோல ஒருவர் செய்த உபகாரத்தை மறந்து அவர்களுக்கு அபகாரம் செய்தால், தனக்கும் ஆபத்துக் கூடவருமென்று பொருள் கொள்ளப்படுகிறது காண்க. அப்படி அபகாரஞ் செய்தவன் வாழ்ந்து வருகிறதைப் பார்க்கிறோமே யென்றால், அப்படியானாலும், அவனைக் கண்டமற்றவர்கள் அவனுக்கு உபகாரஞ் செய்ய முன்வரமாட்டார்கள். அவனைச் செய்ந்நன்றி மறந்த துரோகி யென்று எல்லாரும் நிந்திப்பார்கள். அவனோடு சிநேகிக்க அஞ்சுவார்கள். அதனால் அவனுக்கு உலகத்தில் அபகீர்த்தியும், பாவமும் பழியும் நீங்கா. யாவரும் வெறுப்பாரானால் அவனுக்குச் சுகமேது? அன்றியும் அவன் வாழ்வு உள்ளதுபோலத்தோன்றி வெகுசீக்கிரத்திலழிந்துபோமென்பதும் அநுபவமாம். இச்செய்யுளால் செய்ந்நன்றி மறந்தவனுக்கு உலகத்திலின்பமில்லை யென்பது கூறப்பட்டது. "நன்கொன்றறிபவர் நாழி கொடுப்பவர்க், கென்று முறுதியே சூழ்க—வெறிதிரைச் சென்றுலாஞ்சேர்ப்பவதுபோல நீர்போயு, மொன்றிரண்டாம் வாணிகமில்" பிறர் செய்த நன்றியின் பயனையறிவார் ஒரு நாழி அரிசி கொடுத்தவனுக்கு எந்நாளும் நன்மையையே கருதிச் செய்யவேண்டும். கடலோடி வியாபாரஞ்செய்தாலும் அதைப்போல ஒன்றிரண்டு பங்காகப் பயன்கொடுக்கும் வியாபாரம் ஒன்றுமில்லையாம் என்பது. நன்றி மறவாதவனுக்கு உலகத்தில் உண்டாகும் நன்மை கூறப்பட்டது. நன்றிமறவாதவனை நற்குணவானென்றும், நல்லறிவாளனென்றும், நல்லொழுக்கமுள்ளவனென்றும் எல்லாருங்கொண்டாடுவார்கள். அவனுக்குபகாரஞ் செய்ய எல்லாரும் முன்வருவார்கள். ஆதலால் அவன் சிறந்த கீர்த்தியோடு சுக ஜீவனஞ் செய்வானென்பதில்லையமேயில்லை. "எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கள், விழுமந்துடைத்தவர் நட்பு." இதன் பொருள், தமக்குண்டான துன்பம் நீங்கும்படி உபகரித்தவர்களுடைய சிநேகத்தை யெழுவகையான பிறப்பிலும் மறவார்

அறிவுள்ளோர் என்றால், ஒருவன் தனக்கு உபகாரஞ் செய்தால் அதனை எந்தப் பிறப்பிலும் மறவான் என்பது. இதனால் உபகாரஞ் செய்தவரை ஒருபோதும் மறக்கக்கூடாதென்பது விளக்கப்பட்டது. இப்படி இகலோக பரலோகங்களிரண்டிலும் பரமசுகத்தைக் கொடுக்கிறபடியாலே பிறர்செய்த நன்றியை மறவாமலிருப்பதை ஒத்த நன்மை வேறொன்றுமில்லை. அதைமறப்பதுபோலத் தீமை வேறெதுவுங் கிடையாது.

அதனாலேதான்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றேமறப்பது நன்று"

என்று கூறப்பட்டது. அதாவது பிறர் செய்த உபகாரத்தை மறந்துவிடுவது நல்லதல்ல; பிறர் செய்த தீமைகளை யுடனேமறந்து விடுவது நல்லது என்பதாம். பிறர் செய்த உபகாரங்களை மறவாமலிருந்து அவருடைய க்ஷேமத்தையே கருதியிருப்பதினால் எல்லாரும் உறவாவார்கள்; தீமையை மறப்பதினாலே பகையில்லாமற்போம் என்பது அதன் கருத்து. ஒரு பகையுமில்லாமல் யாவருமுறவாயிருப்பதினால் எவ்வளவு நன்மை உண்டாகுமென்பதை ஒருவன் யோசித்துப்பார்ப்பானானால், அவன் நன்றி மறவாமையென்னும் அரிய பொருளை ஒருபோதுங்கைவிடமாட்டான். நன்றியை எவ்வாறு கருதவேண்டுமென்பதை

"தினைத்துணைநன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார்" என்று திருக்குறள் கூறியது.

இதன்பொருள்:—பிறர்செய்த உபகாரத்தின் பிரயோசனத்தை அறிகின்றவர்கள் ஒருவன் தமக்குத் தினையளவு உபகாரத்தைச் செய்தாலும் அதனைப் பனைமரத்தின் அளவாக நினைத்திருப்பார்கள் என்பது. பயன் தெரிதலாவது, ஒருவன் செய்த உபகாரத்தைச் சிறிது பெரிது என்று அதன் அளவை யோசியாமல், உபகாரஞ் செய்யப்பட்டகாலத்தில் தாமிருந்த நிலைமையை யோசித்து, அந்தச்சமயத்திற்

செய்யப்பட்ட உபகாரத்தால், நமக்குண்டான நன்மை எவ்வளவு பெரிதென்று அந்த உபகாரத்தினுலுண்டான பலனை எண்ணியறிவது. ஒருவன் செய்த உபகாரம் அற்பமானுலும் அது பெரிய பயனையளிக்கும். உபகாரத்தில் சிறிதென்றும் பெரிதென்றும் ஏற்றமும் தாழ்வுமில்லை. அந்தந்தச்சமயத்துக்கு அந்தந்த உபகாரம் பெரிதேயாம். நமக்குண்டான துன்பத்தை நீக்குவதனுலே அது பெரிதுதான். ஒரு அற்பன்கூட பெரிய உபகாரத்தைச் செய்யக்கூடும். உலகத்தில் ஒருவரும் பிறருடைய உபகாரமில்லாமல் ஜீவிக்கமுடியாது. மஹாராஜாவானுலும் சரி, பிச்சைக்காரனுனுலும் சரி; ஒவ்வொருவரும் பிறர் உபகாரத்தை எதிர்நோக்கியே ஜீவிக்கும்படி கடவுள் அமைத்திருக்கிருர். எவனுவது நான் பிறர் உபகாரமின்றி வாழ்கிறேனென்றுல், அது சுத்தப்பொய்யே தவிர மெய்யாகமாட்டாது. பிறர் செய்த உபகாரத்தை நாம் கனஞ்செய்தாலன்றி நமக்கு ஒருவரும் உபகாரஞ்செய்யமாட்டார்கள். அப்பொழுது நமது உலக வாழ்வு நிர்ப்பாக்கிய நிலைமையை அடைந்துவிடும். ஆகையினுலே "நன்றிமறவேல்" என்று நமது தாயாகிய ஔவையார் கூறியிருக்கும் உபதேச மொழியை மறவாமல் சிரமேற்கொண்டு வாழ்வோமானுல் எல்லாவற்றையும் படைத்த சர்வேசுவரன் நமக்கு மேலும் மேலும் சுகவாழ்வைக் கொடுத்துப் பிறகு மோட்சானந்தத்தையும் அருள் புரிவார்.

## இனிய மொழி கூறல்.

---

இனியமொழி கூறலென்பது, கேட்பவர் செவிக்கு இன்பமாயிருக்கும்படியான வசனங்களைப் பேசுதலென்பதாம். இதனை ஔவையார் எதிர்மறையில் வைத்து "வெட்டெனப்பேசேல்" என்று அருளிச்செய்தார். "வெட்டெனல்" கடுமையாகச்சொல்லல். அதாவது கேட்பவர்க்கு மனவருத்தமுண்டாம்படி பேசுதல். அறிவுள்ளவர்கள் எப்போதுங் கேட்பவர் மனதுக்கு வருத்தம் உண்டாகாதபடி சாந்த

மாகப் பேசவேண்டும். அவ்வாறு பேசுகிறவனுக்கு எப்போதும் எவ்விடத்தும் பகையில்லை. யாவரும் உறவாவார்கள். அவனைப் பாவமும் அணுகாது. ஏனெனில், மனிதர்க்கு மனம் எப்படியிருக்கிறதோ அப்படியே வாயும் பேசும். மனம் களங்கமற்றுப் பரிசுத்தமாயிருந்தால், வாயில்வரும் பேச்சுக்களும் சுத்தமாயும் இனிமையாயுமிருக்கும். கடினமும் களங்கமும் நிறைந்தமனமுள்ளவனுயின் அவன் வாக்கிலிருந்து புறப்படும் வசனங்களும் அப்படியே கடுமையாகவும் வெறுப்பைத் தரத்தக்கதாகவுமிருக்கும். நல்லமனமுடையவனுக்கு நல்லவசனங்கள் கூறும் தன்மையுண்டாமாதலால் இனிய மொழி கூறுவோனைப் பாபம் அணுகாதென்பது நிச்சயம். ஆதலால் எப்போதும் இனியமொழி கூறுஞ் சாந்தசீலனுகவே யிருத்தல் வேண்டும். அவ்வாறின்றிக் கடுமொழிகூறுவானைப் பாலரும், பெரியோரும், பண்டிதரும், பாமரரும், நேசரும், பகைவரும், உற்றுரும், பெற்றுரும், மனைவி மக்களும் வெறுத்து ஒதுக்குவார்கள். இதனுல் அவனுக்கு இகலோகவாழ்வு தாழ்வேயாம். அவன் பாவியாய்ப் பரலோகங்களிலும் நன்மையைப்பெறுன். இதுபற்றியே.

"துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொலவர்க்கு"

என்றது திருக்குறள். அதாவது, எல்லாரிடத்திலும் இன்பத்தை உண்டாக்கும் இனியமொழிகூறுகின்றவர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கும் தரித்திரமில்லையென்பது. எல்லாரும் அவனுக்கு உறவாக இருப்பதால் அவன் செல்வத்தொடுவாழும் சிறப்புடையனுவான் என்பதில் தடையில்லை. இதனுல் இனியவை கூறலால் உலகத்தில் துன்பங்களின்றிச் சுகமாக வாழ்வானென்பது கூறப்பட்டது. அன்றியும்

"அல்லவைதேய வறம்பெருகு நல்லவை,
நாடி இனிய சொலின்"

என்றது. இதன்பொருள், கேட்பவர்க்கு இன்பமுண்டாம் இனிய மொழிகளை ஆராய்ந்து பேசுவானுனல் அவனுக்குப்பாபம் ஒழியும், புண்ணியம் பெருகும் என்பது.

"அகனமர்ந்தீதலினன்றே முகனமர்ந்,
தின்சொலனாகப் பெறின்"

ஒருவன் முகமலர்ச்சியுடையவனாய் இனிய மொழிகளைப் பேசுவானானால், அது மனமகிழ்ச்சியோடு அரியபொருளைத் தானங்கொடுப்பதைவிட நன்மையுடையதாமென்பது. இவ்விரண்டு செய்யுட்களாலும் இன் சொற்கூறுவதால் அவன் பாவமொழிந்து புண்ணியவானாவானென்பது விளங்கின.

"சிறுமையு ணீங்கிய வின்சொன்மறுமையும்
இம்மையு மின்பந்தரும்"

இதன்பொருள், குற்றமற்ற இனியமொழி கூறுதலானது இம்மை மறுமை யிரண்டிலும் இன்பத்தைத் தருமென்பது. இம்மையில் இன்பந்தருதலாவது எல்லாருந்தன் வசப்பட்டுத் தனக்கு இடர் செய்யாதிருத்தல். மறுமையில் இன்பந்தருதலாவது பாவம் நீங்கிப் புண்ணியம் பெருகிச் சொர்க்கம் முதலிய போகவுலகங்களை யடைந்து சுகம் பெறுதல். வாயினால் நல்லமொழிகளைக்கூறி அதனால் இம்மையிலும் மறுமையிலு மின்பத்தை யடைவதானால், அது எவ்வளவு பெருமையுடையதென்று பாருங்கள். இவ்வளவு மகிமையுடையதா யிருப்பதனாலேதான் அதனை நல்லொழுக்கத்துக்கோர் அங்கமாகப் பெரியோர் கொண்டார்கள். இனியமொழி கூறல் யாவருக்கும் பெரிதும், பேரின்பத்தைக் கொடுப்பதுமாகிய பெருமையுடையதென்பதையுணராமல் அதனை ஒழித்துக் கடுஞ்சொல் பேசுவார்க்கு இரங்கி,

"இனியவுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்றது திருக்குறள். இதன் பொருள்; இனியமொழிகளிருக்கையில் கடுஞ்சொற்களைக் கூறுதலானது, ஒருமரத்தில் கனிந்த பழமிருக்கையில், அதனைக் கொள்ளாமல் காயைப்பறித் துண்பது போலும். இனியமொழிக்குக் கனியும், கடுமொழிக்குக் காயும் உவமானமாகக்

கூறப்பட்டது. இனியவை கூறாமல் கடுமொழி கூறுவான், இனிப்பைத் தரும் கனியை யொழித்துச் சுவையில்லாத காயைத்தின்கிற மதியீனனுக் கொப்பாவானென்று கூறப்படுவதனால், கடுமொழி கூறல் புத்தியீன மென்பது விளக்கப்பட்டது.

"இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது"

இனிய மொழிகள் இன்பத்தைத் தருவதைப் பிரத்தியட்சமாகப் பார்த்திருந்தும், ஒருவன் அதைவிட்டுக் கடுஞ் சொல் சொல்வது யாது காரணமோ என்று இரங்கிக் கூறியது. இன்சொல் இன்பத்தைத் தருமென்பது பிரத்தியட்சமாதலால், அதையே யாவருங் கைக்கொள்ள வேண்டுமென்பது உபதேசமாகக் கூறியது. ஆதலால் இம்மை மறுமை இரண்டிலும் பெரும் பயனைத் தருவதாகிற இன்சொற் கூறலை நாம் விரதமாகக் கொண்டு எப்பொழுதும் கடுஞ்சொல்லை யொழித்து நன்மை யடைய நாடவேண்டும். பலருக்குத் திருப்தியையும், மகிழ்ச்சியையுந் தருவதாகிய இன்சொல் எல்லாம் வல்ல கடவுளுக்கும் மகிழ்ச்சியைத் தருமென்பதில் ஆட்சேபனை யில்லாமையால், நாமும் இன்சொற் கூறுதலையே நல்லொழுக்கமாகக் கைக்கொண்டு கடவுளின் கருணைக்குப் பாத்திரர்களாய் மோட்சானந்தம் பெற்றுச் சுகித்திருக்க முயல்வோமாக.

# தந்தை தாய்ப் பேணுதல்

"தந்தை தாய்ப்பேண்"

---

இந்த வாக்கியம் "ஆத்திசூடி" என்னும் ஒரு சிறந்த நீதிநூலில், ஔவையார் என்பவரால் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள், உன் பிதாவையும் மாதாவையும் விரும்பு அல்லது காப்பாற்று.

"பேண்" என்னும் சொல்லுக்குக் காப்பாற்று, விரும்பு என்பன பொருள். இது இரட்டுறமொழிதல் என்னும் உத்தி; அதாவது இரண்டு அர்த்தம் உண்டாம்படி கூறுதல். விரும்புதலாவது அவர்களிடத்தில் பக்தி உடையவராயிருத்தல்; காப்பாற்றுதலாவது மாதாபிதாக்கள் தள்ளாமையாயிருக்கும் காலத்தில் அவர்களுக்கு அன்னவஸ்திராதிகள் குறைவறக்கொடுத்துப் போஷித்தல். இவைகளால் நாம் தெரிந்து கொள்வது யாதெனில், மாதாபிதாக்களைத்தெய்வம் போலப் பாவித்து அவர்களுக்கு அடங்கி வணங்கியிருப்பதும், தள்ளாத காலத்தில் அவர்களைக் காப்பாற்றுவதும் புத்திரர் புத்திரிகளுக்குக் கடமையென்பதுதான். மனிதர்களைத் தேவனுக்குச் சமானமாக நினைப்பது பாவம் என்று போதிக்கிற கிறிஸ்துவ மதத்தில் கூட, "உன் தகப்பனையும், உன்தாயையும் கனம்பண்ணுவாயாக" என்னும் கட்டளை இருக்கிறது. எந்த மதஸ்தரும் இப்படியே சொல்லுகின்றார்கள். ஆதலால் மாதாபிதாக்களை மகிமையாகக் கருதி வாழ்வதே சிலாக்கியமென்று தோன்றுகிறது ஆனாலும், நமது மத நூல் மற்ற மதநூல்களைவிட அதிகமாகக் கூறுகின்றன. அதனை "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஔவையார் வசனத்தால் உணரலாம். இதன் பொருள். தாயும் தகப்பனும் முதலில் அறிந்து கொள்ளும்படியான தெய்வமாம் என்பது. புத்திரர் புத்திரிகள் தமது தாய் தகப்பனைத் தெய்வத்தைப்போல நினைத்து அவர்களுக்கு தொழும்பு செய்யக் கடமைப்பட்டிருக்கிறோமென்று அவர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். தாய் தந்தையர்களை ஏன் தெய்வமாகக் கொள்ளவேண்டும் என்றால், சகல ஜீவான்மாக்களையும் இரட்சிக்குந்தொழில் கடவுளுக்கே உரியது. ஆதலால், அந்தத் தொழிலைச் செய்து குழந்தைகளைக் காப்பாற்றுகிறவர்கள் மாதா பிதாக்களே ஆதலால், அவர்களையுந் தெய்வமாகவே மதிக்க வேண்டும். குழந்தைகள் ஒன்றும் அறியாத இளம்பருவத்தில், கடவுள் ஒருவர் உண்டு என்றும் அவருக்குப் பயந்து நடக்க வேண்டுமென்றும், பாவத்தை விலக்கிப் புண்ணியத்தைச்செய்ய வேண்டுமென்றும், பாவத்தைச்

செய்தால் இம்மையில் இராஜதண்டனையும், மறுமையில் நரக தண்டனையும் உண்டாமென்றும், புண்ணியத்தைச் செய்தால் உலகத்தில் பெரும் புகழும் மறுமையில் சொர்க்கபோகமும் கிடைக்கும் என்றும் உபதேசிக்கிற குருவாகவும் இருக்கிறார்கள். தங்கள் குழந்தைகள் உலகத்தில் கீர்த்தியோடு ஜீவிக்கவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு தங்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராட்டாமல் அநேக பணங்களைச் செலவு செய்து கல்வி முதலியவற்றைக் கற்பித்து நல்வழிப்படுத்தி உபசரிக்கிறார்கள். எப்பொழுதும் குழந்தைகளுடைய நன்மையையே கருதுகிறார்கள். எவ்வகையான துன்பமும் அணுக வொட்டாமல் பாதுகாத்து வளர்க்கிறார்கள். இவ்வகையாக மாதா பிதாக்கள் குழந்தைகளுக்குத் தெய்வமும் குருவும், உற்ற துணைவருமாக இருந்து உபசரிக்கிற காரணத்தால் இவைகளைத்தவிரக் குழந்தைகளுக்குத் தகுந்த உறவினர் யார்? ஒருவருமில்லை.

குருவாகவும் துணைவர்களாகவும் கொள்வது உசிதமேயாகும். தெய்வமாகக் கருதிவழிபாடு செய்வது நியாய விரோதமாகாதோ என்றால், ஆகாது. ஒரு சக்கிரவர்த்தியாகிய மஹா ராஜாவினுடைய அதிகாரம் பெற்றவனை அந்தச் சக்கிரவர்த்தியாகவே நினைத்து, அவன் கட்டளைக்கு அடங்கி வாழவில்லையா? அதனால் குற்றமில்லை அல்லவா? அரசனுடைய கட்டளையாகிய சட்டவிதி வாக்கியங்களை அவனுடைய வாக்கிய மாகவும், அவ்வாக்கியங்களை யெடுத்துக் காட்டி நல்வழிப்படுத்துகிற ஒருவனை அவ்வாசனாகவே கருதி அவனுக்குக் கீழ்ப்படியவில்லையா? அது குற்றமாமோ? அது அரசனை அவமதிக்கிறது ஆகுமா? ஆகாது அல்லவா? அது போலவே வேதாகமங்களாலும் அறியப்படாத மஹாதேவனுடைய கட்டளையாகிய வேதாகமங்களைப் போதித்து நல்வழிப்படுத்துங் குருவையும் கடவுளாகக் கருதி வழிபடுவது கடவுள் வணக்கமே யாகுமல்லவா? அதனால் தேவனுக்கு யாதொரு குறைவும் நேரிடாது. அது தேவனுக்கு மகிமையேயாம். நமக்குக் குருவாயிருந்து நன்மை தீமைகளைத் தேவனுடைய கட்டளைச் சட்டமாகிய வேத விதிகளின்படி உபதேசித்து நன்மை செய்கி

ன்ற தந்தை தாய்களைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுவது குற்றமாகாது. சிறப்புடையதே யென்பதுதான் நமது வேத சாஸ்திரங்களின் கருத்து. ஆகையால், நாம் வேத வசனங்களுக்கு அடங்கி மாதா பிதாக்களைத் தெய்வமாகவே மதித்து வழிபட வேண்டும்.

அன்றியும் தாயானவள் சிசுக்களைக் கர்ப்பத்திற் சுமந்து, அதற்கு யாதொரு குற்றமும் வராதபடி நடப்பதினால் பட்ட கஷ்டமெவ்வளவு; குழந்தை பிறந்தபின் அதை வளர்ப்பதற்காகப் பட்ட பாடுகள் அளவுக்கு அடங்குமோ ? நாம் நம்மைக் காத்துக் கொள்வதற்கு ஏற்ற சக்தியடையும் வரைக்கும் தாய் தந்தைய ரிருவரும் படுகிற துன்பம் சொல்லுக்கடங்காது. அவர்களுக்கு நேரிடும் பொருட்செலவும் அப்படியேதான். இதனால் தாய் தந்தையரைத் தெய்வமாக வழிபடவேண்டும் என்னும் வேத விதியைக் கடவாமல் அவர்கள் சொல்லுகிற புத்திமதிகளைக் கேட்டு அவர்களுக்கு அடங்கி வாழ்வதும், நம்மை வளர்த்து மனிதராக்கி விடும் நிமித்தம் அவர்கள் நமக்காகப் பட்ட கஷ்டத்தை நினைத்து, அவர்களுடைய தள்ளாமையான முதிர்ந்த பருவத்திலே யாதொரு குறைவும் நேரிடாதபடி, எப்பாடு பட்டாவது அவர்களைப் போஷிப்பதும் கடைமையேயாம். இதனைப் போதிப்பதற்காகவே,மேற்குறித்தநீதிவாக்கியங்களும்,அவர்களுடைய வார்த்தைகளைத் தட்டி நடக்கக்கூடாதென்பதை விளக்க, "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை." "தந்தைசொன் மிக்க மந்திரமில்லை" என்ற நீதிவாக்கியங்களுங் கூறப்பட்டன. இவற்றின் பொருள், தாயினுடைய வசனத்தைத்தள்ளி நடந்தால், அவனுக்கு இதத்தைத் தரும்படியான மற்றொரு வசனமுமில்லை; பிதாவினுடைய வார்த்தையைக்காட்டிலும நாம் மனதில் வைத்துக் காப்பாற்றத்தக்க மந்திரம் வேறொன்றுமில்லை என்பதாம். தாயானவள் குழந்தைகள் சுகமாகவாழ்வதற் குரியவற்றை சொல்லுவாள். தகப்பன் தன் புத்திரன் இகபரவாழ்க்கையிற் சிறந்து கீர்த்தியோடு வாழும் விஷயத்தையே உபதேசிப்பான். ஆதலால் அவ்வாறு கூறப்பட்டது. இவ்வசனங்களுக்குச் சரியாகவே, நாம் கடவுளென்று கொண்டாடுகிற ஸ்ரீ இராமரும் மாதுர் பிதுர்வாக்கிய

பரிபாலனத்துக்காக நாடு நகரங்களையிழந்து மனைவியோடுந் தம்பியோடும் காட்டில் வசித்தார். விராதன் கௌசிகனுதியோர் மாதா பிதாக்களைவிட வேறொரு தெய்வமுமில்லை யென்று கருதி அவர்களை வழிபட்டு முத்தி பெற்றார்களென்று பாரதம் இராமாயணம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு கூறப்படும் சரித்திரங்கள் அளவில்லாதனவுண்டு. இதர மதநூல்களிலு மிவ்வித சரித்திரங்களுண்டு. இப்படியிருக்க, அநேகம் பிள்ளைகள் தங்கள் மாதாபிதாக்களைச் சிறிதும் மதிக்காமலும், அவர்களுடைய வசனங்களைப் பொருளென மதியாமலும், இறுமாந்து நடப்பதும் அவர்களைத் துர்ப்பாஷைகளாலே திட்டி அவமதிப்பதுமாக நடக்கிறார்கள். அது எவ்வளவு மதியீனமும் மானக்கேடுமாகும்? நாமும் அவர்களைப்போல மூடத்தனமாய் நடந்துகொள்ளாமல், அவர்களைக் கனப்படுத்தி வணங்கி நடக்க முயலவேண்டும். இல்லாவிட்டால் மாதாபிதாக்களுக்கு அடங்கி வாழும்படி கட்டளையிட்டருளிய ஜகதீசனுடைய கோபத்துக்குப் பாத்திரராகி இம்மை மறுமை இரண்டிலுந்தீராத துக்கத்தையடைவோமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகையால் தேவனுடைய கட்டளையைக் கைப்பற்றி மாதாபிதாக்களைப் போற்றிக் கடவுளின் கருணைக்குப் பாத்திரராகி வாழக்கருதுவதே நல்லொழுக்கமென்றுகொண்டு அப்படியே நாம் முயலக்கடவோம்.

## மனிதனது கடமை.

---

கடவுள் பலவகையான ஜீவராசிகளைப் படைத்தருளினர்; அவை நடப்பன, பறப்பன, ஊர்வன, நிற்பன, நீர்வாழ்வனஎன ஐந்து பேதங்களாகவுள்ளன. இவ்வைந்தனுள் உலகத்திலுள்ள சகல சராசர பேதங்களும்அடங்கும். இந்தஜீவவர்க்கங்கள்எல்லாம்ஆகாரநித்திரையாதி உயிர்க்குணங்களினாலும், விருப்பு வெறுப்புக்களினாலும், இன்பதுன்ப

அநுபவங்களினாலும் சமானமாகவே யிருக்கின்றன. மனிதரும் மற்ற ஜீவன்களோடு இவ்விஷயங்களில் ஒத்தேயிருக்கின்றனர். ஆனால் மானம் அவமானம் நன்மைதீமை என்பவற்றைப்பகுத்தறியும் சக்தியினாலும் தொழின் முயற்சியினாலும் சுகானுபோகங்களை அனுபவிக்கும் முறையாலும் வேறுபடுகின்றனர். மற்ற ஜீவன்கள் இயற்கையாகக் கடவுளால் அமைக்கைப்பட்ட பொருள்களைக் கஷ்டமின்றியுண்டு ஜீவிக்கின்றன. மனிதர்களோ பலவகையான தொழில்களைச் செய்து தமதுஆகாராதிகளைத் தேடிக்கொள்ளும்படிகடவுளால் அமைக்கப்பட்டிருக்கின்றனர். யாதொருமுயற்சியுமில்லாத ஒருமனிதன் உண்டு ஜீவிப்பது கஷ்டமாகவேயிருக்கும். இதனால்மனிதன் தொழின் முயற்சிகளைச் செய்தே ஜீவிக்கவேண்டுமென்பதும், மற்றவைகள் அவ்வாறின்றி ஜீவிப்பதுமே யியல்பாகவிருப்பதும் தெய்வச்சித்தமென்று நன்றாய்விளங்குகின்றது.தொழில்முயற்சியில்லாத அஃறிணை ஜந்துக்களுக்கு எனது பொருள் என்பது முதலிய சுதந்தரமில்லை. தன் பிரயாசத்தினாலும் புத்தியினாலும் சம்பாதிக்கு மியல்புள்ள மனிதர்களுக்கோ எனது பொருள் என்பது முதலிய சுதந்தரமும் அதனால் நான் என்கிற அகங்காரமும் இயல்பாகவே யுண்டாகின்றன. மற்றவற்றுக்கு கடவுளாலமைக்கப்பட்ட இயற்கையறிவு மாத்திரமே யுண்டு. மனிதனுக்கு அதனோடு கல்வி கேள்விகளாலும், மற்றவரது சகவாசத்தினாலும் பெற்றுக்கொள்ளப்படும் செயற்கை யறிவு உண்டு. இதனாலும் மனிதன் தன்னறிவுகொண்டு முயற்சிசெய்து தீரவேண்டுமென்றேகருதிக் கடவுள் அவனைச்சிருஷ்டித்தாரென்று ஊகிக்கவேண்டியதாயிருக்கின்றது. இன்னும் கண்ணுக்குக் காணாதவைகளையும், செவியாற் கேட்டறியாதவைகளையும் அனுமானங்கொண்டு ஊகித்தறியும் பேரறிவும் மனிதனுக்கு உண்டு. இவைகளால் மனிதன் தனது இயற்கை யறிவைச் செயற்கையால் விருத்தியாக்கிக்கொண்டு நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, தக்கமுயற்சிகளைச் செய்துபெருமையோடு ஜீவித்து, இம்மை மறுமைப் பயன்களை யனுபவிப்பதுமன்றி மனோவாக்குக் காயங்களுக்கெட்டாத பரமாத்மாவையுமறிந்து மோட்சானந்த அனுபோகத்துக்குரியவனாகி யிருக்கிறான் என்பது இனிது

விளங்கப் பெறும். இத்தன்மையாலேயே மனிதனானவன் சகல ஜீவராசிகளுக்கும் மேற்பட்டவனாய், அவற்றையடக்கி யாளுந் தலைமைவாய்ந்திருக்கிறான். இம்மையோடு மறுமைப் பயனும் உண்டென்பது ஆஸ்திகமதஸ்தர் எல்லாருக்கும் ஒப்பமுடிந்தது. மறுமையிலும் போக சுகங்களை அடையத் தக்கவனாகின்றான் மனிதனென்பதும் யாவரும் ஒவ்வுகின்றனர். மறுமை விஷயத்தில், ஆஸ்திகமதபேதவாதிகள் சிறிது பேதப்பட்டபோதிலும் மறுமை உண்டென்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபனையில்லை. இம்மையில் சுகத்தையடைவதற்சாக மனிதன் கஷ்டப்பட்டே தொழில்செய்து தீரவேண்டியிருப்பதுபோல, மறுமைப்பயனை யடைவதற்கும் தக்க முயற்சி செய்தே தீரவேண்டுமென்பது நிச்சயம். அதனையடைய முயற்சி செய்யாதபோது அவன் உலகத்தில் அறிவுள்ளோர்களா லிகழப்படுகிறான். அவனை யொருவரு ம திப்பதில்லை. அவனுக்கு உலகத்தில் புகழுமில்லை.

ஆகையால் இகவாழ்வுக்காக உழைப்பது போலவே பரலோக வாழ்வுக்காகவும் மனிதன் உழைக்கவேண்டியதே அவனுக்குரிய கடமையாம். சுக துக்கானுபவங்களில் தனக்கு எப்படி மகிழ்ச்சியும் வருத்தமும் காணப் படுகின்றனவோ, அப்படியே பிறருக்கும் உண்டென்று கருதிப் பர இம்சை செய்யாமலும், பிறரது துக்கத்தையும் தன் துக்கம் போலக் கருதித் தன்னாற் கூடியவரையில் பரோபகாரம் புரிந்தும், மனக்களங்கமற்று நம்மைப் படைத்தருளிய கடவுள் சன்னிதானத்தில் பாபரகிதனாக விளங்கி பரலோக வாழ்வு பெறக் கருதுவதே மனிதருக்குரிய கடமையாம். அவ்வாறின்றித் தன்னுடைய சுகதுக்கங்களையே பெரிதெனக்கருதி தன்னலத்தில் சிந்தைசெலுத்தியிருந்தால், அவன் மிருக பட்சிகளுக்குச்சமானமாவான். இகவாழ்வு ஒன்றைக் கருதுவதே மிருக பட்சிகளின் இயல்பு. அதோடு பரலோக வாழ்வையுந் தேடுவதே மனிதருக்குரிய இயல்பு. அதற்கு மாறாக நடந்தால், அந்த மனிதன் உலகத்தில் இகழப்படுவதுமன்றி பரலோகத்திலும் நரக துன்பத்தை அனுபவிக்கி

ருன். ஆதலால் இகபரவாழ்வு இரண்டையுந் தேடுவதே மனிதரிலக்கணமும் கடமையுமாமென்றுகொண்டு அவ்வழியொழுகிச் சன்மார்க்க சீலராய்ச் சிறந்து விளங்க முயல்வோமாக.

## மனச்சாட்சி

---

மனச்சாட்சி என்றது ஒரு மனிதன் செய்கிற நன்மை தீமைகளுக்கு அவனுடைய மனமே சாட்சியாகவிருத்தல். இதை ஒவ்வொருவரும் தாமே யுணர்ந்துகொள்ளலாம்; கற்றறிந்தவரே யன்றிக், கல்லாதார், பாலருங்கூட அறிந்துகொள்ளத் தக்கது. எவ்வாறு என்னில், உலகத்தில் எல்லாரும் நன்மையென்று ஒப்புக்கொண்ட ஒரு காரியத்தைச் செய்யத்தொடங்கும்போது அவனுடைய மனமானது யாதொரு களங்கமுமில்லாமல் உற்சாகத்தோடு மகிழ்ந்திருக்கின்றது. அப்பொழுது அந்த மனதுக்கு அச்சமென்பது சிறிதுமில்லை. எவரிடத்திலும் தடையின்றித் தன் கருத்தை வெளியிடத்துணிகின்றது. நீதிக்கு விரோதமான காரியத்தைச் செய்யத்தொடங்குகையில் மனதுக்கு அச்சமும் நடுக்கமும் கவலையும் உண்டாகின்றன. இதைச் செய்யக்கூடாதென்கிற எண்ணமும் உண்டாகின்றது. செய்த பிறகு எவரைக் கண்ட போதிலும் மனதுக்குச் சிறிது நாணமுண்டாகின்றது. இதுவே மனதுக்குச் சுபாவ குணம். இந்தக் குணத்தையே மனச்சாட்சி என்பது. இது எந்தத் தேசத்திலும் காடு மலைகளிலும் வசிக்கின்ற சகல ஜனங்களுக்கும் பொதுவாகவிருக்கின்றபடியால், சர்வபூரணராகிய ஜகதீசுவரன் ஒவ்வொருவருடைய மனதிலிருந்து உண்மையைத் தெரிவிக்கிறார் என்று அறிவுள்ளவர்கள் கூறுகின்றார்கள். தவறைத் தவறென்றும் நியாயத்தை நியாயமென்றும் தெரிவிக்கும் மனச்சாட்சியைத் தெய்வத் தன்மையுள்ளதென்று கூறுவது நியாயமே. பொய் சொல்லுதல், விபசரித்தல், பிறர் நிந்தை கூறுதலாதித் தீய தொழில்களை ஒருவன் முதல்

முதலில் செய்யத் தொடங்கும்போது மனச்சாட்சி முன்னின்று தடுக்கின்றது. ஆதலால் அத்தொழில்களை அவன் உடனே செய்துவிடுவதில்லை. நாளடைவில் மனதைக் கடினப்படுத்திப் பின்னரே செய்கிறான். தீய தொழில்களை ஒருதரம் இரண்டுதரம் செய்கையில் இந்த மனச்சாட்சி தடைசெய்யும்; அதற்கு மேல் அது தடுப்பதில்லை. பிறகு தீச்செயலின் பயனாகிய துன்பம், அவமானம் முதலியவற்றைக் கொடுத்து வருத்துகின்றது. அது தீத்தொழிலைச் செய்யாதே யென்று தடுக்கும்போது, அதற்குடன்பட்டு அது காட்டும் நல்வழியில் நடப்போருக்கு நல்வினைப் பயனாகிய இன்பத்தையும் மகிழ்ச்சியையும், பெருமையையுங் கொடுத்து மேன்மையை யுண்டாக்குகின்றது. இது பற்றியே,

> "தன்னெஞ்சறிவது பொய்யற்கப் பொய்த்த பின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்று நீதி நூல் கூறியது.

இதன் பொருள்—தனது மனம் அறிந்த விஷயத்தில் பொய் சொல்லாதிருக்க வேண்டும். அவ்வாறின்றிப் பொய் கூறிய பின் தன்னுடைய மனது நெருப்பைப் போலத் தன்னை யெரிக்கும் என்பதாம். இது மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடக்கவேண்டுமென்பதை விளக்கிற்று. ஈசுவரனால் மனிதர்களுக்கென்றே அளிக்கப்பட்ட தெய்வத்தன்மையுள்ள மனச்சாட்சியை அலட்சியம் செய்பவர் மனிதராகமாட்டார். ஏனென்றால், நன்மை தீமைகளைப் பகுத்தறிவதற்குரிய சிறந்த கருவிகளாகிய மனச்சாட்சி மிருக பட்சி ஜாதிகளுக்கில்லை. அதனாலே தான் அவற்றுக்குப் பகுத்தறிவில்லை யென்றும், மனச்சாட்சியின் உதவியைக்கொண்டு மனிதர்கள் நன்மை தீமைகளைப் பகுத்தறிகிறார்களென்றும் நூல்களும் நூல்களை யுணர்ந்த பெரியோரும் கூறுகின்றார்கள். இப்பகுத்தறிவினாலேயே மனிதன் மற்றெல்லா ஜீவன்களையும் விடச் சிறந்தவனென்றும், உயர்திணைப் பொருளென்றும் புகழ்ந்து கூறப்பட்டு விளங்குகிறான். அக்குணம் ஒழிந்தால் மனி

தன் அஃறிணைப் பொருளாகவே கருதப்படுவான். இந்த மனச்சாட்சியால் நன்மை யிது வென்றும் தீமை யிதுவென்றும் பகுத்தறிந்தே தருமாதருமங்கள் பெரியோர்களால் நியமிக்கப்பட்டன என்பது ஒரு சாராரது அபிப்பிராயமுமாம். இதனால் தருமம் அதருமம் என்பன வெல்லாம் மனிதனது மனதிலேயே கடவுளால் சிருஷ்டிகாலத்தில் அமைக்கப்பட்டுள்ளன வென்பது அவரது கருத்து. இது பற்றியே "பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே" என்று பேரியோர் கூறினார்கள். தெய்வத்தன்மையுள்ள மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவனைத் தெய்வ குணமுள்ள மஹாபுருஷனென்று உலகம் வியந்து கூறுகின்றது. அவ்வாறு நடவாதவனை அஃறிணைப் பொருள்களிலுந் தாழ்ந்தவனாகக்கொண்டு இகழ்கின்றது. ஆகையால் நன்மை தீமைகளை யுணர்த்துகின்ற மனச்சாட்சியைப் பின்பற்றி, அது கூறும் வழியில் நடந்து சகல பெருமைகளையும் பெற்றுப் பூலோகத்திற் சிறந்து வாழ்வதே மனிதர்களுக்குரிய கடமையாம். இக்கீழ்லோகத்திலே மாத்திரமல்ல; பரலோகத்திலும் பெருமை தந்து தேவர்களாலும் புகழச் செய்யும். இத்தகைய அரிய குணமாகிய மனச்சாட்சியை நமக்கருளிப் பெறும் பேறு கொடுத்தருளக் காத்திருக்கும் சர்வேசுவரனாகிய பகவான் திருவடிகளைச் சிந்தித்து அவன் அருளிய மனச்சாட்சியைத் துணையாகப் பற்றிக்கொண்டு நல்வழி நடந்து சுகம் பெற முயலக்கடவோம்.

## சரீரசுகம்.

---

சரீரசுகமென்பது சரீரத்துக்கு யாதொருகெடுதியும் உண்டாகாவண்ணம் பாதுகாப்பதுவே யாகும். உலகத்தில் நாம் பாடுபடுவது சரீர சுகத்தின் நிமித்தமே. சரீரசுகங் கெடுமாயின் இம்மை மறுமையாகிய இருவகைப்பயன்களும் பெறுதல் அசாத்தியம். இகத்தில் ஒரு நோயாளிக்குச் சகல பாக்கியங்களிருந்தாலும் அவன்

அவைகளை யனுபவிக்க முடியாது. ஆகவே அவன் எல்லாம் உடைய வனுக இருந்தும் ஒன்றுமில்லாத தரித்திரனுக்குச் சமானமானவனே. தரித்திரனொருவன் சரீர சுகத்தோடிருப்பானுயின், அவன் தன் சரீரப் பிரயாசையால் திரவியந்தேடி இகத்தில் சகல பாக்கியங்களையும் அனுபவிக்க முடியும். ஆகையால் அவன் தரித்திரனல்லன். அவனே தனவந்தன். தவிர சரீரசுகமுடையவனிடத்திலேயே தைரிய லக்ஷ்மி குடிகொள்வாள். பெருந்தன்மைமேவும். கோபமென்பது தலை காட்டாது. அவன் புத்தியானது தெளிவடைந்து பல வழிகளிலும் சென்று பயனளிக்கும் மார்க்கத்தைப் பின்பற்றி நிற்கும். உள்ளத்தில் எடுத்த கருமம் எளிதில் முடிக்கத்தக்க ஊக்கமிகும். கவலையொழியும். இதனுல் அவன் இகத்தில் தனக்கு வேண்டிய சாதகங்களை எளிதில் தேடிக்கொள்வதுமல்லாமல், திரவியத்தால் செய்யாவிடினும், தன் சரீரப் பிரயாசையாலாவது பிறருக்கு உபகாரம் புரிந்து, பரலோக சாதகத்தைப் பெறுவான். அவனிடத்திலேயே பந்துக்கள் ஊரார்முதலிய எல்லோருக்கும் சந்தோஷ முண்டாகும். வியாதிஸ்தனை மனைவி மக்கள் கூட வெறுப்பார்கள். கோபமும் அதைரியமும் அவனிடம் குடிகொள்ளும். அவன் பிறர்உதவியை நாடி உலகவாழ்வை நடத்தவேண்டியவனுகிற படியால், உலகத்துக்கு வீண் சுமையாகி நிந்தைக்குள்ளாகிறுன். உலகத்தில் ஒருவரை ஒருவர் சந்திக்க நேரிட்டாலும் அல்லது கடிதமெழுதினுலும் முந்தி விசாரிப்பதும் எழுதுவதும் க்ஷேமத்தைப் பற்றியேயாகும். ஆகவே சரீர சுகத்தைப் பாதுகாப்பது எல்லாருக்கும் இன்றிமையாததாகுமல்லவா ?

இந்தச் சரீர சுகமானது மனிதனுக்குப் பலவிதத்திற் கெடுகிறது. ஒரு மனிதன் தனவந்தனுயிருக்கிறுனென்று வைத்துக்கொள்வோம். அவன் தன் சரீர சுகத்திற்கு வேண்டிய சௌகரியங்களைத் திரவியச் செலவிட்டுத் தேடிக்கொள்ளலாமே யெனின், அது அவனுடைய புத்தியைப் பொருத்ததாயிருக்கிறது. தரித்திரனைப் பற்றியோவெனின், அவனுக்குத் திரவிய சகாயமில்லாததால் உண்டாகும்

சரீரசுகக்கேட்டைத் தவிர புத்திக்குறைவாலும் சுகங்கெடுகிறது. சிலர் பொழுதெல்லாம் சோம்பித்திரிந்து சரீர சுகத்திற்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொள்ளாமல் நோயால் பீடிக்கப்படுகிறார்கள். அவர்கள் அப்பொழுது "விதிவசம்" "தெய்வச் செயல்" என்று சொல்லிக் காலம் போக்குகின்றனர். தெய்வம் முயற்சியுடையார்க்கே துணைசெய்யும் அல்லது வீண் பொழுது போக்கும் மதியீனர்களுக்கு அல்ல. அநேக வாலிபர்கள் துன்மார்க்கத்தில் பிரவேசித்துக் கெடுகிறார்கள். இந்தத் துன்மார்க்கத்தின் பலன் அப்பொழுது அவர்களுக்கு விளங்குவதில்லை. நாளடைவில் அதன் பலன் ஒவ்வொன்றாய்த் தோன்றும். அவ்வியாதி இவர்களோடு நில்லாமல் மனைவி மக்களையும் பற்றுகிறது. அப்பொழுதுதான் தங்கள் துன்மார்க்கத்தின் பலனை இன்னதென்று உணர்கிறார்கள். ஆடவர்களாயினும் சரி, ஸ்திரீகளாயினும் சரி, சிறு வயது முதற் கொண்டு நல்லொழுக்க முடையவர்களாயிருந்து நற் சிநேகிதர்கள் கூட்டுறவையடைந்து "மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்" என்ற ஔவைப் பிராட்டியாரின் அமுதவாக்கின்படி, தங்களுடைய தாய், தந்தை, குரு இவர்களுடைய வார்த்தையைக் கேட்டு நடப்பவர்களே வயோதிகப் பருவத்திலும் வாலிபர் போல் சுகமும் பலமும் வாய்க்கப் பெறுகின்றனர். இது யாவரும் அறிந்த விஷயம்.

சரீரசுகமென்பது ஒரு அருமையான பேறு. இந்தச் சரீர சுகத்தின் அருமை அப்பொழுது விளங்காது. "நிழலின் அருமை வெயிலில் தெரியும்" என்பது போல வியாதியினால் பீடிக்கப்படும்போதே தெரியும். பொதுவாய்ச் சரீரசுகம் கெடாமல் பாதுகாப்பது புத்தியைப் பொருத்ததாயினும் நல்லகாற்று ஆகாரம் தேகப்பயிற்சியாகிய இவை மூன்றும் முக்கியமாம். பட்டணவாசிகளுக்கு நல்ல காற்றுக் கிடைப்பது அரிதாகி தேகம் கெடுகிறது. ஆகாரங்களுக்குரிய சாமான்களும் காய் கனிகளும் வெளியூர்களிலிருந்து வருகின்றமையால் அநேகமாய்க் கெட்டேவருகின்றன. சாக்கடை முதலிய தொந்தரவுகளுமிருக்கின்றன. தேகப்பயிற்சி செய்வதற்கும் சில தொந்தரவு

களுண்டு. ஆகையால் பட்டணவாசிகள் சரீரசுகவிஷயத்தில் மிகவும் கவலை யெடுத்துக்கொள்ளவேண்டும். கிராமவாசிகளுக்கு இவ்வளவு சங்கடம் கிடையாது. நாம் நல்ல காற்றை உட்கொண்டால்தான் இரத்தம் சுத்தியாகும். இல்லாவிட்டால் இரத்தம் அசுத்தப்பட்டு சுகக்கேட்டைத்தரும். தாழ்ந்த வீடுகளிலும் ஈரந்தாங்குமிடங்களிலும் நல்லகாற்று வரத்தக்க பலகணி முதலியன இல்லாத வீடுகளிலும் வசித்தல் கூடாது. தேகத்தில் அழுக்குப்படியாத வண்ணம் பிரதிதினமும் ஸ்நானஞ்செய்து வரவேண்டும். ஜீரணந்தரக்கூடிய பதார்த்தங்களையே உபயோகிக்கவேண்டும். பகற்பொழுதில் நித்திரைசெய்வதை விலக்க வேண்டும். நமது தேசவழக்கப்படி எண்ணெய் தேய்த்து வாரந்தோறுமோ அல்லது வாரத்துக்கு இருமுறையோ முழுகவேண்டும். தேகத்தில் எண்ணெயிட்டு நன்றாய்அரப்புத் தேய்த்து முழுகுவதால் தேகத்திலுள்ள மயிர்த் துவாரங்கள் சுத்திகரிக்கப்பட்டுத் தேக சௌக்கிய முண்டாகும். நான்கு மாதத்திற்கு ஒரு முறை யாவது பேதிக்கு வாங்கிக்கொள்ளவேண்டும். ஆதலால் யாவரும் தேக சுகபாக்கியத்தைப் பெறுதற்கும், பெற்ற பின் பேணுதற்கும் தக்கமுயற்சி செய்து கொள்ளவேண்டியது அவசியமென்பதைச் சிறு வயது முதல் அறிந்து நடந்து வரவேண்டும்.

## சரீரசுக போஷணை.

---

சரீரசுகமே ஒருவன் உலகத்தில் அடையத்தக்க பாக்கியங்கள் எல்லாவற்றுள்ளும் மேலானது. நமக்கு ஒரு வியாதியுண்டாய்ச் சரீரசுகங்கெடுமாயின், அப்பொழுது நமக்குச் சரீரசுகமே மனிதனுக்குப் பிரதானமான தென்பது விளங்கும். ஆகையால் நம்மாலியன்றவரையில் சரீரத்திற்குச் சுகத்தைத் தேடுவதோடு சுகம் கெடாதபடி பாதுகாக்க வேண்டும். பொதுவாய் வியாதியுண்டாவதற்குக் கார

ணம் நம்முடைய அஜாக்கிரதையும் புத்திக்குறைவுமே யாகும். சரீர சுகம் குன்ருதிருக்க வேண்டுமாயின்,முதலாவது சுத்த ஆகாயமுள்ள விடத்தில் குடியிருக்கவேண்டும். இரண்டாவது, நல்ல ஆகாரமிருக்க வேண்டும். மூன்ருவது, ஸ்நானம் செய்து தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதோடு வீடு, வீட்டுப்பண்டம், பாத்திரம் முதலிய வைகளைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். நான்காவது சரியான தேகப்பயிற்சி செய்து வர வேண்டும்.

இவைகளில் போதுமான சுத்த ஆகாயமே பிரதானம். நாம் உட்கொள்ளும் ஆகாயத்திற்கும் உள்ளிருந்து வெளியே விடும் ஆகாயத்திற்கும் வித்தியாசமுண்டு. இதை எப்படி யறியலாமெனில், நாம்வெளியேவிடும் ஆகாயத்தை ஒரு பாத்திரத்தில் சேர்த்து அந்த இடத்தில் ஒருவிளக்கைக் கொண்டுபோய்வைத்தால், அந்த விளக்கு உடனே அணைந்துவிடும். அந்த ஆகாயம் கெட்டுப்போய்விட்டபடி யாலல்லவா அவ்விடத்து வைக்கப்பட்ட விளக்கு அவிந்து போயிற்று. இதனால் நாம் வெளியேவிடும் ஆகாயம் சுத்த ஆகாயமல்ல வென்பது நன்கு விளங்குகிறதல்லவா? ஆகையால் நாம் படுத்து நித்திரைசெய் யுமிடத்தில் போதுமான சுத்த ஆகாயம் வரும்படி பலகணிகள் அமைத்து வைத்திருக்க வேண்டும். அதுவும் ஜனக்கூட்டமான இடத்தில் இவ்விஷயம் கவனிக்கப்படுதல் இன்றியமையாதது.

நல்ல ஆகாரமானது சரீர சுகத்திற்கு மற்ருெரு முக்கியமான சாதனம். சில ஆகாரங்கள் சரியாய் ஜீரணத்துக்கு வருவதில்லை. அப்ப டிப்பட்ட ஆகாரங்களை விலக்கவேண்டும். நமது நாட்டில் அநேக மாய்ப் பட்டணங்களில் வசிப்பவர்களில் உத்தியோகத்திலிருப்பவர் கள் தவிர, மற்றவர்களெல்லாரும் காலையில் முதநாள் சமைத்து வைத்ததில் மிகுந்திருப்பதை உண்கிருர்கள். இந்த வழக்கமானது ஊரில் காலரா முதலிய கொடிய வியாதி நடமாடுங்காலத்தில் ஆபத்து விளைக்கும். சரியானபத்தியத் தோடிருத்தல் சரீரசுகத்தைப் பாது காக்கும் மற்ருெரு வழியாகும். அன்றியும் கெட்டுப்போன சுக த்தை மறுபடியும் அடைதல் சாத்தியமாகும். சுத்த ஆகாயம் எப்

படி அவசியமோ அப்படியே சுத்த ஜலமும் அவசியமானது. அநேகமாய் நமது நாட்டில் கிணற்றுக் கருகே சாக்கடை ஓடுகிறது. அது கிணற்று நீரைக் கெடுத்துவிடும். எப்படியெனில், சாக்கடை நீரானது கீழ்வழியே சென்று கிணற்றுப்பக்கம் துவாரமிருக்குமாகில் கிணத்திற் போய் பாயும். அந்த ஜலத்தை ஜனங்கள்உபயோகிப்பார்களாகில் பெரும் வியாதிகளுக்குள்ளாவார்கள். ஆகையால் கிணற்றுப் பக்கம் சாக்கடையை ஏற்படுத்தக்கூடாது. கிணற்றங்கரையில் துணி துவைப்பதும் வழக்கமாயிருக்கிறது. இதுவும் கிணற்று நீரைக் கெடுக்கும். இவைகளை அவசியம் கவனித்துவரவேண்டும். எந்தத் தண்ணீராயினும் நன்ருய்க் காய்ச்சிச் சாப்பிடுவதே உத்தமம்.

சுத்தமாயிருத்தல் சரீரசுகத்திற்குமூன்ருவது சாதனம்.பிரதிதினம் ஸ்நானம் செய்வதும் ஒருநாள் கட்டியிருந்த வஸ்திரத்தை ஒருநாள் கட்டாமல் அன்றன்று வெவ்வேறு வஸ்திரம் உடுத்துவதும் நமது தேகத்தின் சருமத்தில் வியாதி வராமல் தடுக்கும். இவைகளைக் கவனிக்காவிட்டால், சிரங்கு சொறிகள் உண்டாவதோடு சருமத்தைப்பற்றினவேறு வியாதிகளுக்கும் இடமாகும். தேகம் நனைந்ததும் நனையாததுமாய் இரண்டு மூன்று செம்பு தண்ணீரை விட்டுக் கொண்டு பேருக்கு ஸ்நாநம் செய்வதில் பிரயோசனமில்லை. அதனுல் தேகத்தில் படிந்திருக்கும் அழுக்குப் போய் விடுமென்பதில்லை. ஒவ்வொருவரும் சோப்புத் தேய்த்து ஸ்நானம் செய்வது நலம். இல்லாவிட்டால் முரட்டுவஸ்திரங்களைக்கொண்டு தேகத்தில் நன்ருய்த் தேய்த்து அழுக்கைப்போக்கவேண்டும். இத்தோடு சாதாரணமான தேகப்பயிற்சியும் வேண்டும். சிறிதும் தேகப்பயிற்சி செய்யாத கெட்ட வழக்கத்தினுல் சோம்பேறிகளாய் வியாதிகளுக் குள்ளாவதோடு சிறு உழைப்புக்கும் ஆற்ருதவர்களாகிருர்கள். அவர்கள் தாங்கள் கெடுவதோடு பிறருக்கும் உதவி யற்றவர்களாகிருர்கள். எப்படி ஒரு யந்திரத்தைத் துரு முதலிய பிடிக்காமல் பாதுகாக்க அதை வேலையில் இயங்கும்படிசெய்வது அவசியமோ அப்படியே நமதுதேகமாகிய யந்திரத்தின் கருவிகள் கெடாதிருக்க தேகப்பயிற்சிசெய்வது முக்கியமானது.

சிறுவர்களுக்கு ஓடி விளையாடுவதே முதல்தரமான தேகப்பயிற்சி. அல்லது வேகமாய் நடந்து செல்லுதலும் டென்னீஸ் (Tennis) கிரிகெட் [Cricket] முதலியவைகள் விளையாடுதலும் கூடும். மாணுக்கர்களுக்கு தேகப்பயிற்சி அவசியம்வேண்டும். இல்லாதிருத்தல் கூடாது. விளையாடும் நிமித்தமோ வேறு எதற்கோ ஒழிவுநேரம் கொடுப்பதினுல் காலம் வீணுகிற தென்று நினைக்கக்கூடாது. இது பெரும் பிழை. இப்படி ஒழிவுநேரம் கொடுப்பதானது மாணுக்கர்களுடைய மனதைச்சுத்தப்படுத்திப் படிப்பதற்குச் சுறுசுறுப்பைத் தரும். கல்வியில் தேர்ச்சி யடைந்த ஒருவர் இந்தவிஷயமாய்த் தன் அனுபவத்தில்கண்டதைச்சொல்வதென்ன வென்ருல், அடக்கம், அதி காலை எழுந்திருத்தல், பிரதிதினம் தேகப்பயிற்சி செய்தல் முதலியவைகளே ஒருவனுடைய சரீரசுகத்திற்கும் மனந் தளர்வடையாது ஞாபகசக்தி மிகுந்திருப்பதற்கும் முக்கியமானவையென்றுசொல்லுகிருர். ஆகையால் "சுவரைவைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுதவேண்டும்" என்பது போல், நாம் சரீர சுக போஷணையைத் தேடிக்கொள்வதை முதற்கடமையாகக் கொண்டல்லவா பின்மற்றதைக் கவனிக்கவேண்டும். சரீர சுகமில்லாவிடில், இம்மை மறுமை இரண்டிடத்தும் சுகம் பெற இயலாதென்பதுங் கவனிக்கத்தக்கது.

## வறுமை

---

**வ**றுமை யென்னும் இப்பதத்திற்குத் தமிழில் நல்குரவு, இல்லாமை, மிடி, தரித்திரம் முதலாய பலபெயர்களுள. உலகத்தில் ஜனனமெடுத்தவனுக்குப் பலவிதமான தொல்லைகளுண்டாகின்றன. ஒவ்வொருவனுக்கும் ஏதோ ஒரு தொல்லை யிருந்தேதீரும். அளவற்ற தொல்லைகளுள் வறுமைத் தொல்லையுமொன்று. இந்த வறுமையைத் தொல்லைகளுள் ஒன்ருகக் கூறினேமாயினும் இதுவே அவற்றிற்கெல்லாம் மூலம். இதுவே அவற்றிற்கெல்லாம் மேலான துன்பத்தைத் தருவது. இதுவுமன்றி,

"இன்மையின் இன்னாதது யாதெனில்,
இன்மையின் இன்மையே இன்னாதது"

என்று திருவள்ளுவ நாயனார் கூறியபடி ஒருவனுக்கு வறுமை யைப்போல் துன்பந் தருவது யாதெனில், வறுமையைப் போல் துன் பந் தருவது வறுமையே யல்லது வேறில்லை என்பதாகிறது. இதனால் வறுமையைப் போல் துன்பந்தருவது எதுவுமில்லையாம். உலகத்தில் ஒருவன் ஐசுவரியவானாய்ப் பிறந்து போகங்களை யனுபவிப்பதும் தரி த்திரனாய்ப் பிறந்து துன்பத்துக்குள்ளாவதும் பூர்வஜென்ம கர்ம பல னென்று கூறுவாராயினும், சோம்பேறிகளாய்த் திரிந்து திரவியந் தேடச் சிறிதும் முயற்சி செய்யாமல் வறுமைக்குள்ளாவார் பலர். "வளவனாயினும், அளவறிந் தழித்துண்" என்பதைச் சிறிதும் அறி யாது கைகொண்டமட்டும் வீண்செலவு செய்து உள்ள திரவியத் தை ஒழித்து விட்டு வறுமைக் குள்ளாகும் பேதையர் பலர். இவர்கள் வறுமையால் உண்டாகும் துன்பமிவை யென்பதை அறிகிறார்களில்லை. வறுமை யென்பது எவனிடத்திற் சேருகிறதோ அவனுடைய அழகு, செல்வம், மனோதிடம், குணம், நல்ல குடிப்பிறப்பு, உயர்குலம் முத லியவைக ளெல்லாம் கெட்டு விடும். இவைகளுக்குப் பதிலாக பொய், வஞ்சகம், பொறாமை, களவு, கோட்சொல்லல் முதலாய துர்க் குணங்கள் அவனிடத்தில் மேலிடும். ஆதலால் அவன் நிந்தனைக்குள் ளாகி சிறுமைப்படுவதுமன்றி, அனந்தகோடி பாபங்களைச் சம்பாதித் துப் பரலோகத்திலும் நரக துன்பத்துக் குள்ளாவானென்பது திண் ணம். இதனையே திருவள்ளுவரும்,

"இன்மையென ஒரு பாவி,
மறுமையும், இன்மையும் இன்றிவரும்'

என்று கூறினார். இதன் பொருள், வறுமையென்று சொல்லப்ப டுகிற ஒரு பாவி ஒருவனிடத்து வரின், இம்மை மறுமையாகிய இரண் டின்பங்களும் அவனுக் கில்லையாமென்பது. இகபர சுகங் கெடுக்கும் வறுமையென்னும் கொடிய தொல்லைக்கிடந்தராலாகுமா? இகபர சுகங்

களையன்றி மனிதன் தேடற் பாலன யாவை? இவைகளுக்குக் குறைவு ண்டாமாயின் யாது பிரயோசனம்? இதனாலன்றோ நமது ஒளவைப் பிராட்டியும் "கொடிது கொடிது வறுமை கொடிது" எனக் கூறி வறுமையைக் காட்டிலும் கொடிதெதுவுமில்லையென்பதை வற்புறுத் தியுள்ளார். சீ! வறுமைக்கொருநாளுமிடந் தரலாகாது. தக்க முய ற்சி யெடுத்துக்கொண்டு அது நம்மை யணுகாவண்ணம் காத்துக்கொ ள்ள வேண்டும். இதுகாறும் கூறிவந்தது சோம்பேறித்தனத்தால் பொருள் தேடாமல் திரிவோரைப் பற்றியும் தனவந்தராகவிருந்து வீண்செலவு செய்வோரைப் பற்றியுமேயாம். தரித்திர குடும்பத்தில் பிறந்த ஒருவன் என்னசெய்யவேண்டுமெனின், இவனும் விடா முய ற்சி செய்து தன் புத்தியை உபயோகித்துப் பொருள் தேடி வறு மைத் துன்பத்தை நீக்கிக் கொள்ளவேண்டும். உலகத்தில் வறுமை யுற்றவனே தன்புத்தியைப் பலவழிகளிலும் செலவிடுகிறான். அவனே புதிது புதிதான வழிகளையும் ஜனசமூக வாழ்க்கைக்குரிய அபூர்வ மான சாதனங்களையும் கண்டு பிடிக்கிறான். ஏனெனில் அவனுக்குப் புத்தியைச் செலவழிக்கவேண்டிய அவசியம் நேரிடுகிறது. இது வன்றி வறுமையடைந்தவன் இகலோக சாதகத்தை முன்னிட்டோ பரலோக சாதகத்தை முன்னிட்டோ தனது வறுமைத் துன்பத்தால் தெய்வத்தினிடம்பக்திசெலுத்துவதில் புத்தியைச் செலுத்தஅவசியம் நேரிடுகிறது. தனவந்தர்களுக்கு இப்படிப் புத்தியை உலக வாழ்வின் சாதகமாகவும் தெய்வவிஷயமாகவும் செலுத்த அவசியம் நேரிடாத தோடுகூட, செல்வச் செருக்கு அவர்களை இப்படிப்பட்ட வழிகளிற் பிரவேசிக்கவிடுவதில்லை. தனவந்தர்களுக்குப் பொருளால் உலகவா ழ்விற்குரிய தேவைகள் சுலுவில் முடித்துக்கொள்ளப்படுகின்றன. அவர்களுள் தெய்வபக்தியுள்ளவர்கள் காணப்படுவது அபூர்வம். நாம் இப்பொழுது கூறியபடி புத்திபை உலகவாழ்வின் சாதகத்தின் பொரு ட்டுச் செலவிடுவதால் இகத்தில் சுகமும், தெய்வசிந்தனையால் பரலோ கவாழ்வில் சுகமும் வறுமையை யடைந்த ஒருவன்பெறக்கடவன் என் பதாகிறது. முதலில், வறுமை எவனிடம் சேருகிறதோ அவனுக்கு இகபரசுகமில்லை என்று கூறினோம். இப்பொழுது வறுமையடைந்த

வனே இகபரசாதகம் பெறுகிருனென்றுங் கூறினோம். இதைச் சற்று விசாரிப்போம்; வறுமையடைந்த எவனுக்கும் பொருளீட்டவேண்டுமென்கிற அவா உண்டாகும். அந்தப் பொருளை எப்படிச் சம்பாதிக்கவேண்டும் என்கிற அறிவு உண்டாவதில்லை. சிலர் களவு, வஞ்சகம், பொய் முதலிய துன்மார்க்க வழிகளை யனுசரிப்பார்கள். சிலர் தமக்குக் கிடைத்த சத்சகவாசத்தாலோ அல்லது கல்விப்பயிற்சியாலோ விருத்தியடைந்த நல்லறிவை யுபயோகித்து "தீவினை விட்டீட்டல் பொருள்; என்பதை எண்ணி களவு வஞ்சகம் பொய் முதலாய துன்மார்க்கவழிகளை யொழித்து பொருளீட்ட முயலுவார்கள். இப்படிப்பட்ட புத்திமான்களுக்கே இகபர சாதகங்கள் பெறும் மார்க்கம் வறுமையாலேற்படும் அவசியத்தை முன்னிட்டுண்டாகும். ஆனால் வறுமையடைந்துள்ள பெரும்பாலார்க்கு நல்ல மார்க்கத்தில் சாதகங்கள் ஏற்படுவதில்லை. இது நிற்க, வறுமையடைந்த ஆடவன் ஒருவன் இகபரசுகங்களைப் பெறும்பொருட்டு அனுசரிக்க வெண்டிய ஒழுங்குகள் எவை யெனில்,

(1) சன்மார்க்கம் சத்தியம் இவைகளைப் பிரதானமாகக் கொள்ளவேண்டும்.

(2) யாரால் எவை நேரிடினும் எல்லாந் தெய்வச்செயலெனக் கொண்டு மனம் பொறுத்திருக்கவேண்டும்.

(3) டம்பம், அகங்காரம், கோபம் முதலியவைகளை யொழிக்கவேண்டும்.

(4) எல்லாரையும் தமது சகோதரர் போல் பாவித்து நடக்கவேண்டும்.

(5) பெரியோரிடத்து வணக்கமும் உற்றவிடத்துத் தன்னாலியன்ற உதவியும் புரியவேண்டும்.

(6) தெய்வபக்தியிற் சிறிதும் வழுவலாகாது.

(7) எல்லாரும் தன்னை நேசிக்குமாறு நடந்துகொள்ள முயல வேண்டும்.

ஆகிய இவைபோன்ற உத்தம மார்க்கங்களையே அனுசரிக்க வேண்டும். மேற்கண்ட வழிகளை வறுமையடைந்த ஒரு ஸ்திரீயும் அனுசரிக்கவேண்டுமென்பதாயினும் முக்கியமாய் அந்த ஸ்திரீ தன் கணவனிடத்து அனுசரிக்கவேண்டிய சில அம்சங்கள் உள. அவை யாவன:—

(1) புருஷன் தேடிக்கொண்டு வருவதை யலட்சியம் செய்யாது சீராய்ச் செலவிட்டுக் குடும்ப நிர்வாகத்தைச் சரிவர நடத்திவர வேண்டும்.

(2) அக்கம் பக்கம் பார்த்துப் புடவைக்கும் நகைக்கும் புருஷனைத் தொந்தரவு செய்யலாகாது.

(3) புருஷனை அலட்சியம் செய்யலாகாது. அவனிடத்துப் பக்தியாயிருந்து அவன் வறுமையால் வருந்தும் போது வருத்தந்தீர இனியவசனங்கள் பேசி, எவ்விதத்திலும் அதிருப்தி காட்டாமல் இருந்துவர வேண்டும்.

(4) புருஷன் மனதுக்கொவ்வாத காரியங்களைச் செய்யக் கூடாது. எந்த விஷயத்திலும் ஒத்துப்போகவேண்டும். ஆகிய இவைபோன்ற உத்தம மார்க்கங்களை அனுசரித்து வருவதே நன்மை தரும்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை"

என்று கூறியுள்ளபடி மேற்கண்ட நற்குணங்களோடு கூடிய ஒரு ஸ்திரீயை ஒருவன் மனைவியாகப் பெறுவானாகில் அவன் வீட்டில் இல்லாததொன்றும் இல்லையாம். இதுவன்றி மற்றவரும் "பர்த்தாவுக்கேற்ற பதிவிருதை யுண்டானால், எத்தாலும் கூடிவாழலாம்" என்று கூறியுள்ளார். இதனைநோக்க, புருஷனுக்கொத்த ஒரு கற்புடைய குலமங்கை வாய்ப்பாளாகில் அவன் எந்த ஸ்திதியிலிருப்பினும் வாழ

லாம் என்பதாகிறது. ஆகவே உலகத்தில் வறுமையடைந்தபோது ஸ்திரீ புருஷர்கள் ஒத்து வாழ்வதே அத்துன்ப நிவர்த்திக்குப் பெரிய சாதகமெனக்கொண்டுய்வாராக.

# செல்வம்.

---

செல்வம் என்பது திரு, சம்பத்து, ஐஸ்வரியம் எனப் பல பொருள் தரும் பதம். இது கல்விச்செல்வம் பொருட் செல்வமென இருவகைப்படும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகல கோடி ஜீவராசிகளுள் மனித வகுப்பாரே இவ்விரு செல்வங்களையும் அடைந்து வாழ்கிறவர்கள். அவரவர் செய்த பூர்வபுண்ணியங்களுக்குத் தக்கபடி இவ்விரு செல்வங்களை மனித வகுப்பார் அடைகிறார்களென்று சொல்லப்படுகிறது. இவ்விரு செல்வங்களும் உலக வாழ்விற் கின்றியமையாதனவாகும். ஆதலால் மனித ஜன்மமெடுத்தவன் எப்பாடு பட்டாயினும் இவ்விரு செல்வங்களையும் அடையப் பிரயத்தனஞ் செய்யவேண்டும். பொருட் செல்வமானது கல்விச் செல்வத்துள்ளடங்கும். அதாவது கல்வியுள்ளவனுக்குப் பொருள் சம்பாதிக்கமுடியும். கல்விச்செல்வமானது பொருட் செல்வத்திலடங்காது. ஏனெனில், பொருள் செலவு செய்து தான் கல்விச்செல்வத்தைப்பெறவேண்டு மென்பதில்லை. பொருள் செலவு செய்யாமலே கல்விச் செல்வத்தை அடையக்கூடும். இதனால் கல்வியில் பொருளடங்கியும், பொருளில் கல்வியடங்காமலிருப்பதும் நன்கு விளங்குகிறது. கல்வியானது மனவறிவிற்கு ஒரு தூண்டுகோல் போலிருந்து, மனதில் தெளிவைக்கொடுத்து, உலககாரியத்தைச்சரிவர நடத்தும்படியான ஆற்றலை யளிக்கும் சிறந்த செல்வம். உலககாரியத்திற்குப் பொருட் செல்வ மின்றியமையாததாயினும் அப்பொருட் செல்வத்தின் வருவாய்க்கும் அப்பொருளைப் பாதுகாப்பதற்கும் அதனை விருத்திபாக்குவதற்கும் பிரதானமான அறிவைத்தருவது கல்வியே

யாம். இதனாலேதான் "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என்றும் "கண்ணுடைய ரென்பர் கற்றோரென்றும்" பெரியோர்கள் கல்வியைச் சிலாகித்துக் கூறியுள்ளார். இதுவன்றி கல்விச் செல்வமுடையவர்களே உலகத்தில் மேலோர்களென்றும் அறிவுடையவர்களென்றும் புகழப்படுகிறார்கள். அஃதற்றவர்களை உலகம் மூடர்களென்றும் கயவர்களென்றும் இகழ்கின்றதுங் காண்க. அன்றியும் "ஓதாதார்க்கில்லை உணர்வொடு ஒழுக்கம்" என்று நமது மூதாதை ஔவைப் பிராட்டியார் கூறிய அருமைத் திருவாக்குக் கிணங்க, படியாதவர்களுக்கு உணர்வும் ஒழுக்கமும் ஏற்படுவதைக் காண்கிலேம். நியாயாநியாயம், நன்மை தீமை, நல்லோர் பெரியோர், என்பனவற்றின் பேதங்களை உணர்ந்து மனித வகுப்புக்கேற்றவாறு நடந்து கொள்வதுமில்லை. கேவலம் மிருகமாகப் பாவிக்கத்தக்க ஒழுக்கங்களைக் கையாடுகிறார்கள். கல்விச் செல்வத்தால் ஒரு மனிதன் அடையக்கூடிய பயன் இவ்வளவு என்பதையும் அதனுடைய அளவிடப்படா மகிமையையும் அதன் பாகுபாடுகளையும் இப்புத்தகத்தின் மற்றொருபக்கம் காண்க.

பொருட் செல்வமானது—"பொருளிலார்க்கிவ்வுலகமில்லை" என்றபடி உலகத்தில் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் இந்தப்பொருட்ச் செல்வம் இன்றியமையாதது. இந்தப் பொருளை ஔவைப்பிராட்டி" திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று கூறியுள்ளதை நோக்கின், ஒருவன் எப்பாடுபட்டாயினும் திரவியத்தைத் (பொருளை) தேடவேண்டுமென்றேற்படுகிறது. பிறகு "பொருடனைப் போற்றி வாழ்" என்று அந்த அம்மையாரே திருவாய் மலர்ந்துள்ளதை ஆராயின், தேடிய பொருளைப் போற்றிவாழ வேண்டுமென்றாகிறது. போற்றி வாழ்வதாவது காப்பாற்றி, துர்விநியோகம் செய்யாமல் வாழவேண்டும். ஒருவன் தான் பொருளைத்தேடுவதற்கும் அப்பொருளைப்போற்றி வாழ்வதற்கும் அறிவு என்கிற அரும்பொருள் அவனிடத்துப் பிரகாசிக்கவேண்டும். அத்தகைய அறிவு கல்வி யொன்றாலேயே பிரகாசிக்கத்தக்கது. பொருட் செல்வம்

படைத்தவர்கள் அகங்காரங் கொண்டு கண்தலை தெரியாமலும் தெய்வபக்தியில்லாமலும் திரிவது உலகத்தில் சகஜம். தங்கள் வாழ்வைச் சதமென்றெண்ணி, தங்கள் இந்திரியங்கள் தூண்டும் வழியிற் சென்று, செய்யத்தகாத காரியங்களையும் செய்கிருர்கள். இவர்களுக்குக் கல்விச்செல்வமும் சேருமாகில், பொன்மலர்க்கு வாசனையுண்டானது போலப் பரிமளிக்கும். மேற்கூறிய தீங்குகளுக்கு இடங்கொடுக்காது. உலகத்திற் பெறுதற்கரியனவாய் நிலையாமையிற் சிறந்தனவாயுள்ள எல்லாப் பொருள்களிலும் யாக்கை, இளமை, செல்வம் என்னும் இம்மூன்றும் சிறந்தன. இவற்றுள் நிலையாமையிற் மிகச் சிறந்தது செல்வமேயாம். புருட ஆயுள் நூறு வயதென்றும் இளமைப்பருவம் முப்பது வயதென்றும் அறிஞர்கள் யாக்கைக்கும் இளமைக்கும் ஓர் காலவரையறை நிர்ணயித்திருக்கிருர்கள். அங்ஙனம் செல்வத்துக்கு ஒரு காலவரையறை எவரேனும் ஏற்படுத்தி யிருப்பதைநாம் யாண்டுங் கண்டதில்லை. ஆன்ருேர், "செல்வம் சகடக்கால் போலவரும்" என்று கூறியுள்ளதும் இதனாலேயன்ருே? "சகடக்கால் போலவரும்" என்பதாவது வணடிச் சக்கரம் மாறிமாறி உருளுவதுபோல, ஒருவரிடத்தில் நில்லாது மாறிக்கொண்டேயிருக்கும். இன்று லக்ஷாதிபதியாயிருக்கும் பிரபுக்கள், நாளை பிக்ஷையெடுத்து வயிறு வளர்ப்பதையும் நாம் பிரத்தியக்ஷத்தில் பார்க்கிருேம். இப்படிச் செல்வமானது ஓரிடத்திலும் தங்காமற் செல்கின்றது.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவணதெய்த விருதலையு மெய்தும்"

என்று அறிஞர் கூறியதற்கேற்ப அறம், பொருள், இன்பம் என்பனவற்றுள் நடுவணதாகிய பொருள் கைகூடுமாயின், அறமும் இன்பமும்தானே வந்தெய்துமாதலாலும், அது வெகு சீக்கிரத்தில் உடையவனை விட்டகலும் இயல்பினையுடையதாதலாலும் உலகத்தவர் அதனிடத்து அதிக விருப்பங்கொள்ளுகிருர்கள் என்றறிக. எது அதிசீக்கிரத்தில் அகலுந்தன்மையதோ அதில் அதிகப்பிரியமுண்டாவதும்

அதை மறுபடியும் பெறமுயல்வதும் உலகத்தவர்களுக்கு சகஜம். உலகத்தில் அநேகர் இப்படி ஒரு நாள் இருந்த இடத்தில் ஒருநாள் இல்லாது மாறி மாறிச்செல்லும் இந்தச் செல்வத்தைப்பெற்றதும், அந்தச் செல்வந் தங்களிடத்திலிருப்பது நிச்சயம் என்று நம்பி, இவ் விதமே அநித்தியமாகும் உலக இன்பத்தைப்பெறுவதில் மட்டும் புத்தி செலுத்துகிறார்களே யல்லது, இகபரம் இரண்டிலும் சுகத்தைக் கொடுக்கும் தருமத்தைச் சிறிதும் நினைப்பதில்லை. இது கல்வியறி வில்லாக் குறைவாலேயே ஏற்படுகின்றது. செல்வம் வந்த காலத்துக் காலதாமதமின்றித் தனக்கும் பிறருக்கும் பெரும்பயனைத் தரத்தக்க வைகளான கருமங்களையும் தானதருமங்களையுஞ் செய்யவேண்டும். இப்படிச் செய்து இகபர சாதகங்களைப் பெறுவதை ஒழித்துச் சிலர்,

"உடா அது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடா அத நல்லறமுஞ் செய்யார்—கொடா அது
வைத்தீட்டினா ரிழப்பர் வான்றோய் மலை நாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி"

3459

என்னும் அமுதத்திருவாக்குக்கு உதாரணமாகின்றனர்.

(இதன்பொருள்) வான்தோய்—சுவர்க்கத்தைத் தீண்டுகின்ற, மலை நாட-மலை நாட்டரசனே; உடாதும்—நல்லாடைகளை உடுக்காமலும், உண்ணாதும்-ஐம்புலநுகர்ச்சிகளை அனுபவியாமலும், தம் உடம்பு—தம்முடம்பை, செற்றும்—வருத்தியும், கெடாத—தாம் கெடாமைக்குக் காரணமாகிய, நல் அறமும்—துறவறத்தையாயினும், செய்யார்—செய் யாமலும், கொடாது உம்—(வறியவர்க்குக்)கொடாமலும், ஈட்டி வைத் தார்-பொருளைத் தேடிவைத்தவர்கள், இழப்பர்—அதனை இழந்தவரா வர்; (அதற்கு)ஈட்டி உய்க்கும்—(தேனைத்தேடி) கூட்டிற்சேர்க்கும், தேனீக் கரி—தேனீக்கள் சாட்சியாம். கருத்தென்னவெனில், நல்ல ஆடைகளை யுடுக்காமலும் பஞ்சேந்திரியங்களின் நுகர்ச்சிகளை யனுப விக்காமலும் தாம் கெடாத மார்க்கத்தைத்தேடாமலும் வறியோர்க் குக் கொடாமலும் தேடிவைக்கப்படும் ஒருவனுடைய பொருளா

னது, தேனீக்கள் சேகரிக்கும் தேன் எட்டபடி அவைகளுக்கு உப யோகப்படுவதில்லையோ, அது போல் ஈட்டுவோன் அனுபவித்தற்கில் லாமற் போய்விடுமென்றறிக.

இது இப்படியிருக்க, கல்விச்செல்வமுடையவருக்குச் சென்ற இடமெல்லாம் புகழ்கிடைக்கும். செல்வம் படைத்தவனுக்கு தன் தேசமோ தன் கிராமமோ இவைகளில்தான் சிறப்புண்டு. கல்விச் செல்வம் பிறருக்குப்போதிக்குந் தோறும் விர்த்தியாய்க்கொண்டே வரும். பொருட் செல்வம் பிறருக்குக் கொடுக்குந்தோறும் குறைந்து கொண்டேவரும். இதைப்போல் கல்விச்செல்வம் நிலையாததன்று.

"சேதிக்கலாந் தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்க லாமுறப் போதிக்க லாஞ்சொன்ன தேதுணிந்து
சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்தி தானெய்தலா
மாதிக் காலமயில் வல்லிபொற் றூளை யடைந்தவர்க்கே"

என்று கல்விக் சதிதேவதையாகிய கலைமங்கையின் பாதாரவிந்தமடை ந்தவர்க்கு, மேற்கண்ட செய்யுளிற் கூறியவாறு செய்தல் சாத்தியமெ ன்று கம்பர் தாம் இயற்றிய சரஸ்வதி யந்தாதியிற் கூறி யுள்ளாராத லின், அந்த ஜகதீசுவரியின் பேரருளால் பெறத்தக்க கல்விச் செல்வ த்தை யுடையவர்களுக்கும் மேற்கண்ட செய்யுளிற் போதரும் பயனை அனுபவிக்கும் பாக்கியமுண்டு என்பது யாவருக்கும் ஒப்பத்தகுந்தது ஆதலின், இத்தகைய கல்விச்செல்வம் பொருட் செல்வத்திலும் சிறப் புடைத்தென்பதற்கு யாதுதடை?

செல்வம் என்கிற விஷயத்தினின்று நாம் அறிந்து கொண்ட வைகளெவை யெனில்:—

1. செல்வம்—கல்விச்செல்வம் பொருட் செல்வமென இருவகைப்ப டும்.

2. இவ்விரு செல்வங்களும் இகபரவாழ்விற்குச் சாதனமானவை கள்.

3. பொருட் செல்வம் கல்விச் செல்வத்துள்ளடங்கியது. கல்விச் செல்வம் பொருட் செல்வத்தில் அடங்காதது.

4. கல்விச் செல்வமில்லாவிடில் பொருட்செல்வம் பிரகாசியாது.

5. பொருட்செல்வம் கொடுக்குந்தோறுங் குறையுந்தன்மை யுடையது. கல்விச் செல்வம் பெருகுந் தன்மையுடையது.

6. செல்வத்தை இகபரசாதகமான காரியங்களில் பிரயோசனப் படுத்தாமல் சேர்த்து வைப்பது கூடாது.

7. கடைசியாக நாம் அறிந்துகொண்டது கல்விச் செல்வமே பொருட் செல்வத்தினும் சிறப்புடையது என்பதாகையால், மனித ஜன்மமெடுத்தவன் எப்பாடுபட்டாயினும் கல்விச் செல்வத்தைப் பெறுவானாயின் பொருட் செல்வந் தானே யுண்டாகுமென்பதே.

## சகோதரத்வம்.

சகோதரத்வம் என்பது உடன் பிறத்தலில் உண்டாகும் சம்பந்தமாகும். அதாவது ஒரே தாய் வயிற்றில் ஜனித்தலில் ஏற்படும் சம்பந்தம். ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் சிறுவயது முதல் சகோதரத்வம் பாராட்டி நேசித்து வருவது யாவரும் அறிந்த விஷயம். இந்த நேசமானது இரத்த சம்பந்தத்தால் இயற்கையிலேயே ஏற்படுவதாகும். இந்த இயற்கை நேசமானது சிறு வயதில் ஏற்படுகிறது. வயதில் பெரியவராகுங் காலத்தில் இந்த இயற்கை நேசத்தோடு, அறிவில் மேம்படுவதால் உண்டாகும் நேசமும் சேர்கிறது. இப்பொழுது பிந்திப்பிறந்தவன் முந்திப் பிறந்தவனிடத்தில் அண்ணன் என்கிற முறைகொண்டு அவனது இன்பதுன்பம் தன்னதாகப்பாவிக்கிறான். இதேமாதிரி முந்திப் பிற

ந்தவன் பிந்திப் பிறந்தவனிடத்தில் தம்பி என்கிற முறைகொண்டு அவனுடைய இன்பதுன்பத்தைத் தன்னதாகக்கொள்கிருன். இந்த நேசமே பெரும்பான்மையரிடத்துக் காணப்படுவதாகும். இத ற்கு விரோதமாக நடக்கின்றவர் சிலரேயாவர். இதைப் பற்றி நாம் இப்பொழுது எழுதப் புகுந்தது யாதெனில், இந்த சகோதரத் வம் என்பது அநேகமாய்த் தற்காலத்தவருள் நிலைப்பது விவாக மாகும் வரையிலென்றே சொல்லவேண்டியதாயிருக்கின்றது. ஏனெ னில், விவாகமாகும் வரையில் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்கள் இணைபிரியா நேசம்பாராட்டி வருவதையும், பிறகு தங்கள் தந்தை தேடிய சொத்தின் காரணமாகவோ அல்லது விவேகத்தாழ்வாலோ அல்லது ஸ்திரீகளுக்குள் ஏற்படும் சச்சரவாலோ சண்டையிட்டுக் கோர்ட்டேறிக் காசுபறிகொடுக்கும் குடும்பங்கள் பல. இது பிரத்தி யக்ஷம். தாங்கள் ஒருதாய்வயிற்றுப் பிள்ளைகள் என்பதையும் மற ந்து, முந்திவைத்திருந்தநேசத்தையும் துறந்து, காசு பெரிதென்றும் மனையாள் போதிப்பது வேதவாசகமெனக்கொண்டும் சகோதர துரோகத்துக்குத் துணிந்து, சண்டையிடுவோரை நாம் பகுத்தறி வுடைய மனிதரெனக் கூறுதல் தகுமோ! உதாரணமாக, பெற்றோ ரையிழந்த இரண்டு சகோதரர்களில், மூத்தவனுக்கு விவாகமாகி மனைவி வீட்டுக்கு வந்திருக்கிருளெனக் கொள்வோம். வந்தவள் என்னசெய்கிருளெனில், தன் புருஷனை மயக்கி அவனுக்கு அவன் சகோதரனிடத்தில் வெறுப்புண்டாகும்படி ஒவ்வொருநாளும் போதிக்கத் தலைப்படுகிருள். புருஷன் ஜனனகாலமுதல், தன்னை நேசித்தும் உண்மையாக நடந்து வந்தவனுமான தம்பியினிடத்தில் வெறுப்புக்கொள்கிருன். இதன் மூலமாகத் தன்மனைவி அவனை என்ன அவமரியாதையாய் நடத்திலுைம் கவனிப்பதில்லை. இது இப்படியிருக்க, மனைவிக்கே அடிமையாவார் சிலருண்டு. அப்படிப் பட்டவர்கள் தங்கள் மனைவி செய்வது அக்கிரமம் என்று தெரிந்தும் கண்டிக்கமுடியாமல், தங்கள் சகோதரனையும் அவளுக்கு அடிமைப் படுத்துகிருர்கள். இதுகாரணமாக, அநேக குடும்பங்களில் பந்தி

வஞ்சனையும் சிறுமைப்படுத்தித் துன்புறுத்துவதும் ஏற்படுவதை நாம் பிரத்தியக்ஷத்தில் பார்த்திருக்கிறோம். அதிலும் சகோதரர்களில் ஒருவனுக்கு உத்தியோகம் உயர்ந்திருந்து ஒருவனுக்குத் தாழ்ந்திருப்பின், தாழ்ந்த உத்தியோகத்திலிருப்பவன் படும்பாடு தெய்வத்துக்குத்தான் தெரியும். ஒரு அண்ணன், தம்பியைத் துன்பப்படுத்துவதோ அல்லது தம்பி அண்ணனைத் துன்பப்படுத்துவதோ ஒருவாறிருக்க, அண்ணன் மனைவியால் தம்பி துன்புறுவதும் தம்பி மனைவியால் அண்ணன் துன்புறுவதும் அநேக குடும்பங்களில் நிகழ்கின்றன. இது மிகவும் பரிதபிக்கத்தக்கதே. மைனராகவிருக்கும் தம்பி என் செய்வான் பாவம்! சம்பாதிக்கத் திறமையற்ற அண்ணன் யாது செய்வான்! சம்பாத்தியமில்லாத தம்பிதான் யாது செய்வான்? புருஷர்களாயினும் விவாகமாகும் வரையில் ஒற்றுமையாயிருந்து பிறகு பலகாரணக்களைக் கொண்டு சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள். ஸ்திரீகளோவெனில், சொந்தச்சகோதரியோடு ஒருமாத காலஞ் சேர்ந்திருப்பார்களானால், அவர்களுக்குள் அநாவசியமான பொறாமை ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் ஒற்றுமையாயிருந்து, ஆக வேண்டுவ தொன்றுமில்லை. ஆகையால் அவர்களைப்பற்றி நாம் அதிகம் பேசவேண்டுவதில்லை. பிரிந்து அவரவர் புருஷன் வீட்டில் வாழவேண்டியவராகவே யிருக்கிறார்கள். அவர்களுடைய குணத்துக்கு மட்டுமே இவ்விடம் எடுத்துக்காட்டினேம். ஆகவே மனைவியின் துர்ப்போதனையாலும் சொத்து விஷயமாகவும் கூடப்பிறந்த சகோதரனை வெறுக்கும் ஒரு மனிதனையும், சகோதரத்வத்தைக் கெடுக்கப் புருஷனுக்குப் போதிக்கும் ஒரு ஸ்திரீயையும், அறிவாளர் மிருகத்தினும் கடைகெட்டவர்களென்று கொள்வார்களல்லது, ஒருக்காலும் மனிதர்களென்று கொள்ளார்கள். இது நாகரிகமும் கல்வியபிவிருத்தியும் அதிகமாகி வருகிறதென்று கருதும் இக்காலத்தில், மேம்பட்டு வருவது மிகவும் பரிதபிக்கத் தக்கதாயிருக்கிறது. இதற்குக் காரணம், நமது பள்ளிக்கூடங்களில் சிறுவயதில் ஸதீரீகளுக்கேனும் சரி, புருஷர்களுக்கேனும் சரி, சகோதரத்வம் தர்ம நியாயம் முத

வியவைக்ளைப் போதிக்கும் நூல்கள் கற்பிக்கப்படாததேயாம் ஸ்ரீராம பிரானும் அவர்தம்பி இலக்ஷ்மணரும் பாராட்டிவந்த சகோதர பாவத்தைப் புத்தகத்தில் படிக்கும்போதே மனமுருகாதவர் இரார். இப்படிப்பட்ட சரித்திரங்களை அடிக்கடி நம் சிறுவர் சிறுமிகள் படித்துவருவார்களாகில், இந்த மதியீனமான செய்கை இருவர் பாலும் ஒருவாறு நீங்குமென்பதில் ஐயமில்லை.

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டுதாந் தேடு பொருள் அவர்தேடு பொருளவர்
கொள்கோதில் புகழ்தம் புகழெனத்
தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவந்
தீதவர் தவமாமெனச்
சீவனொன் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
சீறரவ முனிவாய்தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருட னிறைத்திடுங்
கொள்கை போற் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவதுவே தருமமாம்
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீசுவரதேவனே

என்று அறப்பளீசுவரசதகம் என்னும் நூலியற்றிய மகாகவிஞர் சகோதரர் ஒற்றுமையைப்பற்றிக் கூறியுள்ளதையுங் கண்டுணர்க.

## பொறுமை.

மனிதன் அடையவேண்டிய குணங்களில் பொறுமை மிகவும் முக்கியமானது. அதுவே இவ்வுலகத்தின்கண் ஒருவனுக்குப் பெருமையையும், கீர்த்தியையும் உண்டாக்கும். எடுத்தகாரியத்தை

முடிப்பதற்கதுவே முக்கிய சாதனமாகும். கோபம் சண்டாளமென்ற படி பொறுமையாற் செயித்தவர்களுண்டே யொழியக் கோபத்தாற் செயித்தவர்கள் கிடையாது. இதனாலேதான் யோகிகளும் முனிவர்களும் பொறுமையை முக்கியமாகக் கொண்டாடுகிறார்கள். ஒருவனுக்கு எவ்வளவாபத்து வந்தகாலத்தும், எவ்வளவு இடர்வந்து நேரிடினும் பொறுமையை விடலாகாது. அது எவ்விதத் தீங்கினின்றுங் காப்பாற்றும். அதுவே மற்றகுணங்களுக்கெல்லாம் மூலாதாரம். பொறுமையில்லாவிடின் தர்மம், சத்தியம் முதலிய குணங்களெல்லாம் சீர்குலைந்து போய்விடும். பொறுமையால் இராமர், அரிச்சந்திரன், தர்மபுத்திரர் முதலியமகான்கள் நற்பேறு பெற்று வாழ்ந்ததும், அஃதின்மையால் இராவணன், துரியோதனன் முதலியவர்கள் கெட்டதும் உலகமறிந்ததே. ஒருவனுக்கு எவ்வளவுதிரவியம், பெருமை, மகிமை இவைகள் வந்துற்றாலும் இவைகளைக் காப்பாற்றி பிரசித்திபெறச் செய்வது பொறுமையேயாகும். அப்பொறுமையினால் வசிஷ்டர் நற்பேறுபெற்றார். பொறுமையில்லாமையால் விஸ்வாமித்திரர் அவஸ்தைப்படும்படி நேரிட்டது. நிழலினருமை வெயிலிற்போனாற் றெரிவதுபோல, பொறுமையின் நன்மை கோபத்தின் கெடுதலை அறியின் தெளிவாய் விளங்கும்.

‘சினத்தினால் வருந்தீமை தீப்பிறப்பு
மனத்தினீடிய மருட்கையும் வருமையுநரகு
மனைத்து நல்கிடு மாதலாலொருபொழு தயர்த்துந்
தனக்கு நல்லவன் வரைப்பனோ சீற்றமாந்தழலை,

2. நம்மை யார் என்னசொல்லினுந் தபையை மேற்கொண்டு பொறுத்தல் வேண்டும். வந்தவர் வாழ்த்தினும், வசையுரைக்கினுஞ், சந்தனம் பூசினுந், தசையைக்கொய்யினு மெல்லாம்விதியின் பயனென்றறிதல் வேண்டும். ஆகையால் பொறையே ஞானத்துக்குக் காரணமாகும். மேலும் பொறுமையால் அடக்க முண்டாகும். அடக்கமிருப்பின் எல்லாம் நிதானித்துச்செய்தலாகிய மேலான குணமுண்டாகும். இது நம்மை எவ்விதப்பிழையிலுஞ் செல்ல விடாது காப்பாற்

றும். பொறுமைக்கு இவ்வித மேன்மைகளெல்லா மிருத்தலால்யாரு மிதை யனுஷ்டிக்க வேண்டியது.

3. இது ஆடவர்களுக்கு எவ்வளவு இன்றியமையாததோ அதை விடப் பதின்மடங்கு ஸ்திரீகளுக்கும் இன்றியமையாதது. இல்லறதர்மம் சீர்பெற நடந்தேறுவது இக்குணத்தினுலேதான். கணவன் பிழை செய்யின் மனைவி பொறுத்தலும் மனைவி பிழைத்தாலாடவன் பொறுத்தலு மியல்பாயிருந்தால்தான் கிருகஸ்தாசிரம தர்மம் சரிவர நடக்கும். இல்லாவிடின் வீட்டில் எப்போது மொழுங்கு தவறியேயிருக்கும். தாயைப்போற் பிள்ளையென்றபடி தாய்மிகப் பொறுமை யுடையவளாயிருப்பின், மகன் அல்லது மகளும் அவர்களுடைய சந்ததியும் அந்தத்தாயுடன்பழகிப் பொறுமையையே கைக்கொண்டிருப்பார்கள். இதேமாதிரி ஒவ்வொருதாயு மிருப்பாளாயின், நந்தேபத்திலொவ்வொருவருங் குணசிரோன்மணிகளா யிருப்பார்களென்பதற் கையமுண்டோ? இதைத்தவிர நமக்கு வேறுபலமும் வேண்டுமோ? பகீரதன் கங்கையையும், தர்மபுத்திரர் ராஜ்யத்தையும், வசிஷ்டர் கீர்த்தியையும் பொறையின் வன்மையா லன்றோ அடைந்தார்கள். இதனுலேயே தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவனுர்,

"இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை" என்றும்
"ஒறுத்தாரை யொன்ருக வையாரே வைப்பர்
பொருத்தாரைப் பொன்போற் பொதிந்து"

என்றும் கூறியுள்ளார். ஆகையால் மனிதர்க்குப் பொறுமையே பூஷணமாகும்.

## அறிவு.

அறிவென்பது இயற்கை யறிவு செயற்கை யறிவென இருவகைப்படும். இயற்கை யறிவாவது மனிதனுக்கு ஜனனகால முதல் தோன்றுவது. செயற்கை யறிவாவது, பிறகு நல்லோர் பெரியோர்

கூட்டுறவாலும் சற்சகவாசத்தாலும் கல்வியினாலும் உண்டாவது. இயற்கை யறிவினால் மட்டும் ஒருவன் இகபரசாதகங்களைப் பெறுவது கஷ்டம். செயற்கை யறிவும் இன்றியமையாதது. அறிவானது சிறு வயதில் எந்த வழியில் செலுத்தப்படுகிறதோ அவ்வழியையே பிற்காலத்தும் பின்பற்றுமாதலால், ஆரம்பத்திலேயே நல்வழியிற் செலுத்தப்படவேண்டும். அதாவது தீய நடத்தையுள்ளவருடைய நட்பு, தீய வழியைப் போதிக்கும் நூல்கள் இவைகளை யகற்றவேண்டும். ஒருவனுக்கு நல்லோர் பெரியோருடைய சிநேகமும் இதபோதனை செய்யும் நூல்களிற் பயிற்சியு மிருக்குமேயாகில், அவன் எக்காரியத்தையும் எளிதில் முடிக்கவல்ல அறிவைப் பெறுவானென்பதில் ஐயமில்லை. ஆகையால் பெற்றோர்கள் தங்கள் மக்களை அறிவு என்னும் அரும் பெருஞ்செல்வத்தை மேன்மேலும் ஈட்டும் மார்க்கத்திலேயே பழகும்படி செய்யவேண்டும். முதலில் நல்ல நூல்களை நல்ல குருவினிடத்திற் பயிலும்படி செய்யவேண்டும். கல்வி பெருகப் பெருக அறிவும் விர்த்தியாகும். எப்படி யென்பதை,

"தொட்டனைத் தூறு மணற்கேணி
மாந்தர்க்குக் கற்றனைத் தூறுமறிவு"

என்றதால் ஆசிரியர் திருவள்ளுவர் விளக்கியுள்ளதைக் காண்க. ஆகையால், அறிவு விர்த்தியாவதற்குக் கல்வியை மேன் மேலும் பயிலுவது அவசிய மேன்பதாயிற்று. அதனால் தான்,

"கேடில் விழுச் செல்வம் கல்வி
யொருவர்க்கு மாடல்ல மற்றயவை"

என்று கல்வியின் பெருமையை விளக்கியுள்ளார். இப்படிப் பெறப்படும் அறிவானது,

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு,
முள்ளழிக்க லாகா வரண்"

என்ற திருவள்ளுவர் கூற்றுக்கிணங்க, ஒரு அரசனுக்கு இறுதி வாராமற் காக்குங்கருவிபோல்வது; இதுவன்றிப் பகைவரால் அழிக்க முடியாத உள்ளரணாக நிற்பது அறிவென்றுணர்க. இதனால் அறிவே மனிதனுக்கு இகபரசாதகங்களைக் கொடுக்கக்கூடியதாகிறது. அறிவினாலாகாததில்லை. பொருளும் புகழும் மற்றெதுவும் அறிவினாலேயே ஒருவன் பெறக்கூடுமல்லது வேறொன்றாலுமல்ல. மனிதர்களுக்கு அறிவு என்கிற ஒரு அரிய செல்வம் கடவுளால் அளிக்கப்பட்டிருப்பதினாலன்றோ, அவர்கள் மற்ற ஜீவராசிகளைவிட மேலானவர்களாக விளங்குகிறார்கள். அறிவே இப்பொழுது உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மின்சாரம் யந்திர இயக்கம் மற்றுஞ்சில அற்புதமான செய்கைகளுக்குக் காரணமன்றி வேறெதுவுமல்ல. அறிவாளர்க்குத் தன் தேசம் வேறுதேச மென்பதில்லை. எங்கு சென்றாலும் அவர்களோடே செல்வமும் புகழும் செல்லும். அங்கங்கே கௌரவமுண்டாகும். விசேஷமாக அறிவுடையவனுக்கு பகைவர்களிருக்க மாட்டார்கள். அவன் அவரவர்களுக்குத் தக்கபடி நடந்துகொண்டு மேன்மையோடு விளங்குவான்.

"அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்"

என்றபடி அறிவுடையவனை விரும்பாதார் அரிது. 'புத்திமானே பலவான்' என்றும் பெரியோர் கூறியுள்ளதைக்காண்க. அவனுக்கு எவ்வித ஆபத்து வரினும் தப்பித்துக் கொள்வான். சமையத்துக்கேற்ற உபாயம் அவன் மனதிலுதிக்கும். நன்மை தீமை யுணரும் சக்தி பெருகி நிற்கும். அற்ப புத்தி அவனிட மிருக்காது. ஆஸ்தி கோத்தமனாய் அவனே உலகம் புகழ விளங்குவான். ஆகையால், அறிவு என்னும் அரும் பெருஞ் செல்வத்தை எப்பாடுபட்டாயினும் மனித ஜன்மம் எடுத்த ஒவ்வொருவனும் தேடவேண்டுவது அத்தியாவசியமாகும்.

# நற்சினேகம்.

சிநேகமென்பது, பலர் ஒருங்குகூடி மனமொத்து வாழ்வதற் குரிய அன்புடைமை. அன்புடைமை ஒன்றே பலவகையாகக் காண ப்படுகின்றது. தாய் தந்தையினிடத்து உண்டாவது வேறு; தாரத் தினிடத்திலுள்ளது வேறு; புத்திரரிடத்திலுண்டாவது வேறு, மித் திரரிடத்திலுண்டாவது வேறு. அன்புடைமை ஒன்றேயாயிருந்தும் பாத்திர வேறுபாட்டால் அதுவும் வேருனதாகத் தோன்றுகிறது. இது சிநேகிதரிடமுண்டாகும்போது மித்திரத்துவ மென்னப்படுகின் றது. இந்தச் சிநேகம் பசு பட்சிகளிடத்திலுங் கூடச் சிறந்து விளங் கிறபடியால், சகல ஜீவ வர்க்கத்துக்கும் பொதுவான குணமென்ன லாம். எல்லா ஜீவனிடத்திலும் பொதுவாயுள்ள தரும மெதுவோ, அதைத் தெய்வீக குணங்களிலொன்று என்னலாம். இந்தக்குணத் தையுடையவர்கள் யாரோ அவர்களே சிநேகபாத்திரமாவார்கள். அவர்களுடைய சிநேகமே முடிவு வரைக்கும் நிலைபெறும். இந்தச் சிநேகமும் முதலன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகையாகும். முதலன்பு சிநேகனுடைய பெயர் கேட்ட மாத்திரத்தில் ஆனந்தம் ஜனித்து உள்ளம் பூரித்தலும், சிநேகன் எதிரிலிருக்கிற பொழுதும் இல்லாதபொழுதும் ஒரே மாதிரியான மரியாதை செலுத்துவதும், அவனைச் சதா நினைத்துக் கொண்டிருப்பதுமாம். சிநேகிதனைக் கண்டபொழுது மகிழ்தலும் பிரிந்தபொழுது மறத்தலும் கண்டா லொருமாதிரியும் காணுதபொழுது ஒருமாதிரியுமா யிருத்தலும் இடையன்பாம்; ஒரு உபாயத்தைப் பற்றிச் சிநேகித்தலும், தன் மனக் கருத்தை வெளிவிடாமல் சிநேகிப்பதும், சமையத்துக்குத் தக்கபடி நடத்தலும் கடையன்பாம். யாதொரு பிரயோஜனத்தையு மெதிர்பா ராமல் மனம் ஒற்றுமைப்பட்டுச் சிநேகிப்பதாகிய தலைநட்பே, மிகச் சிலாக்கிய முடையது. உலகத்தில் சிநேகிதரை யடைந்து வாழாதவ னில்லை. சிநேகிதரின்றிக் காரியங்கள் முடிவது கஷ்டம். சிக்கலான

விஷயங்களைப் பற்றி யோசனை கேட்பதற்கும் சிநேகமவசியம். காலப் போக்குக்கும் மனமொத்த நேசன் வேண்டுவது அவசியமாம். சிநேக ரில்லாதவன் நாட்டுக்குள் வசிப்பதிற் பயனில்லை. இது பற்றியே "எல் லாம், இவர்வரை நாட தமரையில்லார்க்கு, நகரமுங் காடு போன்று ங்கு" என்று கூறியுள்ளார். சிநேகரில்லாத நகரம் காடாமேயன்றி நாடாவதில்லை யென்று கூறியதனால், சிநேகமில்லாதவனுக்கு நகர வாசமே தகாதென்று காண்கிறது. இந்தச் சிநேகமானது இகபர சாத னமாக விருத்தலால், இதைப்பற்றி எல்லாரும் முக்கியமாய்க்கவனிக்க வேண்டும். ஆதலால் சிநேகஞ்செய்யும்போது பாத்திரமறிந்து சேர வேண்டும். அறிவுள்ளவரை யாராய்ந்தறிந்து சிநேகிக்க வேண்டும். இதையே "நல்லினஞ் சேர்தல்" என்று நூல்கள் கூறுகின்றன. நல் லினமாவது பிறப்பாலும் அறிவாலுமுயர்ந்திருப்பவர். பரம்பரை மானஞ் சிறந்த உயர்குடியிற் பிறவாதிருந்தால் அவர்கள் மானங் கரு தாது ஈனமான காரியங்களையும் விரும்பிச் செய்வார். அதனால் உல கம் பழிக்கும். மானத்துக் கஞ்சும் அறிஞர் ஈனத்தொழிலைச் செய்ய நாணுவர். ஆதலால் அறிவுள்ளோர் செயல்களெல்லாம் எல்லாராலும் புகழப்படும். அத்தகைய அறிவுள்ளவரோடு சேர்ந்தால் அவர் நம்மை நல்வழிப்படுத்தி உலகத்தில் கீர்த்தியும் மறுமையில் பேரின்பத்தையும் அடையச் செய்வார். இதனை,

"இம்மை யடக்கத்தைச் செய்து புகழ்ச்சி
உம்மை யுயர்கதிக் குய்த்தலால் — மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப் படுவர்"

என்ற செய்யுளாலுணரத்தக்கது. ஆதலால் இகத்தில் சிரித்து விளையாடிக் காலங் கழிப்பதற்காகச் சிநேகஞ் செய்யாமல், இம்மை மறுமை இரண்டிற்கும் சாதகமாகும்படி சிறந்த அறிஞரோடுகூடிச் சிநேகிப்பதே தகுதியாம். இத்தகைய நட்பை அவசரப்பட்டுச் செய்து விடுதல் கூடாது. குடி, குலம், ஒழுக்கம் முதலியவற்றை ஆராய்ந்த றிந்து பின்னர் சிநேகிக்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால், ஒரு சமையம் பின்னால் வருத்தப்பட நேரிடும்.

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை,
கடை முறை தான் சாந்துயரந்தரும்"

என்றுதிருக்குறள் கூறுகின்றது.

"அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வும் — நெறியறிந்த
நாற்சார்வு சாரக் கெடுமே வெயின் முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு"

என்றதனால், அறிவில்லாத இளம்பருவத்தில் மூர்க்கரோடு கூடிச் செய்த தீச்செயல் கூடப் பின்னர் அறிஞரோடு கூடினால் புல்லிற் பற்றிய பனியானது வெயில் முற்றினபொழுது விலகுதல் போல, ஒழியுமென்று விளங்குகின்றது. ஆதலால் ஒருவன் அறியாமையிலே மூடரோடுகூடிப் பாவ கர்மங்களைச் செய்தானாயினும் புத்தியுண்டானபின் அறிவுள்ளாரோடு கூடி நல்ல மார்க்கத்தில் நடந்து நன்மை பெறலாம்.

"கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
இடையாளார் தெங்கி னனையர் — தலையாயா
ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்ட ஞான்றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு"

என்றதனால் அதமமான சிநேகர் கமுகமரத்தை யொப்பாவார்; மத்திமர் தென்னைமரத்தை யொப்பாவார்;உத்தமர் பனைமரத்தை யொப்பாவரென்று புலப்படுகின்றது. பாக்குமரத்துக்கு இட்ட நாள் முதல் எப்போதும் நீர் பாய்ச்சி வளர்த்தாலன்றி, அது விருத்தியாய்ப் பலன் தராது. அதுபோல அதமர் சிநேகித்த நாள் முதல் தமக்கு உபகாரஞ் செய்து உபசரிப்பவரிடத்திலேதான் சிநேகித்திருப்பர். அவற்றில் சிறிது தவறினால் சிநேகம் போய்விடும். அவரோடு சிநேகிக்கக்கூடாது. தென்னைமரம் இட்டுச் சிலகாலந் தண்ணீர் வார்த்து விருத்தி பண்ணினபின்னர் பலன் தரும். அப்படிச்செய்யாவிட்

டால் அது விருத்தியாவதுமில்லை; பலன் தருவதுமில்லை. இத்தன்மையானவருடைய சிநேகமும் கொள்ளத் தகாது. பனைமரம், கொட்டைபோட்டதினம் தண்ணீர் வார்க்கப் பிறகு இட்டவனது உதவி வேண்டாமல் தானே விருத்தியாய்ப் பலன் தரும். அதுபோல உத்தமருடைய சிநேகம் உண்டான தினமுதல் யாதொரு பயனையும் எதிர்பாராமல் விருத்தியாய்ப் பெரும் பயன் தரும். ஆதலால் நற்குடியிற் பிறந்து நல்வழிப்பட்டு நல்லறிவுள்ளாரோடு கூடிச் சினேகிப்பதே தகுதியாம். இத்தகைய நல்லறிவாளர்க்கு உறவும் பழக்கமும் வேண்டுவதவசியமில்லை. மனமொத்திருந்தால் போதும்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா
வுணர்ச்சிதானட் பாங்கிழமைதரும்"

என்றது திருக்குறள். புணர்ச்சியாவது ஒரு நாட்டிற் குடியிருத்தலாமென்றும், பழகுதல் பலதடவை கூடியிருத்தலென்றும் பொருள் கொள்ளலாம். இதனால் சிநேகம் செய்வதற்கு மூன்று காரணங்களுள. அவை புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யென்னப்படுவனவாம். இவை மூன்றும் சிநேகஞ் செய்தற்கு வேண்டப்படும் சாதனங்களாம். அந்த மூன்றினுள்ளும் மனமொத்தலாகிய உணர்ச்சி அதிக விசேஷமுடையதென்பது.

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள்பவர்க்கு"

சிநேக குணமுடையான் ஒருவனோடு சிநேகஞ் செய்தபின் அந்தச் சிநேகத்தை விடுவதில்லை. ஆதலால், ஆராய்ந்தறியாமல் சிநேகஞ் செய்வதைவிடத் தீங்கில்லை. ஆராய்ந்தே சிநேகஞ்செய்யவேண்டும். எதனை யாராய்தலென்றால்,

" குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனு மறிந்தி யாக்க நட்பு"

ஒருவனுடைய குணத்தையும், நல்ல குடிப் பிறப்பையும், அவனிடத்திலுள்ள குற்றத்தையும், அவனது உற்றாரையும் ஆராய்ந்தறிந்து சிநேகஞ் செய்யவேண்டும். குற்றமில்லாதவருலகத்திலில்லை. யாரிடத்தும் ஒவ்வோர் குற்றம் இருந்தே தீரும். குற்றமில்லாதவரைத் தேடி நட்புக்கொள்வதென்றால் சிநேகிதரே யில்லையாய்விடும். அவன் செய்வதாகிய குற்றம் அறிஞரால் பொறுக்கக்கூடியதா அல்லவா வென்று விசாரித்தலாம். பொறுக்கக்கூடியதாயின் நட்புக்கொள்ளலாமென்பது. சுற்றத்தாரை யுடையவன் ஆபத்துக்குதவிபுரியும் வன்மையுடையவனாதலால், சுற்றமும் வேண்டப்பட்டது. சிநேகரிடம் சிறிது குற்றமிருப்பினும் அதனைப் பாராட்டலாகாது.

"மருவுக மாசற்றார் கேண்மை யொன்றீத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு"

உலகத்தொடொத்து நடக்கும் குற்றமற்ற அறிஞரது நேசத்தையேகொள்ளல் வேண்டும். அப்படியல்லாதவருடைய நட்பை அவருக்குவேண்டிய பொருளைக் கொடுத்தாவது விட்டுவிடவேண்டும்.

"குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல் வேண்டு நட்பு,
"அழச்சொல்லியல்ல திடித்து வழக்கறிய
வல்லார் நட்பாய்ந்து கொளல்"
"ஊதியமென்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்"

உயர் குடியிற் பிறந்து பழிக்குப் பயப்படுகின்ற அறிவுள்ளவனுக்கு அவன் விரும்பியவற்றைக் கொடுத்தாவது அவனோடு சிநேகஞ் செய்யவேண்டும்; நீதிக்கு விரோதமானவற்றை நாம் செய்யும் பொழுது மனம் வருந்தி யழும்படியாகப் பேசி அதை விலக்கியும், ஒரு தப்பிதத்தைச் செய்துவிட்டால், அந்தக் குற்றத்தை மறுபடியும் செய்யாதிருக்கும் பொருட்டு வருத்தியும் கூறுமியல்புள்ளவரை யாராய்ந்து சிநேகிக்கவேண்டும். ஒருவனுக்குப் பாக்கியமென்பது என்ன

வென்றால் மூடர் சிநேகத்தை ஒழித்து விடுதலாம் என்பனவாதி முதுரைகளை யாராய்ந்துணர்ந்து தகுதியானவரோடு கூடவேண்டும். கூடின் அவர் நன்னெறியுடையவராதலால், நம்மையும் நல்வழிப்படுத்தி யிம்மை மறுமை இரண்டிலும் பெரும்பயனடையும்படி செய்வார்கள். குடிப்பிறப்பு, குணம், அறிவு முதலிய இல்லாத கீழ்மக்களோடு கூடினால், இழிதொழிலுடைய அவர், நம்மைத் துன்மார்க்கத்தில் நடக்கச் செய்து இம்மையில் பழியும் மறுமையில் நரக துன்பமும் அடையச் செய்வர். ஆதலால் அவரது சிநேகத்தை யொழித்து விட வேண்டும். இவ்வாறு நூல்களுடைய கருத்துணர்ந்து அச்சிநேகிதரோடு கூடி வாழ்வதே பேரின்பத்துக் கோப்பாம். மனமொத்த சிநேகிதரோடு சம்பாஷிப்பதிலும் வேறு ஆனந்தமேது என்றும் ஒருவனுக்குச் சிநேகிதனிடத்திலுண்டான விருப்பம், தாய் தந்தையர், சகோதரர், பத்தினி முதலானவரிடத்திலு மிராது என்றும் பஞ்ச தந்திரத்தில் கூறியநட்பு, பனைமரம் போல்வதாகிய தலை நட்பேயாம். இதனால் சிநேகிதமென்பது உலகத்தி லடையத்தக்க பேறுகளிலொன்று என்று விளங்கப் பெறுதலால், பெற்றோர்கள் தங்களுடைய சிறுவர் சிறுமிகளுக்குத் துர்ஜன சகவாசம் நேராதபடி ஜாக்கிரதையாய்ப் பார்துகாத்து, சற்ஜனருடைய கூட்டுறவில் பழகக் கூடியவரையில் பழக்கவேண்டியது அவர்களுடைய கடமைகளிலொன்றென்று கருதவேண்டும்.

# தேசசஞ்சாரம்.

---

தேசசஞ்சாரம் என்பது யாத்திரை எனப்படும். மனித வகுப்பார் இகபரசாதகமாகக் கொள்ளும் கல்வியைப் போல் தேசசஞ்சாரமும் இன்றியமையாததொன்று. ஏனெனில், தேசசஞ்சாரம் செய்வதால் விவேகமும் அடக்கமும் உண்டாகும். உண்மையில் கல்வியிலோ அல்லது செல்வத்திலோ முற்பட விரும்புவோர் தேசசஞ்சா

ரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். தேசங்கள் தோறும் பாஷைகள்வேறு யிருப்பதுமல்லாமல், ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் சமர்த்தர்களாயிருப்பார்கள். இதுபோலவே, ஒருவனிடத்தில் நற்குணமும் ஒருவனிடத்தில் தீயகுணமு மிகுந்திருக்கும். ஒருவன் சாந்தமாயிருப்பான். ஒருவன், கோபமுடையவனுக விருப்பான். தேசசஞ்சாரம் செய்யும் ஒருவன் இவர்களனைவரையும் சந்திக்க நேரிடும். இவ்விதம் சந்தித்துப் பார்க்கும்போது, கல்வியில் தன்னைவிடப்பெரியவனில்லையென்று நினைத்திருப்பவன், தன்னைக்காட்டிலும் மேம்பட்டவனைக் காண்பானுபின், தன் கர்வமடங்கி வெட்கமுறுவான். இவ்விதமே நற்குணம், தீயகுணம், கோபம், சாந்தம் முதலியவைகளிலும் விடவேண்டியவைகளை விட்டுக் கொள்ளவேண்டியவைகளைக் கொள்வான். தான் எது கண்டானே அதுவே உலகம் எனக் கொண்டு வாதாடுவதையும் ஒழிப்பான்.

பூர்வம் இந்துக்கள் தேசசஞ்சார மென்பதை முக்கியமாகக் கொண்டிருந்ததாகவே தெரிகிறது. எப்படியெனில், வித்தியார்த்திகள் குருகுலவாசம் செய்ததும் யத்திரை போய் வந்த பின்னர் தான், அவர்களுக்கு விவாகாதி சம்ஸ்காரங்களைச் செய்விக்கிறதென்னும் வழக்கமிருந்திருக்கிறது. அவ்வழக்கத்தின் காரணமாகத்தான் இப்போதும் விவாககாலங்களில் மணமகனைக் காசியாத்திரை செல்ல விடுவதுமெனவறிக.

தற்காலத்தில் இங்கிலாந்தில் கல்வி கற்கும் மாணக்கர்களில் பெரும்பான்மையோர், தங்கள் படிப்புமுடிந்ததும் பலதேசங்களுக்கு யாத்திரை செல்வதை வழக்கமாகக் கொண்டுவருகிறார்கள். வித்தியார்த்திகள் யாத்திரை செய்தால் தங்கள் புத்தகங்களிற் படித்த விஷயங்களைக் கண்கூடாகக் கண்டுகளிக்க நேரிடுகிறது. வித்தியார்த்தி மட்டுந்தான் யாத்திரைசெய்ய வேண்டுமென்பதில்லை. சரித்திமெழுதுகிறவன் யாத்திரைசெய்யின் அவன்புத்திவிசாலப்பட்டுச் சரித்திரம் தேசாசாரங்களுக்குத் தக்கபடி எழுதப்படும். வர்த்தகர்கள்

தேசசஞ்சாரம் செய்யவேண்டியது மிக்கஅவசியம். அவர்கள் இன்ன இடத்தில் இன்னபொருள்கள் இன்னவிலைக்குக் கிடைக்குமென்பதை யறிந்து, வியாபாரத்தை ஒழுங்காக நடத்தி வாழலாம். ஒரு தேச மன்னன், சேனாதிபதியாவோன் இவர்களும் தேசசஞ்சாரம் செய்ய வேண்டுவதவசியம். தேசசஞ்சாரம் செய்பவன் நேரே ரயிலில் போய் ரயிலில் வந்து விடுகிறதென்று கொள்ளக்கூடாது. ஆங்காங்கு காணப்படும், கோயில் கட்டிடங்கள், நீதி விசாரணைச்சாலை, தோட்டங்கள், விளைபொருள்கள், ஜனங்களின் நடை யுடை பாவனை, தந்திரம், யுக்தி, முதலியவைகளைப் பார்த்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் ஏதேனும் விசேஷ முளதாவெனக்கவனித்துவர வேண்டும். இப்படிச் செய்யப்படும் தேசசஞ்சாரம் மிக்க நன்மை தருமென்பதிலையமில்லை. இவைகளே யன்றி அங்கங்கு சிநேகிதர்களைத் தேடிக்கொண்டு அவர்களுடன் கடிதப்போக்குவரத்து மூலமாக உலகவாழ்விற்குரிய பல சாதகங்களைச் செய்துகொள்ளக் கூடும். முற்காலத்தில் தேசசஞ்சாரம் செய்வது மிகக் கஷ்டம். இப்பொழுதோ ரயில் பாதைகள் ஏற்பட்டிருப்பது மன்றி, தங்குவதற்கேற்ற வசதிகளும் அங்கங்கு ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால், தேசசஞ்சாரம் செய்தல் மிகவும் எளிது.

## செட்டு.

---

வரவிற்குத் தகுந்த செலவு செய்வது செட்டு. இதன் நோக்கம் தன்னயத்தைப்பற்றி மட்டுமல்ல; பிறநயத்தையும் கருதியதாகும். ஆகையால் இது மேலானமார்க்கமாகும். இது புருஷரினும் பெண்கள் அதிகமாய்ப்பூணவேண்டிய அணிகலமாகும்.

2. செட்டு தனியே ஒருவரிடத்தில் பொருந்தாது. கர்வம், அகங்காரம், கோபம், மடமை, ஒழுங்கீனம், அசத்தியம், அநீதி இக்

குணங்களுடன் பொருந்தாது. இதில் முன் சொல்லப்பட்ட ஏதாவது ஓர் குணத்தையுடையவன் எவ்விதத்திலாவது பணத்தை விரயஞ் செய்வான். ஆனால் செட்டுள்ளவனிடத்தில் பின்வருங்குணங்கள் விசேஷமாய்ப் பொருந்தியிருக்கும். (1) சத்தியம், (2) நீதி, (3) ஒழுங்கு, (4) மரியாதை, (5) பொறுமை, (6) தன்னடக்கம், (7) பிறநேசம், (8) நல்லறிவு, (9) சுறுசுறுப்பு, (10) விடாமுயற்சி. இப்பத்தும் எல்லோரும் விரும்பக்கூடியவையன்றோ?

3. செட்டால் அனேக நன்மைகள் உண்டாகும். 1 அது மனிதர்களைத் தரித்திரத்திலிருந்து நீக்கும். அவ்விதமில்லாவிடினும் வறுமையின் கொடுமையைத் தணிக்கும். 2 வேலை செய்யமுடியாத கிழட்டுத்தனம் வந்த காலத்தில் மீதிவைத்த பணம் மிகுந்த உதவியாகின்றது. 3 மனதிற்குச் சமாதானத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து இல்வாழ்க்கையைச் சிறப்புறச்செய்கிறது. 4 அவா, கோபம் அகங்காரம் இவ்விதக்கெட்ட எண்ணங்களை மனதினின்றும் அகற்றி மற்ற பந்து ஜனங்களுடைய சிநேகத்தையும் அபிமானத்தையும் விருத்திசெய்கிறது. 5 சந்ததியார்களை நல்வழியிற் பயிற்றிவைக்கவும் அவர்களைப் பெற்றோர்களிடத்தில் அன்போடும் மரியாதையோடும் நடக்கும்படிக்கும் செய்விக்கிறது. 6 உலகத்தவர்களுக்கு வேண்டிய பல நல்வழிகளில் உதவி செய்ய மிகவும் உதவுகிறது. அவ்விதமில்லாவிடினும், மற்றவர்களுக்குக்கெடுதல் செய்யாமலிருப்பதே பேருபகாரமன்றோ? 7 அநேகவித நன்முயற்சிகளில் மீதிவைத்த பணம் உபயோகப்படுத்தப்பட்டு அதன் மூலமாய்த் தனக்கும் பிறர்க்கும் உபயோகமாகின்றது. 8 இது உலகத்தில் புகழையும் கீர்த்தியையும் உண்டு பண்ணுகிறது. இவ்வித நன்மைகளை அடைய ஒவ்வொருவரும் விரும்பவேண்டியதன்றோ?

4. "இது புருஷரினும் பெண்கள் அதிகமாய்ப்பூணவேண்டிய அணிகலமாகு" மென்று முன் சொல்லப்பட்டதல்லவா? இவ்விஷயத்தை விரிவா யெழுத என்கை பதறுகின்றது. ஆடவர்கள் எவ்வ

ளவு குற்றஞ் செய்கிறவர்களாயிருந்தபோதிலும், பெண்கள் அவர்களைச் சீர்திருத்தக்கூடுமென்பது எனது எண்ணம். சொற்பச் சம்பளமுள்ள குமாஸ்தாக்களின் மனைவிகள் ரூபா 15க்குக் குறையாத சேலை உடுத்துவதும், அக்குடும்பத்தவர்களெல்லோரும் (கிழவர்கள் தவிர) காப்பி சாப்பிடுவதும், சொற்பவேலைகளை அல்லது சிரமங்களைப் பொறுக்க மனமில்லாமலிருப்பதும், உபயோகமறியாமலும் டம்பார்த்தமாக மற்ற விஷயங்களைச்செய்வதும் அரிதா? அதிகமேன்? தானே உணர்வது மற்றோர் உணர்த்துவதிலும் விசேஷ நன்மையைக் கொடுக்குமென்ற எண்ணத்துடன் இவ்வியாசம் முடிக்கப்படும்.

## உலகஞானம்.

---

உலகஞானமென்பது இந்தப் பூவுலகில் மனிதனாகப் பிறந்து ஒவ்வொருவரும் தமது வாழ்நாட்களுக்குரிய சாதனங்களாகத்தேட வேண்டிய முக்கியமானவைகளுள் ஒன்று. இந்த உலகஞானம் எவனிடத்து இல்லையோ அவனுக்கு அவன் வாழ்வில் பல கஷ்டங்கள் நேரிடுவது திண்ணம். அவன்கல்வியிற் கரைகண்டவனாகவிருந்தபோதிலும் சரி; உலகஞானமின்றி உலகவாழ்வை நடத்துவதரிது. புத்தகப் படிப்பினால் உலகஞானம் கிட்டாது. உலகத்தில் பழகியேவரவேண்டும். ஒவ்வொருவரும் தாங்கள் புத்தகத்தில் படித்தறிந்தவைகளின் பயனை உலகத்தவர்களோடு பழகியே பெறவேண்டும். இவ்விதம் பழகுவதோடு கல்வி கேள்விகளிற்றேர்ந்தவர்களுடைய உபந்நியாசங்களையும் கேட்கவேண்டும்.

'எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு,

என்றதற்கேற்பத் தான் யாரிடத்தில் எந்தெந்த மொழிகளைக் கேட்பினும் அவைகளுடைய உண்மையென்னவென்று ஆராய்ந்தறிய வேண்டும். அப்படி அறிவதால் அளவற்ற பயன்விளையும். தற்கால

த்தில் அநேகர்க்கு உலகஞானம் பெற வழியில்லாமலே போய்விடுகிறது. ஏனெனில் வயது இருபத்தைந்துவரையில் படிக்கவேண்டியதாயிருக்கிறது. இதற்குள் அவர்களுக்கு விவாகமாகிக் குழந்தைகளுண்டாய் விடுகின்றமையால், ஜீவனத்துக்கு வழி தேடவேண்டிய அவசியமேற்பட்டு, உத்தியோகத்திற் புகுந்து உலகஞானமில்லாததினால் அற்பப் படிப்புள்ளவனாயிருந்து உலகஞானத்தில் மேற்பட்டிருக்கிறவனுக்குக் கீழ்ப்படுகிறார்கள். இதுவன்றிக் குடும்பகாரியங்களை நிர்வாகிப்பதிலும் அவஸ்தைப்படுகிறார்கள். தங்களுடைய மனைவிக்குக் கிரீடாமிருகமாயும் ஒருசமயம் ஆய்விடுகிறார்கள். இன்னும்இவைகளைப்போன்ற அவஸ்தைகள் இந்த உலகஞானமில்லாததால் ஏற்படுவதை நாம் பிரத்தியக்ஷத்திற் காண்கிறோம். கன்னியாகுமரி இந்தியாவின் தென் கோடியினுள்ளதென்று புத்தகத்தில் படிப்பதிலும் ஒரு படத்தில் காண்பது தெளிவை யுண்டாக்குகிறது. கன்னியாகுமரியை நேரே சென்று பார்க்கும்போது அதனினும் தெளிவையுண்டாக்குமல்லவா? இதுபோல் ஒருவன் படிப்பதிலிருந்து அறியப்படுவனவற்றை உலகத்தவருடைய வாயால் கேட்பதும் நன்று. உலகத்தாரிடத்து அவ்விஷயத்தைக்கண்டு தான் படித்தவற்றை மனதிற் சிந்திப்பது அதனினும் நன்று. ஆகையால் எப்பாடு பட்டாயினும் கல்வியை ஒருவன் சம்பாதிக்கவேண்டுமென்கிற அவசிய மேற்பட்டிருப்பதுபோல் உலகஞானத்தையும் பெறவேண்டும். உலகஞான மில்லாதவனுக்கு இகபரமிரண்டிலும் சுகமிராது. நாளுக்கு நாள் வயதில் உயர்வது நம்மை யறியாமல் உண்டாய் விடும். அறிவில் விருத்தியாவது கஷ்டம். நல்லதோ கெட்டதோ ஒவ்வொன்றையும் அறிந்திருக்கவேண்டும். ஆனால் நல்லதை மட்டும் சித்தத்திற்கொண்டு அதன்படி ஒழுகவேண்டும். தீயதை அறிந்து அதற்குட்படாம லிருக்கவேண்டும். ஆகையால் நாம் புத்தகத்தில் எல்லாவற்றையும் படித்து விட்டோமென்றுஉலக வழக்கங்களை அலட்சியஞ்செய்து விடுவது உலகவாழ்க்கைக்கு நற்பயன்கொடாது என்பதையறிந்து சிறுவயது முதற்கொண்டு உலக ஞானத்தையும் பெறமுயல்வதே அவசியமென்றறியவும்.

# சங்கீதம்.

சங்கீதமானது மனதுக்கு ரஞ்சிப்பையும் இன்பத்தையுந்தரத் தக்கது. இதனை விரும்பாதவர் பெரும்பாலும் அரிதென்றே சொல்ல வேண்டும். உதாரணமாக ஓரிடத்தில் ஒரு சங்கீத வித்வான் பாடுகி ருனென்று வைத்துக்கொள்வோம். அந்த வழியே சிறிதும் சங்கீத ஞானமில்லாத ஒருவன் போகநேரிட்டால், அவனுங்கூட அந்த இட த்தில் நின்று அந்த மதுரமான தொனிக்குச் சற்று செவிசாய்க்காம லிரான். சங்கீதஞானமுள்ளவராயின், நாம் பேசவேண்டுவதில்லை. இவ்வளவேன்; தொட்டிலிற்படுத்து அழுது கொண்டு கிடக்கும் சிசு க்கள் கூட, தங்கள் தாய்மார் பாடும் தாலாட்டுக்குச் செவிசாய்த்து, அழுகையை நிறுத்திக் கொண்டு அந்த கானவின்பத்தில் மூழ்கி ஆனந்த மடைகின்றதை நாம் ஒவ்வொருவரும் காண்கிறோம். இந்த சங்கீதமானது மனிதவர்க்கத்தாருக்கு மட்டுந் தான் ஆனந்த முண் டாக்கு மென்பதில்லை. விலங்கினங்களுக்கும் ஓர்வித இன்பத்தைத் தந்து, அவைகளுடைய மனத்தையுங் கவர்ந்து உருகும்படி செய்து விடும். காட்டில் வேட்டையாடும் வேடர்கள், மான் முதலிய மிருக ங்களைப் பிடிக்க ஒரு விதப்பாட்டுப் பாடுவதுண்டு. அந்தப் பாட்டைக் கேட்டமாத்திரத்தில் விலங்கினங்கள் அசைவற்று நின்றுவிடும். ஸ்ரீகிருஷ்ணபகவான் பசுக்களை அழைக்கவும் ஓரிடத்துச் சேர்க்கவும் புல்லாங்குழலின் இனிய ஓசையால் நடத்தினரெனப் படித்திருக்கி ரும். இதுவன்றிக் கொடிய விஷங்கக்கும் நல்ல பாம்பானது பாம் பாட்டி ஊதும் குழலோசை, தன்செவியிற் பட்டதும் புத்திலிருந்து வெளிக்கிளம்பி, ஆனந்தங்கொண்டு படமெடுத்து ஆடுவதைப்பார்த் திருக்கலாம். பட்சிகளிலும் சிலசங்கீதத்தினல் இன்பமடைவ துண்டு. அவை அசுணம் முதலான பக்ஷிகளாகும். இந்த அசுண மென்னும் பட்சியானது வசந்தகாலத்தில் பூரண சந்திரோதயமிருக்

கும்போது யாழ்வாசிக்கக்கேட்கின், அது அந்தரத்தில் அசைவற்று நின்று அந்த யாழோசையைக் கேட்டுக்கொண்டிருக்கு மெனப்படுகிறது. ஆகவே சங்கீதமானது மானிடவர்க்கமுதல் பசுபட்சியாதிகளுக்கும் இன்பம் விளைக்கும் அற்புதசாஸ்திரமென்பதாயிற்று. இதுவல்லாமல் சகலலோக சரணியனுகிய பரமேசுவரனும், சாமவேதகானஞ்செய்து பாடித் தம்மைத் தோத்திரஞ் செய்த இராவணேசுவரனுக்குஅவன் விரும்பிய வரங்களைக்கொடுத்தாரென்று சொல்லப்படும்போது அதன் பெருமையை என்னென்று சொல்வது?

இது நிற்க, சங்கீதமானது வீணைமுதலிய வாத்தியங்களிலிசைத்துப்பாடப்படுமாகில் ஒரு வித ஆநந்தமும், வாயினுற் பாடப்படுமாகில் ஒருவித ஆநந்தமும் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. வாயினுற் பாடுவதில் புருஷர்கள் பாடுவதைக்காட்டிலும் ஸ்திரீகள் பாடுவது சிறிது மேலாகத்தானிருக்கும். ஏனெனில், அவர்களுடைய குரல் மிகவும் இனிமையும் பாடற்கிசைந்த மெலினமு முடையது. இத்தன்மை அவர்களிற் பெரும்பாலர்க்கு இயற்கையிலேயே யமைந்திருக்கும். ஆடவர்களுக்கு அத்தகையகுரல் அமைந்திராதென்பதில்லை. இருந்தாலும் ஏதோ சிலருக்கு அப்படியமையுமே யல்லாது, எல்லாரிடத்தும் காண்பதரிது. கவிவாணர்கள் ஸ்திரீகளை வர்ணிக்குமிடத்து "குயிலினுமினிய குரலார்" "யாழினுமினியகுரலார்" என்று அவர்களுடைய குரலை விசேஷித்துக்கூறியிருப்பதும் இதனுலல்லாவா? மேலும் "எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூப்பறித்தல், பண்ணமைந்த யாழினேடைந்து, எனஸ்திரீகளுக்கு ஏற்பட்ட தொழில்களுள் யாழிலிசைத்துப் பாடுவதும் ஒன்ருக ஏற்பட்டிருப்பதை நோக்கின் ஸ்திரீகளுக்கு சங்கீத ஞானம் உண்டாக்க வேண்டுமென்பதாகிறது. நல்ல குரலுள்ளவரிடத்தில் சங்கீதம் பிரகாசிக்குமாகையால், ஸ்திரீகளுக்கு சங்கீதம் போதிப்பது அவசியமாகும். சிறுவயது முதற் கொண்டு பழக்கப்பட்டு வந்தாலன்றி, ஒருவர்க்கு சங்கீத ஞானமுண்டாவது கஷ்டம். இப்பொழுது நமது நாட்டுப் பெண்பாடசாலைகளிற் கற்பித்துவரும் சங்கீதமானது நமது தேசத்து இராகத்து

க்கு ஒத்ததா யிருப்பதில்லை. அதனால் ஏதேனும் பிரயோசன மிருப்பதாகவும் தோன்றவில்லை. வரவர சங்கீதமென்பது முற்காலத்திலும் குறைந்து வருவதாகக் காண்கிறதே யல்லது விருத்தியாம்சங் காட்டுவதாகக்காணவில்லை. இதற்கேற்ப "கிராமபோன்" வாத்தியம் ஒன்று ஏற்பட்டுவிட்டது. இந்த வாத்தியமோ இப்பொழுது வீட்டுக்கு வீடு வாங்கி வைக்கப்பட்டிருக்கிறது. விவாக காலத்திலும் இதுவே தருவிக்கப் பட்டுவருகிறது. இதற்குப் பணச் செலவில்லை யென்பதில்லை. பணச்செலவு செய்துதான் வரவழைக்கிறார்கள். ஒருவன் திரை மறைவிலிருந்து, பேசுவானாகில் அவன் பேச்சைக்கேட்டு ஆநந்தப்படுவதெப்படி, நேரில் கண்டு பேசி ஆநந்திப்பதெப்படி, யென்பதை யோசித்துப்பாருங்கள். நேரிற்கண்டு பேசுவது போல், திரை மறைவிலிருந்து பேசக் கேட்பது மனதுக்கு ஆநந்தமுண்டாக்காதென்பது திண்ணம். இது போல்தானே கிராமபோனும்? எல்லாரும் கிராமபோனிலேயே பாட்டுக்கேட்பதென ஆரம்பித்து, சங்கீதத்தின் விருத்தி யம்சத்துக்குக் குறைவுண்டாகுமோவென யோசிக்க வேண்டியதாயிருக்கிறது. சங்கீத ஞானத்தில் இணையற்றதெனப் பெயர் பெற்ற நம் நாட்டுக்கு அக்குறை நேரிடாவண்ணம் அதனைப் பாதுகாப்பதே நமது கடமையாம்.

# அறம்.

---

அறம்—தருமம் என்பது இதன் ஸ்மஸ்கிருதப் பெயர்.

"அழுக்கா றவாவெகுளி யின்னாச் சொன்னான்கு
மிழுக்கா வியன்ற தறம்."

என்று திருவள்ளுவர் கூறியபடி, பிறர் செல்வத்தில் பொறாமையும் ஐம்புலன்கள்மேற் செல்லும் ஆசையும் அவை காரணமாகப் பிறர் மேல் உண்டாகிற கோபமும் அதுபற்றி வருகின்ற கடுஞ்சொல்லும்

ஆகிய இவைகளைக் கடிந்து, தான் கொண்ட ஒழுக்கத்தினின்று தவ ருதிருப்பதே அறமெனத் தகும். தன்னுயிர்போல் பிறவுயிர்களை யும் கருதி அவைகளுக்கு இடுக்கண் விளைந்த விடத்து அவ்விடுக்கண் தனக்கு நேர்ந்ததாகக்கொண்டு உதவிபுரிவதும் அறமெனத்தகும். இவ்வறமானது இல்லறமென்றும் துறவறமென்றும் இருவகைப்ப டும். நல்ல வம்சத்திற்பிறந்த ஓர் உத்தமியும்அவ்வுத்தமிக்குரியநாய கனும் சேர்ந்து இல்வாழ்க்கைக்குரிய நெறியில் நின்று நடத்தப்படுவ தாகும் இல்லறம். துறவறமென்பது உலகப்பற்றற்று உடல் பொருள் ஆவி இவைகளின் நிலையின்மையை உணர்ந்து அவைகளிலுள்ள அவாவை யொழித்து, சரியை கிரியை யோகம் ஞானம் என்பனவற் ருல் முத்தியென்னும் பேரானந்தவழியைத் தேடுவதாம். துறவறம் சித்தித்தல் யாவர்க்கும் எளிதன்று. அதில் ஐம்பொறிகளையும் மன தையும் அடக்கவேண்டிய பெரும் சிரமமிருக்கிறது. இல்லறம் அத் தன்மையத்தன்று. அனுஷ்டித்தல் எளிது. இதனை ஒளவைப்பிராட் டியார் "இல்லற மல்லது நல்லற மன்று" என்று சிறப்பித்துக் கூறியு ள்ளதையுங்காண்க.

துறவறமென்பதைப் பற்றி நாம் இப்பொழுது அதிகம் கவனிக் கவேண்டிய அவசியமில்லை. இல்லற மென்பதையே விசேஷமாகக் கவனிக்கவேண்டும். ஆயினும் இவ்விரண்டுக்கும் பொதுவாக நிற்கும் அறமென்பதை விரித்துக்கூறுவோம்.

மேற்கூறியபடி, புறங்கூறுமை முதலியவைகளைக்கடிதலும், தன் னுயிரைப் போல் பிறவுயிரைப் பாவித்துதவுதலும் அறத்துணை நிற் போன் கவனிக்க வேண்டுவனவாகையால், புறங்கூறுமை முதலியவற் றை ஒழிப்பதனுல்,இகத்தில் எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டு யோக் கியனென்னும் பெயரை யடைவதும் இராஜதண்டனைக் கிடங் கொடா திருத்தலும்கூடும். இது அறம் என்கிற மார்க்கத்திற் செல்லும் ஒரு வன் இவ்வுலகிலடையத்தக்க, பிரத்தியக்ஷ பலனுகும். இதனல் மோக்ஷ உலகத்துக்குரிய பலனும் கிடைக்குமென்பதே கொள்ளவே

ண்டும். பாபரகிதனேமோக்ஷம்பெறுவானென்பது நம் முன்னோர்கள், சாஸ்திரங்கள் இவர்களின் கருத்து. ஆகையால், மேற்கூறப்பட்ட தீச் செயல்களை விலக்கியவன் பாபமடைவது மின்றாகையால், மோக்ஷம் கிட்டுமென்பது நன்கு போதரும். பிற ஜீவனுக்குற்ற இடுக்கண் தனக்கு நேர்ந்ததாகப் பாவிக்கும் குணம் உலகத்தில் மானுட ஜன்ம மெடுத்தவர்கள் கொள்ளத்தக்க குணங்கள் எல்லாவற்றுள்ளும் மகா உத்தமமானது. அதனால் இகத்தில் நன்மைவிளையும் என்பதை நாம் சொல்லாமலே யாவரும் அறிந்து கொள்ளத்தக்கது. பிற ஜீவன்களுக்கு இடுக்கணுற்றுழி உதவுவதால் புண்ணிய முண்டாமென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிக் கொப்பாகும். ஆகையால்,

"சிறப்பீனும் செல்வமீனு மறத்தினூ உங்
காக்கமெவனோ உயிர்க்கு"

என்று குறளிற் போந்தவாறு, அறம் மோக்ஷத்தையும் சொர்க்க முதலாகிய செல்வத்தையும் கொடுக்கும். ஆகையால் மனித உயிருக்குத் தருமைத்தைப் பார்க்கினும் மேற்பட்ட பெருக்கத்தைக் கொடுக்கக்கூடிய தொன்றுமில்லை யென்பது உணரத்தக்கது. இதனாலேயே ஔவைப்பிராட்டியும் "அறஞ்செய விரும்பு" எனத் தாமியற்றிய ஆத்துச்சூடி என்னும் நூலின் முதலிலமைத்தது மென வறிக.

மற்றொரு விஷயம் கவனிக்கத்தக்கது. ஒருவன் எவ்வகைப்பட்ட தனம்படைத்தவனாயினும் சரி; கல்விமானாயினுஞ் சரி; பிறருடைய உதவியின்றி இந்த மண்ணுலகத்தில் வாழ்தலரிது. பரஸ்பர உதவியே ஜனசமூக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஒருவனுக்கு மற்றவன் உதவி புரிவது அவனிடமிருந்து ஒரு பிரயோசனத்தைக் கருதியேயாகும். இது பெரும்பான்மையும் நிகழக் கூடியது. பிறருதவியை எதிர் பாராமலே உதவிசெய்ய முந்துபவர்,சிலரேயாவர். ஆகையால், ஒருவருக் கொருவர் உதவி புரிய வேண்டுமென்பது யுக்திக்கும் இன்றியமையாததாகவே படுகின்றது. உதவியற்றவன்

வாணாள், வீணாளாகவே முடிவது பிரத்தியக்ஷம். மனிதருள் சிறிதும் தரும சிந்தனையில்லாதவரைக் காண்பதரிது. இந்ததருமசிந்தனை பெருகுவது நல்லோர் பெரியோருடைய கூட்டுறவாலும், நீதிநூல் முதலியவைகளிற் பழகுவதாலுமே யென உணர்க.

"தன்னொடு செல்வது வேண்டின் அறஞ்செய்க" என்றும் "தருமம் தலைகாக்கும்" என்றும் முதுமொழிகள் வழங்கி வருவது ங்காண்க. அறத்தைச் செய்யவேண்டியது. இவ்விதமென்பதைப்பற்றி ஒருவர் கூறிகின்றார்.

"இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

அதாவது, இனியசொல்லே விளைகிற வயலாகவும், இரப்பவர்க் குக்கொடுத்தலே விதையாகவும் கடினமான சொல்லாகிய களையைப்பி டுங்கி யெறிந்து உண்மையாகிய எருவைவிட்டு,அன்பாகிய நீரைப்பாய் ச்சி, அறமாகிய கதிரை விடும்படி ஒப்பற்ற பயிரை நீ இளமையிலே யே செய் என்றார். மானிடஜன்மமெடுத்தவர்கள் இகபரசாதகமான இந்த அறமென்பதைத் தம்மாலியன்ற வரையில், முயன்று செய்யவே ண்டும். நாளைச் செய்வோமென்றிராமல் சமயம் வாய்ந்தபொழுது அல்லது தாமே அறஞ்செய்தற்குரிய வழியை முயன்று தேடி ஒவ் வொரு நாளும் அதைச் சிறிது நடத்திவரவேண்டுமென்பதை யறிந் துய்யுமாறு இவ்வியாசம் முடிக்கப்படுகிறது.

# நோய்க்கிடங் கொடேல்

---

அன்பர்களே! நோய் என்றால் என்ன? அவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே உங்கள் உடம்பு நடுங்கவில்லையா? நம்மை

நொய்யச்செய்வது நோய்; நையச்செய்வது நோய்; துன்பப்படுத்து வதுநோய்; சரியான ஆகாரமெடுத்துக்கொண்டு நம்மை சௌக்கியமாயிருக்கச் செய்யாமல் தேகத்தின் பலவித உறுப்புக்களிலும், புகுந்துகொண்டு வருத்தப்படுத்தி நம்மை மரப்பாவைபோல் ஆடச்செய்வதும் நோய்.

(2) இந்நோய் பலவகைத்து. எல்லா ஜீவப்பிராணிகளுக்கும் உரித்து. ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன, நிலம்வாழ்வன, வான்வாழ்வன என்ற இவைகள் மாத்திரமல்ல, கேவலம் ஜடமாய்த் தோன்றும் விருக்ஷங்கள் மற்றுமசையாப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் நோய் உண்டு. சில நோய்கள் சில பிராணிகளுக்கே சொந்தம். நோய்களின் பொதுவான சில குணகுணங்களைச் சிறிது ஆராய்வோம்.

(3) மானிட ஜன்மம் எடுக்க எவ்வளவோ தவம் பண்ணியிருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். தவமென்றால் எளிதல்ல. எல்லாவித கடுமையான பத்தியங்களையும் அனுசரித்துக் கொண்டு சரீர சௌக்கியங்களையும் கவனியாமல் மனதை நமக்கு எதில் ஆப்தமிருக்கிறதோ அதில் நிலைநிறுத்தி நெடுங்காலம் பரம்பொருளைத்தியானிப்பதே தவமாகும். இம்மாதிரி தவம் செய்தே மானுடராய் பிறக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப் பிறந்து நாம் வாழ்கிற காலத்திற்படும் கஷ்டங்களென்னே! என்னே? உடல் நடுங்குகிறது அவைகளை நினைக்குந்தோறும். அம்மம்ம! மனம்பதறுகிறதே வியாதியென்றால். ஆனால் வியாதி நம்மை அணுகாதபடியிருக்கிறதா? பத்துவருஷம் இருபது வருஷம் வியாதியில் கஷ்டப்படும் மனிதர்களை நாம்கண்கூடாகக்கண்டதில்லையா? ஐயா! என்னசெய்யலாம். அப்படிப்பட்டவர்களைக் கண்டால் ண்ணீர் கண்களில் தாரைதாரையாய்ச் சொரிகிறது. "பாவம்! வியாதியால் வருந்துகிறாள், என்ன பாவம் செய்தாளோ? யார் சூதோ? என்னகஷ்டம்! கண்ணெடுத்துப் பார்க்கக் கண் கூசுகிறதே! என்று நாம் எத்தனை தடவைகளிலோ சொல்லியிரு

க்கிறோமல்லவா? ஒருவர் கஷ்டப்படுவதைப்பார்க்க நாம் ஒருக்காலும் சகியோம். வியாதிக் காரரைக் கண்டால் நமக்கு இயற்கையிலேயே ஒருவிதமான பரிதாபம் பிறக்கிறது இது தெய்வீகம் என்றே சொல்ல வேண்டும். இந்த விஷயத்தில் ஜாதிமத வித்தியாசம் பாராட்டுகிற வன் மனிதனல்ல, மிருகத்தினும் கேடு கெட்டவன்.

(4) நல்லது நோய் எவ்விதமாய் உண்டாகிறது? முக்கிய காரணம் அசுத்தம் என்பதே. நம் உடல், தாதுக்கள், நரம்புகள், எலும்பு கள், மாமிசம் இவைகள் நிறைந்த ஒரு பை என்று நமது நூற்கள் கூறுகின்றன. மனிதன் ஒரு ரசாயன பிண்டம். அப்பிண்டத்தின் தன்மை சில மாறுபாடுகளை அடையவே வியாதிகள் உண்டாகின்றன. இவ்வியாதிகளை அழிக்க முந்தியிருந்த தன்மைக்கு பிண்டத்தைக்கொ ண்டுவருவதே சரியான மார்க்கம் என்று சில மேற்புலவிஞ்ஞானிகள் வரைந்திருக்கின்றனர். ஒவ்வொரு க்ஷணமும் நமது உடலில் ஏதா வது ஒருவேலை நடந்துகொண்டிருக்கிறது. இம்மாதிரியான வேலை கள் சரிவர நடக்கவேண்டும். வேலை மத்தியில் ஏதாவது ஒரு அசுத் தமான பொருள் அகப்பட்டு விட்டால், ஒரு குடம் பாலில் ஒரு துளி மோரைத்தெளித்ததுபோலாய்விடும். சகலவிதபிணிகளுக்கும் ஸ்தல மாகும். தினம் முறைப்படி புகைவண்டிகள் தவறாமல் நம் நாட்டில் போய்க்கொண்டிருக்கின்றன. அவை நமக்கு ஆச்சரியமாயிருக்கின் றன. அவைகள் போகும் இருப்புப்பாதை ஒழுங்காயிராமல் சிறிது கோணி விலகியிருந்தால், அவ்வழியில் போகும் வண்டிகள் என்ன பாடுபடும். வண்டிகளிலுள்ள மனிதர்கள் என்ன பாடு படுவார்கள் எல்லாம் சேதம். அதுபோலவே நமது உடலில் இருக்கும் உறுப்பு களெல்லாம் சரியான நிலைமைகளி லிருக்க வேண்டும். நாம் செய்யுங் காரியங்கள் சரியான மாதிரியாயிருக்கவேண்டும். முக்கியமாய் நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, வசிக்குமிடம், அருந்தும் நீர் இவைகள் நிரம்பவும் சுத்தமாயிருக்கவேண்டும். இவைகளில் ஒரு கெட்ட சிற்றுயிர் கலக்கப்பட்டிருந்தால் போதும் நாம் நெடுநாள் கஷ் டப்படுவதற்கு. ஆகையாலே இவ்விஷயங்களைப்போதிக்கும் சுகா

தார நூல்களை ஏராளமாய்க் கற்று, கற்றபடி நடக்க முயல்வது நமது முதற்கடமை யாகும்.

(5) இரண்டாவது நாடோறும் நாம் செய்யுங் கடமைகளையும் ஆகாராதிகளையும் காலம் தப்பாமல் அந்தந்த வேளைகளில் நடத்த முயலவேண்டும். நம்மவர்கள் இதை அனேகமாய்க் கவனிக்கிறார் களில்லை. தினம் தினம் இக்குறையினால் உண்டாகும் தீமைகளைக்கண் காணப் பார்த்துக் கேட்டிருந்தபோதிலும் அதை எவ்வாற்றாலும் விலக்குகிறார்களில்லை. இதை முக்கியமாய் நமது பெண்கள் கவனிக்க வேண்டியதாயுளது. சில பெண்பாலர் "நமக்குஎதிற்கு ஆகாரம்? ஏதோ கொஞ்சம் சாப்பிட்டால் போதும். எப்பொழுதுசாப்பிட்டாலென்ன? என்னமாவது சாப்பிடவேண்டும்" என்று சொல்லி அந்தப்படியே செய்துவிடுகிறார்கள். பின் படுகிற துன்பம் அவர்களுக்கே தெரியும். ஆத்மத்துரோகஞ் செய்தால் அப்போதே கேட்குமல்லவா? இது சிறிய விஷயமாயினும் மிகுந்தகவனத்தை வேண்டி நிற்கிறது. அதே மாதிரிஎல்லாவிஷயங்களிலுமிருக்கவேண்டும் முறைதப்பாமை, மிதம், பரிசுத்தம் ஆகிய இம்மூன்றும் நாம் செய்யும் செய்கைகளின் குணதிசயங்களா யிருக்கவேண்டும்.

(6) இப்படி ஒருவரது செய்கைகளெல்லா மிருக்குமாகில், முக்காலே மூன்று வீசம் அவரைப் பிணி அணுகாது. பின்னர் சில கடூரமான நோய்களிருக்கின்றன. இவைகள் அடைந்துள்ள சிலரை நாம்தொட்டுவிட்டால், நம்மையும் அது பிடித்துக்கொள்ளும். நாம்அதற்குஅனேகமாய் இரையாயும் ஆவோம். உதாரணமாக விஷசுரங்கண்ட நோயாளிக்குச் சிகிச்சை பண்ணும் வைத்தியர்கள் எப்படியோ தாங்களுமந்நோயைக்கொண்டுசிலகாலம்வருந்திக்கடைசியில்மாண்டு போகிறார்கள். இம்மாதிரியான வியாதிக்காரர்களுக்கு வைத்தியர்கள் மருந்து கொடுக்கக்கூடாதென்று சொன்னேனல்லேன். சிலர் கேவலம் ஆசைக்காகவே இம்மாதிரி செய்து உயிர் துறக்கலாம். ஆனால் சிலர் சுயநயமற்று "வியாதியஸ்தனும் ஒரு உயிர்ப்பிராணி. நமதுசகோத

ரன்'' என்ற பாவத்தோடு மருந்து கொடுக்கலாம். பல உயிர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும் தன் உயிரை அப்பேர்ப்பட்ட அபாயகரமான ஸ்திதியிலிருத்தக்கூடாது என்பது நமது வாதம். அவர்களும் மிகப் பரிசுத்தமாயிருந்துவிட்டால், அனேகமாய் ஒன்றும் வருகிறதில்லை. பொதுவாக நாம் ஒட்டுவார் ஒட்டி வியாதியைக்கண்டால் பாம்பைக் கண்டு விலகுவதுபோல விலகவேண்டும்.

(7) ஆக உள்பரிசுத்தம், வெளிப் பரிசுத்தம் இந்த இரண்டுமே நம் வாழ்நாளுக்குஇரண்டுகண்கள். இவ்விரண்டுகண்களும்சரியானபடியிருந்துவிட்டால், நமது பிறப்பின்பிரயோஜனத்தைஅடைந்தவராவோம். அதாவது சுகவாழ்வு, நோயற்ற வாழ்வு என்பதாம். நோய் ஒன்றிருந்துவிட்டால், மனிதனுக்கு வேறு என்ன விருந்தும் உபகாரமாகாது. வாசிப்பவர்களே! ஒரு கோடீஸ்வரப் பிரபுக்கு என்ன செல்வமிருந்தாலும் அவன் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தால் அவனுக்கு எவ்வளவு சுகம் இருக்குமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள். எள்ளளவேனும் சுகம் கிடையாதென்று சொல்லமாட்டுவோம். அவனுக்கு தேகவியாதிகள் தவிர மனக்கவலைகள் எண்ணிறந்தன. கவலொழிந்த துயில் என்றாவதுண்டா அவனுக்கு. ஆகையாலே பணக்காரர்களைப்பார்த்து நாம் அவர்களைப்போலிருக்கவேண்டுமென்றுநினைக்கவேவேண்டாம். வெளிக்குஆடம்பரம்உள்ளுக்குஅவ்வளவும் ஓட்டை.

(8) எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்குமளவில் ஒருவிதவியாதியுமில்லாமல் திருப்தியுடன் வாழ்தலே குறைவற்ற செல்வத்தையுடையவராய் விளங்குதலாகும். ''நோய்க்கிடங்கொடேல்'! என்று சொல்லிப் போந்தார் நமது மதுரமொழி ஔவைப் பிராட்டியாரும்; ஆதலின் நாமெல்லோரும் நோயற்றவாழ்வைத் தேடமுயன்றும் மற்றவர்களையும் தேடச்செய்வோமாக. இவ்விஷயத்தில் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் நமக்கு உதவிபுரிந்து நம்மைக்காத்தருள்வாராக.

''கற்றதனு லாயபய னென்கொல் வாலறிவ
னற்ரு டொழாஅ ரெனின்''

# பகலும் இரவும்.

நேயர்களே! உங்கள் ஞாபகத்துக்கு எட்டினவரையில் நினைத்துப்பாருங்கள். தினந்தினம் சூரியனுதித்து ஆகாயமார்க்கமாய்ப் போய் அஸ்தமிப்பதில் பிசகுண்டா? பிரதி ராத்திரியும் வானம் மப்புமந்தாரமில்லாதிருந்தால் சந்திரனும் நக்ஷத்திரங்களும் நம்முடைய தலைக்குமேல் தெரிவது கண்ணுக்குத் தோன்றவில்லையா? வழக்கப்படிக்கு நாளைக்கும் சூரியன் உதயமாகுமென்பதிலும் இனிமேலும் கழிந்த மாதிரி வருஷந்தோறும் உதயாஸ்தமனமாகுமென்பதிலும் உங்களுக்குச் சிறிதேனும் நம்பிக்கைக் குறைவிருக்குமா? பூமியைச் சுற்றி நாலண்டையும் ஓயாமல் மிருதுவான சலனம் இருப்பதைக் காண்கிறீர்களே. இந்தச் சலனத்துக்கு ஏதுவென்ன? இதென்ன விந்தை! என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருப்பீர்களா?

வெயில் காயும்போது வெப்பமாயிருக்கிறது. ஆகாயத்தை மேகம் மறைக்கும்போது காற்று குளிர்ந்திருக்கிறது. சூரியன் மறைந்து இரவுபடும்பொழுது குளிரெடுக்கிறது. இன்னம் பகலில் ஆகாயமெங்கும் வெளிச்சம் நிறைந்திருக்கிறது. மேற்றிசையிற் சூரியன் அஸ்தமிக்கவே இருளுண்டாகிறது. வெளிச்சமும் வெப்பமும் சூரியனாலல்லவோ உண்டாகின்றன. ஆதலால் சூரியனுக்கும் பூமிக்குமுள்ள சம்மந்தங்களைப் பற்றி நாம் சிறிது தெரிந்துகொண்டாலொழிய பூமியில் நடக்கும் காரியங்களைப்பற்றி நமக்கொன்றும் நன்றாகத் தெரியாதென்பது திண்ணம்.

இதைப்பற்றி வெகுநாளைக்கு முன்னமே பூர்வகாலத்து ஜனங்களுக்கிருந்த அபிப்பிராயமே உங்களுக்கும் இருக்கிறதோ வென்னவோ. அவர்கள் அகிலத்தின் மையநிலை பூமியென்றும், அதைச் சுற்றிச் சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஓயாமல் ஓடுகின்றனவே

ன்றும் எண்ணியிருந்தார்கள். இப்போதும் உதயாஸ்தமமமென்று பேசுவது பூமியைச்சுற்றி அவைகள் திரிவதாக எண்ணுகிற விவகாரப்படிதான்.

உள்ளபடி பார்த்தால் பூமியல்ல அசையாத மையம். சூரியனைச் சுற்றி ஓயாமல் ஓடும் கிரகங்களில் அதுவுமொன்று. சூரியன் தான் நடுவில் நிற்கும் ஓர் அக்கினிபிண்டம். அதிலிருந்து பூமிக்கு வெப்பமும் வெளிச்சமும் உண்டாகின்றன. அதைச் சுற்றித்தான் பூமி இடைவிடாமல் சுழலுகின்றது.

பகலும் இரவும் மாறிமாறி வந்து சூரியனுடைய சலனத்தால் உண்டாவது போல் தோற்றுகிறது. உண்மை அதன்று. பூமி தானே உருளுவதால் இவ்விகற்ப முண்டாகிறது. ஒரு பிரமாணத்தால் இது எளிதில் விளங்கும். ஒரு காம்புப் பம்பரத்தை உங்கள் பலங்கொண்ட வரையில் இழுத்துச் சுற்றிவிட்டால் ஒரு க்ஷணம் அது அசைவற்று நிற்பதுபோலத் தோன்றும். இதைப் பார்த்துச் சிறுவர்கள் பம்பரம் தூங்குகிறதென்று சொல்வார்கள். இப்போதுதான் அது அதிவேகத்துடன் சுழலும்; அதன் அடி முனையிலிருந்து மேற்காம்பின் நுனிவரையில் ஒரு நேர் கோடு ஊடுருவிச் செல்வதாகப் பாவியுங்கள். பம்பரத்தின் ஒவ்வொரு பாகமும் இந்த நடுரேகையைச் சுற்றிச் சுழலும். இந்தக் கோட்டிற்குச் சுழலிருசு என்று பெயர். இதே ரீதியாய்ப் பூமியும் தன் இருசைச்சுற்றி வேகமாய்ச் சுழல்கின்றது.

பின்னும் பாடசாலைகளில் வழங்கும் பூகோள உண்மையை நிறுத்தி அதற்குச் சில அடி தூரத்தில் அதைச் சுற்றியிருக்கும் பித்தளை வளையத்துக்கு நேராக ஒரு மெழுகுவத்தியைக் கொளுத்தி வையுங்கள்.

இப்போது கோளத்தை இருசின்பேரில் சுழற்றலாம். அது சும்மாவிருந்தாலும் இருசாணியில் வேகமாய்ச் சுழன்றாலும் விளக்கெ

திரிலிருக்கும்பாதிக்கு வெளிச்சமும் மறுபாதிக்கு இருட்டுமிருக்கும். சும்மாயிருக்கையில் வெளிச்சமுள்ளபுறத்திற் குறித்திருக்கும் இடங்களெல்லாம் வெளிச்சத்திலும் மற்றப்புறத்திலிருக்கும் இடங்களெல்லாம் இருட்டிலுமிருக்கும். அதைச் சுழற்றும்போது ஒவ்வொரு இடவரிசையாக வெளிச்சத்தில் வந்து இருளில் மறையும். விளக்கிருக்கிறவரையில் கோளம் சுழலுவதினால் அதன் மேற்புறத்தின் ஒவ்வொரு பாகமும் மாறிமாறி வெளிச்சமும் இருட்டும் அடையும்.

இச்சிறுகோளத்தையே பூகோளமாகவும் இந்த அற்பவிளக்கையே சூரியனாகவும் பாவியுங்கள். பூமி தன் இருசின் மீது சுழல்வதால் ஒவ்வொரு தேசத்திலும் மாறிமாறி வெளிச்சத்தையும் இருட்டையும் அடைவிக்கும். பாடசாலைக் கோளத்துக்கு இருப்புக்கம்பி இருசாக இருப்பதுபோல பூமியை ஊடறுத்துச் சென்று நிஜமாக ஒரு கம்பி இருசு இருக்கிறதென்று எண்ணப்போகிறீர்கள். அப்படி ஒரு ரேகையிருப்பதாக மனதில் பாவித்துக்கொள்ளவேண்டியது தான். நிஜமாக ஒருகம்பி இருசு உள்ளுருவிச் சென்றால் இருவழியிலும் பூமிக்குமேற்புறத்தில் எப்படி வெளிப்படுமோ அப்படியே இந்தப் பாவனு ரேகைக்கும் இரண்டு முனைகளிருப்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். இவைகளுக்கு வடமுனை தென்முனை யென்று பெயர். இவைகளை வடதுருவம் தென்துருவம் என்று ஹிந்து ஜோதிஷ சாஸ்திரிகள் சொல்லுவார்கள்.

இந்த இருசைச்சுற்றிப் பூமி இருபத்துநான்கு மணிநேரத்துக்கு ஒரு தரம் சுழலுகின்றது. இக்காலமுழுதும் சூரியன் ஆகாயத்தில் நின்றவிடத்திலேயே நின்று ஏகரீதியாகப் பிரகாசிக்கின்றான். பூமியிலோ எந்தக்காலத்தில் எந்தப்பக்கம் அவனுக்கு நேராக விருக்குமோ அந்தப்பக்கத்துக்குத் தான் வெளிச்சம். விளக்கின் முன் வைத்துப் பார்த்த கோளத் தோற்றப்படி பூமிக்கு ஒரு புறம் வெளிச்சமும் ஒரு புறம் இருளும் இருக்கவே இருக்கும். பூமி அசையாமலே யிருந்தால் ஒருபாதிக்குச் சதா வெயிலும் வெளிச்சமும் மறுபாதிக்குச் சதா

இருட்டும் இருக்கும். பூமி சுழலுகிறபடியால் ஒவ்வொரு பாகத்துக்கும் மாறிமாறி வெளிச்சமும் இருட்டும் உண்டாகும். நமக்கு வெளிச்சமுறும்போது பகல், இருட்டுறும்போது இரவு.

சூரியன் கிழக்கிலிருந்து மேற்கே போவதாகத் தோன்றுகிறது. பூமியின் நிஜசலனமோ இதற்குமாறு பட்டிருக்கவேண்டும். அதாவது, அதன் சலனம் மேற்கிலிருந்து கிழக்காக விருக்கிறது. காலையில் கிழக்கில் தோன்றுகிற சூரியனுக்கெதிரில் தள்ளிக்கொண்டுபோகப்படுகிறோம். சூரியன் வரவர வானத்தில் ஏறுகிறாப்போலத் தோன்றி மத்தியானத்தில் தலைக்கு நேராக நின்று மறுபடியும் பூமிதன் ஓயாச் சுழற்சியால் நம்மைஇருட்புறத்திற்குத் தள்ளிக்கொண்டு போகப்போகச் சூரியனும் ஓடி மேற்றிசையில் அஸ்தமிப்பதுபோலத் தோன்றுகின்றது. இரவிலும் பூசலனத்துக்குக் குறிகண்டு பிடிக்கலாம். அப்போது நக்ஷத்திரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் உதயமாய் அஸ்தமிக்கின்றன. பகலவன் ஒளிமுன் அவைகளின் ஒளிமழுங்கி மறைகின்றது.

பூமி தன் இருசின்மீது சுழலும்போதெல்லாம் சூரியனைச்சுற்றி உருண்டு கொண்டும் இருக்கிறது. அதாவது, சூரியனைச்சுற்றி ஓடிக்கொண்டும் இருக்கிறது. சூரியனைச் சுற்றிப்பூமியோடும் வீதிக்குப் பூமியின் கச்சைவட்டம் என்று பெயர். அவ்வீதியில் வலம் வருவதற்குப் பூமியின்பகணம் எனப் பெயர். சூரியனைச்சுற்றி யிருக்கும் பூமியின் வீதி ஒருபெரிய விருத்தம். பூமி இந்த விருத்த மத்தியில் உருண்டு அருக்கனை ஒரு பிரதக்ஷணம் பண்ண முந்நூற்று அறுபத்தைந்து நாட்களுக்குச்சற்று அதிகமாகவே பிடிக்கிறது. விகலை ஒன்றுக்குச்சராசரி பத்தொன்பது மைல் வீதம் சண்டவேகமாய் ஓடியும் தினகரனை ஒருசுற்று வரப் பூமிக்கு இத்தனை நாட்செல்லும்.

பூமியின் தற்சுழற்சியால் பகலும், இரவும், வருஷங்களும் கணிக்கிறோம். ஆதலால் பூமியே நமக்கு ஒருபெரிய கால அளவை.

# கல்வி.

கல்வி—கல் என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர். கற்றுக் கொள்ளுதல் என்னும் பொருள்படும். இதனால் மானிட ஜன்மமெடுத்தவர்கள் அவசியம் தெரிந்துகொள்வதற்குக் கல்வி என்று பெயர். கல்வியறிவில்லாதவர்கள் உலககாரியத்தைச் சரிவர நடத்த இயலாது. உலக இன்பத்தை யனுபவிக்க முடியாது. ஏனெனில், உலக வாழ்க்கைக்குப் பொருள் வரவும் அப்பொருளைப் பாதுகாப்பதும் அதனை விருத்தியாக்குவதும் பிரதானமாகையால், கல்வியறிவில்லாதபோது, இவை நிறைவேறுவது கஷ்டம். இதனால் தான் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றும் "கண்ணுடையரென்பர் கற்றோர்" என்றும் ஆன்றோர் கல்வியின் பெருமையை கூறியுள்ளார். கண்களானவை புறப்பொருளெல்லாவற்றையும் விளக்கிக்காட்டுவது போல், கல்வியறிவானது நன்மை தீமை, நியாயம் அனியாயம், பாவம் புண்ணியம் முதலிய யாவற்றையும் விளக்கிக் காட்டுகிற நியாயத்தால், அதைக் கண்ணுக் குவமையாகக் கூறியுள்ளார். இதனால் "அறம் பொருள் இன்பம் வீட்டைதல் நூற்பயனே" என்ற செய்யுளால் பஞ்சேந்திரியங்களுக்கு விஷயமாகக்கூடிய பொருளையும் இக்கல்வி தெரிவிக்கிறதென்றும் வாக்கு மனதுக்கெட்டாத மோக்ஷவின்பத்தைக் கொடுக்கிறதென்றும் விளக்கப் பட்டது. நம்மவர் கல்வியானது அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கக்கூடியதாகிறது. கல்வியும் 1 அறநூல், 2 பொருள்நூல், 3 இன்பநூல், 4 வீட்டுநூல் என நான்குவகையாயுள்ளன. அறநூல் ஸ்மிருதி முதலாயின. இது பொருளைப் பற்றியும் பேசும். பொருள்நூல் விவசாயம், சிற்பம் விவகாராதிகளைத் தெரிவிப்பன. இன்பநூல் பலவகையாயுள்ளன. வீட்டுநூல் வேதாந்த முதலாயின. நம்மவர்க்கு முக்கியமான நூல் வேதம். அந்த வேதத்திலுள்ளேயே மந்திரம், சோதிஷம், வியாகர

ணம், யோகம், சிற்பம், பௌதிகம் வானசாஸ்திரம், பூகோளசாஸ்திரம் வைத்தியம் முதலியனவும் அறுபத்துநான்கு கலைக்கியானங்களும் சத்து, அசத்து என்னும் பதார்த்தங்களைக் கூறும் தத்துவசாஸ்திரமும் அடங்கியுள்ளன.

மந்திரம்:—விஷம், அமுதம் எனப் பிரிக்கப் பட்டுள்ள அட்சர சம்பந்தத்தால், அகநாடிகளையும் அந்தக்கரணங்களையும் பிராணவாயுவையும் சுத்திசெய்து, சரீரத்தை நிர்மலமாக்கிக் கடவுளைத் தரிசிக்கும் உபாயங் கூறுவது. மந்திர சித்தியில் அளவில்லாத அற்புதங்களைச் செய்யக்கூடும். இது சாஸ்திர சம்பந்தமும் பிரத்தியக்ஷானுபவமுமாகும்.

ஜோதிஷம்,—வைதிக கிருத்தியங்களுக்கு வேண்டிய காலநிர்ணயங்களைக் கூறுவது. மனிதனுடைய ஆபத்து சம்பத்துக்களை முன்னறிவிப்பது. ஆயுளை இவ்வளவென்று நிர்ணயித்து அறியக்கூடியது. இதன் பெருமை அளவிலடங்காது.

வியாகரணம்.—இலக்கண நூல்; இது சொற்களினுற்பத்தியையும் அவற்றின்உண்மையான அர்த்தத்தையும் உபதேசிக்கக்கூடிய சற்குருபோல்வது. இந்த நூலையல்லாமல் எந்த நூலுக்கும் பொருள் படுத்துவது கஷ்டமாகும்—

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதநூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்"

என்று இலக்கண நூலின் மகிமை விளக்கப் பட்டது காண்க.

யோகம்.—இது சரீரத்திலே அந்தர்யாமியாகி மறைந்து வசிக்கின்ற பரமாத்மாவோடு ஜீவாத்மாவைச் சேர்த்து இறப்புபிறப்பு முதலிய துன்பங்களற்றிருக்க வழி கூறுவது. இது நம்மவர்களால் கண்

டறியப்பட்ட பரம இரகசியம். யோகசித்தி பெற்றவர்கள் நினைத்த மாத்திரத்தில் நினைத்த அண்டங்களுக்குப்போய் வரக்கூடிய சக்தியை யும் இருந்தவிடத்திலிருந்து சர்வாண்டங்களில் நடக்கும் விஷயங் களை யறியும் சக்தியையும் அடைவார்கள்.

சிற்பம்.—இது தேவாலய முதலிய கட்டிடங்கள் அமைத்தல், விக்கிரகம் அமைத்தல், சித்திரமெழுதல் முதலியன.

பௌதிகம்.—இது பூதகாரியமாகிய பொருள்களின் குணு குணங்களைப் பற்றிக் கூறுவது. இது பதார்த்தகுண விக்ஞான சாஸ் திரமென்று பெயர்படும். இது வைத்திய முறையை யனுசரிப்பவரு க்கு முக்கியமானது.

வைத்தியம்.—இது சரீரஇயல்பு; சரீரத்துண்டாகும் வியாதியி னியல்பு; அவற்றைநீக்கும் ஔஷதமுறை; ஔஷதப்பொருள்களின் குணுகுணங்கள் இவற்றை நன்குவிரித்துச்சொல்வது. இது ரசாயனம், இரணவைத்தியம், நரம்பு வைத்தியம் எனப் பலவகையாய்ப் பிரிந்து கிடக்கின்றது.

வானசாஸ்திரம்—ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரம் கிரகம் முத லியவற்றின் குணுகுணங்களை விரித்துக் கூறுவது.

பூகோளம்—பூமியில் நிகழும் பொருள்களையும் பூமியினிலக்கணத் தையுஞ் சொல்வது. இவ்விரண்டு சாதகத்தாலேயே இப்பொழுது பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு வருவது மெனவறிக.

### கல்வியைக் கற்கும்விதம்.

இவ்விதமான இகபரசுகபோகாதிகளுக்கு இன்றியமையாத சாதனங்களைத்தரக் கூடியவாறு கல்வியானது பலவகையாக விரி ந்து கிடக்கின்றது. கல்வியை ஔவயார் “ இளமை யிற்கல் ” என்று கூறியிருக்கின்றார். ஏனெனில் இளமையில் சரீரத்திலுள்ள

அகப் புறக்கருவிகள் தன் வசப்பட்டு நிற்கும். அப்போது கற்கத் தொடங்கினால் எளிதில் கற்றுக் கொள்ளலாமென்பதே. அதனாலே தான் நமதுதேசத்தில் ஐந்துவயதில் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்விக்கும் வழக்க மேற்பட்டிருக்கிறது. அப்படிக்கற்கும் கல்வி எக் காலத்திலும் மறக்கப்படமாட்டாது. இவ்விதங் கற்பதும் தகுந்த ஆசிரியனைத்தேடிக் கற்கவேண்டும். தக்க ஆசிரியனிடத்திற் கல்லாத கல்வி பயன்படமாட்டாது. அக்கல்வி பிறருக்கு எடுத்துச் சொல் லப்படும் போது மனம் கூசும். இதுபற்றியே,

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெ னில்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து”

என்று பிரமாணநூல் கூறியதும் எனவறிக. கற்கும்போது ஐயம், திரிபு, அறியாமை என்கிற மூன்று குற்றங்களும் உண்டாகா மல் கற்கவேண்டும். ஆசிரியனிடத்து மிகவும் வணக்கமாயிருந்து அவன் குறிப்பையறிந்து அதன்படி நடந்து கல்விபயிலவேண்டும். புத்தகங்களை அமைவுடனிருந்து பார்க்கவேண்டும். கேட்டபாடங் களை அடிக்கடி சிந்திக்கவேண்டும். வகுப்பு மாணாக்கருடன் பழகு தலும் அவரிடத்து வினாவுதலும் அவ்வினாக்களுக்குத்தரங் கொடுத் தலும் பிறர்க்கவைகளை யறிவித்தலும் வேண்டும்.

## கல்வியின் பயன்.

கல்வியானது நன்மை தீமைகளையறியும் பகுத்தறிவையும், செய் யத்தகுவன செய்யத்தகாதன வென்கிற விதிவிலக்குகளையும், அறநெறி யையும், ஜீவகாருண்யத்தையும் தெய்வபக்தியையும், எடுத்ததை முடிக் கும் புத்திகூர்மையையும், நன்னெறியால் பொருளீட்டும் வகையையும், ஈட்டிய பொருளைச் செலவுசெய்யும் விதத்தையும், பெரியோரிடத்தில் நடக்கவேண்டிய முறையையும், ஜடஜீவபரங்களுண்மையையும் குறை

வறவிளக்கி மோக்ஷானந்தத்தை யனுபவிக்கும் பெருஞ் சக்தியையும் கொடுப்பதாகையால், உலகத்தில் மனிதர்களடைய வேண்டிய பொருள்களெல்லாவற்றிலும் கல்விப்பொருளை விடச் சிறந்தது வேறொன்று மில்லை. இதனை நாயனர்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவர்க்கு
மாடல்ல மற்ற யவை"

என்று திருக்குறளில் வியந்து கூறியுள்ளதையுங் கண்டு உணர்க.

**கல்விப்பொருளுக்கும் செல்வப்பொருளுக்கும் உள்ள பேதம்.**

கல்விப்பொருள் ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. செல்வப்பொருள் கள்வர், பங்காளிகள், பகைவர், அரசர் இவர்களால் கொள்ளப்படும். கல்விப் பொருள் அழிவற்றது. செல்வப் பொருள் வெள்ளத்தாலும் அக்கினியாலும் அழியும். கல்விப் பொருள் பிறருக்குக் கொடுக்குந்தோறும் பெருகிக் கொண்டே வரும். செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே வரும். கல்விப் பொருளுடையவன் புகழும், பொருளும் பெறுவான். செல்வப் பொருளுடையவனுக்கு அநேகமாகப் பகைவர்கள் ஏற்படுவார்கள். ஆகையால் செல்வத்திலும் கல்வியே சிறந்ததென அறிக.

# பட்டு.

---

நேர்த்தியானதும் விலை யுயர்ந்ததுமான அநேக வஸ்திரங்களை நாம் பட்டிலிருந்துதான் செய்துகொள்ளுகிறோம். இந்தப்பட்டானது ஒரு பூச்சி தன்படுக்கைக்காக நூற்கப்படும் நூலேயாம். இது இவ்வளவு கஷ்டப்பட்டுத் தான் தங்கிப் படுத்துக்கொள்ளச் செய்து கொள்ளும் அச்சிறு படுக்கையை நாம் உஷ்ணமான ஜலத்திற்போட்டு அதைக்கொன்று அதன் படுக்கையான பட்

டைக்கைக்கொண்டு நமக்கு வேண்டிய துணிகள், உடுப்புகள் முதலானவைகளைச் செய்து கொள்ளுகிறோம்.

சாதாரணப் பட்டுப்பூச்சியானது முசுக்கொட்டைச் செடியின் இலைகளைத் தின்று ஜீவிக்கும். இந்தவகை பட்டுப் புழுக்களை மிக்க கவனத்துடன் பாதுகாக்கவேண்டியது. சீனு தேசத்திலிருக்கும் பட்டுப் பூச்சிகள் ஆமணக்குச் செடியின் இலைகளையும் இன்னும் நமது தோட்டத்தில் பயிராகும் பலவிதச் செடிகளின் இலைகளையும் தின்கின்றதாகச் சொல்லப்படுகின்றது. மிளகுச் செடிகளின் இலைகளைத்தின்னும் வேறொருவிதப் பட்டுப் பூச்சி சீனுவிலிருக்கின்றது. இது மிகவும் அதிகமாகக் காணப்படும் ஸ்தலம் சீனு தேசத்தின் தென்பாகமாகிய கான்டன் என்னும் ஜில்லாவிலேயே. இந்த கான்டன் ஜில்லாவில் காணப்படும் பட்டுப்பூச்சிகள் மனிதர்களால் வளர்க்கப்படாமல் காட்டில் தன்னிச்சையாய்த் திரிந்துவளரும். இவைகள் நூற்கும் பட்டு மிகவும் கெட்டியா யிருப்பதால், சணல் நாரை எடுப்பதுபோல் பட்டை எடுக்கவேண்டுமாம். நமது இந்தியாவிலும் அஸ்ஸாம் நாட்டில் இந்த விதமான காட்டுப்பூச்சிகள் உண்டாக்கும் பட்டை எடுத்து அநேக காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றோம்.

சாதாரணமான பட்டுப் புழுக்கள் குண்டு ஊசியின்தலையைக்காட்டிலும் சிறியதான முட்டைகளிலிருந்து வெளிவருகின்றன. நூற்றுக்கணக்கான முட்டைகளை ஒரே புழு இட்டு அதன்பின் அது இறந்துவிடும். வசந்த காலத்தில் நன்றாய்ச் சூரியன் காயும் பொழுது இலைகளைப் பட்டுப் புழுக்கள் தின்ன ஆரம்பிக்கும். மஞ்சள் நிறமுடைய முட்டைகளினின்று நூலைவிட மெலிந்ததான கறுப்பு நிறமுள்ள புழுக்கள் வெளியே வருவதைக்காணலாம். இவைகள் இம்முட்டைகளினின்றும் வெளிவந்த உடனே இலைகளைத் தின்ன ஆரம்பிக்கும். ஊசிபோன்ற அந்த மெல்லியபுழு கொஞ்ச நாளில் பெரியதாகி தன் மேலுள்ள தோல் வெடித்துப் போகுமாறு பருத்து விடும். இப்படி பருத்துவிடுவதால் சில நாள்

கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கும். திடீரென்று அந்த மீத்தோல் வெடித்துப் போய் மறுபடியும் ஓர் புதியதோல் மூடிக் கொள்ளும். இப்படி நேர்ந்தவுடன் மறுபடியும் இலைகளைத் தின்று கொழுத்துப் போய் அந்தப்புதியதோலும் வெடித்துப்போகுமாறு பருத்துவிடும். திரும்பியும்அது வெடித்தவுடனே இன்னொருமீத்தோல் உண்டாகும். இப்படி நான்கு தடவை மாறிமாறி நேரிடும். இவைகள் அதி சீக்கிரத்தில் பருத்து நான்குதோல்களைப் புதிது புதிதாயடைந்து ஐந்து அல்லது ஆறுவாரத்திற்குள் பெரிதாகிவிடும். இப்படியாய்க் கடைசி காலத்தில் புழு நிறமே மாறிப்போய்விடும். கறுப்பாயிருப்பதிலிருந்து சாம்பல் நிறமுடையதாகும். இந்தச்சமயத்தில் அது $2\frac{1}{2}$ அல்லது 3 அங்குலம் நீளமுடையதாய் கொழுத்துப்போயிருக்கும். இப்பொழுது நாம் தோட்டங்களில் காணும் கம்பளிப்பூச்சியைப் போலல்லாது, தன்னுடைய சரீரத்தில் 12 வளயங்களையும் 16 கால்களையும், பக்கங்களில் மூச்சு விடுவதற்குரிய நாசித்துவாரங்களையு முடையதாய்க் காணப்படும். 18 நாசித்துவாரங்கள் அதன் ஒவ்வொரு பக்கத்திற்கும் 9–துவாரங்களாகவிருக்கும். அதன் தலையின் மேல் புறத்தில்பக்கத்துக்கு 7 கண்களாய் மொத்தத்தில் 14 கண்களை யுடைத்தாயிருக்கும்.

இவ்விதமாய் வளர்ந்து, பருத்துப் பெரிதாய் 7 அல்லது 8 வாரங்களானவுடன் இரை தின்பதை விட்டுவிட்டு, யாதாவதொரு மூலையிற் போய், நூல் நூற்க ஆரம்பிக்கும். அதன் தாடைக் கீழிருக்கும் இரண்டு சிறிய சந்துகளினின்றும் பொன்னிறமான பட்டுநூலை வெளியே கொண்டு வந்து, அதனாலே தன்னை நன்றாகச் சுற்றிக்கொள்ளும். இப்படிச் சுற்றி முடிந்தபிற்பாடு அதைப் பார்த்தால் சிறிய பொன்னிறமான பட்டு நூற் கண்டு என்றே சொல்லலாம். இந்தச் சிறிய பட்டுப் பூச்சி அதிலேயே அமைதியாயிருந்து இரண்டு அல்லது மூன்று வாரம் கழித்து வெளியேவரும். கூட்டிலிருந்து வெளிவரும்பொழுது முன்போல் பூச்சியாயிராமல் ஓர் சிறிய புழுவாய் வெளி

வரும். இந்த விசித்திர ரூபத்துடன் அது இரண்டு அல்லது நான்கு நாள் உயிரோடிருந்து நூற்றுக் கணக்கான முட்டைகளிட்டு இறந்து போகும். பட்டு உற்பத்திசெய்யவேண்டுமானால் கூண்டிலிருந்து புழுவெளிவருமுன் குரம்பையையெடுத்து வெந்நீரில் போட்டால் உள்ளிருக்கும் பூச்சி இறந்து போய்விடும். பிறகு, பட்டை பருத்தி நூலை நூற்கின்றதுபோல் ராட்டிணத்திலிட்டு நூற்று நூலை உண்டாக்கவேண்டும். பட்டு எடுத்துக் கொள்ளவேண்டியதாயிருந்தால் பட்டுக்கூண்டுக்குள்ளிருக்கும் பூச்சியைக்கொன்றே எடுக்கவேண்டும். கொல்லாமல் வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை.

## பூச்சிகளைக் கொல்லும் விதம்.

பட்டுப்பூச்சியானது குரம்பைக்குள் தான்நூற்ற பட்டைக்கொண்டு தன்மேல் சுற்றிக்கொண்டிருக்கும் காலத்தில், அதைக்கொன்று பட்டை உபயோகித்துக்கொள்ள மூன்றுவித வழிகளுண்டு. அவைகளாவன; (1) வெயிலிலுலர்த்தி எடுத்துக்கொள்ளுதல் (2) சுட்டு எடுத்துக் கொள்ளுதல் (3) நீராவியிலிடுதல் ஆகிய இவைகளேயாம். (1) புழுக் குரம்பைகளை வெயிலில் நாலைந்து நாள் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிச்செய்வது அந்தந்தக்காலத்தைப் பொருத்ததாயிருக்கும். (2) புழுக்குரம்பைகளை எப்படிச்சுட்டு எடுத்துக்கொள்ளுகிறதென்று பார்ப்போம். ஓர் சூளை அடுப்பிலாவது அல்லது பூமிக்குள் ஓர் குழிதோண்டியாவது அக்குரம்பைகளைக் கொட்டித் தீ மூட்டவேண்டும். பூமிக்குள் தோண்டும் குழியானது அதிகஆழமாயிராமலும் செங்கல்களாலும் சுண்ணும்பாலும் கட்டப்படவேண்டும். தீயை அதிகமாய் எரிக்கவிடாமல் நிதானமாயும் கொஞ்சமாயும் எரியும்படியாய்ச் செய்யவேண்டும். இப்படிச்செய்யும் பொழுது கைவிடாமல் அவைகளை வதக்கிக்கொண்டு வரவேண்டியது. பட்டுக் குரம்பையிலிருக்கும் புழுவானது உஷ்ணம் தாங்க முடியாமல் இறந்து போய் விடும். (3) புழுக்குரம்பைகளை நீராவியிலிட்டு எப்படியெடுத்துக்கொள்கிறதென்றால் ஒரு பானையில் தண்ணீர்விட்டு அதைக்கொதிக்

கும்படி அடியில் கட்டைகளிட்டுச் சுடவேண்டும். புழுக்குரம்பை களை ஓர் கூடையிலாவது அல்லது கண்ணுள்ள இருப்புப்பாத்திரத்தி லாவது கொட்டித் தண்ணீர் விட்டு வைத்திருக்கும் பாத்திரத்தின் மேல் வைக்கவேண்டும். தண்ணீரிலிருந்து வரும் நீராவியானது குரா ம்பைகளின்மேல் பட்டவுடன் புழுக்கள் இறந்துபோகும். இந்தவித மாகத்தான் பட்டைப் பெரும்பாலோர் எடுக்கின்றார்கள். பிறகு பட்டு எடுத்துக்கொள்ள அவைகளை ராட்டிணத்திலிட்டுப் பருத்தி நூல் நூற்கின்றதுபோல் நூற்று நூலை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சென்ற அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர், பட்டு வஸ்திரங்கள் சீனு தேசத்தில் நெய்யப்பட்டு ஐரோப்பாமுதலிய கண்டங்களுக்கு யனுப்பப்பட்டுவந்தன அப்பொழுது ஐரோப்பியர் அவைகளை அதிகப் பணம் கொட்டிக் கொடுத்து வாங்கிக்கொண்டுவந்தார்கள். சீனுவில் மாத்திரம்தான் முதல் முதலில் பட்டுப் பூச்சிகள் இருந்ததாக சொல் லப் படுகின்றது. ரோமாபுரியை அரசாண்டு வந்த சக்கிரவர்த்தி யொருவன் இரண்டு மனிதர்களைச் சீனுவுக்கு அனுப்பினதாகவும், அவ ர்கள் கொஞ்சம் பட்டுப் பூச்சிகளை ஒரு பொந்துள்ள தடியில்மறைத் துச் சீனர்கள் கண்டு பிடிக்காவண்ணம் தங்கள் ஊருக்குக்கொண்டு வந்ததாகவும் பிறகு தங்கள் ஊரில் முசுக்கொட்டைச் செடியைப் பயி ராக்கிப் பட்டுப் பூச்சிகளை அவைகளில் மேயவிட்டு விர்த்திக்குக்கொ ண்டு வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. பிறகு ரோமாபுரியிலிருந்து கிரீஸ் என்னும் தேசத்துக்கும், பிராஞ்சு தேசத்திற்கும் பூச்சிகள் கொண்டுபோகப்பட்டு அங்கும் பிரபலித்துவந்தனவாம். இந்நாளில் பிராஞ்சு தேசத்தில் பட்டுக் கைத்தொழில் அதிக பிரபலமாய் நடந்து வருகிறது. ரயின் நதிக்கரையிலுள்ள லயான்ஸ் என்னும் ஊர்தான் இத ற்கு முக்கியமானதாயிருக்கின்றது. நமது இந்தியாவில் முசுக்கொட் டைச்செடி பயிராகும் எல்லாவிடங்களிலும் பட்டுப்பூச்சிகளைவளர்த்து பட்டெடுக்கும் கைத்தொழிலை ஏற்படுத்தலாம். நம் தேசத்தில் பட் டுப்பூச்சி வளர்வதற்கு வேண்டிய உஷ்ணமும், முசுக்கொட்டைச்செடி யும், இன்னும் மற்ற சாதனங்களும் எங்கு பார்த்தாலுமிருக்கின்றன.

நமது தேசத்தார் இப்பொழுது தான் பட்டுத்தொழிலில் கவனம் செலுத்திவருகின்றார்கள். இதைப்பற்றிப் பரிசோதனைசெய்ய ஓர் பண்ணை சர்க்காரால் பூசா என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நன்றாய் நடந்து வருகின்றது. அஸ்ஸாம் தேசத்தில் ஓர்வித முரட்டுப் பட்டுண்டாக்கப்பட்டு இயந்திரங்களின் உதவியால் விலையுயர்ந்த வஸ்திரங்கள் நெய்து வருகிறார்கள். இந்தியாவிலும் இது இன்னும் கொஞ்ச காலத்திற்குள் அதிக பிரபலத்திற்கு வருமென்பதில் ஆக்ஷேபனை யில்லை.

# கோபம்.

கோபம் நமக்குள் எல்லாரிடத்தும் இயல்பாய்த் தோன்றக் கூடியது. விசேஷமாய் நமக்கு ஒவ்வாத காரியத்தைப் பிறன் ஒருவன் செய்யக் காணின் அப்பொழுதும், அபிப்பிராய பேதத்தாலும், பொறாமையாலும், பிறரால் நமக்குத் தீங்கு நேரிடுங் காலத்தும் இக்கோபம் உண்டாகிறது. இதை ஒவ்வொருவரும் தமது மனோதிடத்தைக் கொண்டு தணிக்கவேண்டியது. மிஞ்சவிடலாகாது. மிஞ்சி விடுமாகில் கண் தலை தெரியாது. பிறகு "தீராக்கோபம் போராய் முடியும்" என்று ஔவைப் பிராட்டியார் ஓதியதுபோல முடியும். ஒரு விஷயத்தில் நமக்குக் கோபம் உண்டாகும்போலிருந்தால் அதை அடக்கி, "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்பதை மனதிற் கொண்டு அவ்விஷயத்தைப் பற்றிச் சிறிது யோசித்துப் பிறகு துணியவேண்டும். பெரும்பாலும் இக்கோபம் மனோதிடமற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடி உண்டாகும். வயோதிகர்களுக்கும் வியாதியஸ்தர்களுக்கும் அடிக்கடி அற்பவிஷயங்களுக்காகக் கோபம் வருவதுண்டு. கோபமுண்டாகும்போது சற்று நிதானித்து அடக்கி விடுவோமாகில் அதன் பிரயோசனம் பிறகு தெரியும். ஆன்றோர் "சினத் திருந்தால் வாசல்வழி சேரவேண்டாம்" என்றும்,

"சினந்தேடி அல்லலையுந் தேடவேண்டா" மென்றும் எடுத்து நீதியுரைத்துள்ளார். தெய்வப் புலவர் திருவள்ளுவ நாயனார் தமது தமிழ் மறையில்,

"மிகுதியான்மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்" என்றும்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்றும் கூறியுள்ளார். அதாவது அகங்காரத்தால் ஒருவன் செய்யும் கெட்ட காரியங்களை பொறுமையால் வென்றுவிடலாமென்றும், கோபிப்பவர்களுக்கு அன்றைக்கொருநாளைக்கு இன்பமும், பொறுத்தார்க்குச் சாந்துணையும் புகழும் உண்டாகுமென்றும் கூறுவாராயினர். ஆகவே கோபிப்பதால் விளையுங் கெடுதியும் பொறுமையால் விளையும் நன்மையும் இனிது விளங்குகின்றன. அன்றியும் மனிதனிடத்துள்ள துர்க்குணங்கள் யாவும் பிறருக்கும் தனக்கும் தீமை தரத்தக்கனவாயிருக்கின்றன. இவ்விருவகைக் குணங்களுள் தனக்கே கெடுதி விளைக்கத்தக்கவைகளுக் கெல்லாம் முதன்மையானது கோபம்; அதனால் தான்,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்கக் காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்"

எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். அதாவது தன்னைத்தான் காத்துக்கொள்ள வேண்டுமாயின், தனக்குண்டாகும் கோபத்தை அடக்கவேண்டுமென்றும், அப்படி அடக்காவிடில் அச்சினம் தன்னையே கொல்லும் எனப்படுகிறது. இப்படிப்பட்ட தீய குணத்தைக் கடவுளேன் நம்மிடத்தில் அமைத்து வைக்கவேண்டுமெனின், ஒருவித நன்மையின் பொருட்டேயாம். உதாரணமாக ஒரு வேலைக்காரன் ஏதேனும் ஒரு பிழை செய்து விடுவானாகில், அவனிடத்து அவன் எஜமானன் சிறிது கோபமேனும் காட்டவேண்டும். இல்லை

யேல், அவன் அவ்வழியினின்றும் திரும்பான். அன்றியும் ஒருவன் தன்மகன் தீய காரியத்தைச் செய்யக்காணில் கோபியாதொழிவானு கில் மீண்டும் அவன் கெட்ட வழியிலேயே நின்று கெடுவான். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் கோபத்தைச் சிறிது காட்டவேண்டுமேயன்றி மிதமிஞ்சிய கோபத்துக்கு இடங் கொடுப்பது கூடாதென்பதேயாம். எவனிடத்தும், எந்த சாதுவினிடத்தும் கோபம் முற்றுமில்லாமற் போகாது. கூடியவரையில இதை அடக்கிவருவதே உத்தமம் என்று கொள்ளவேண்டும். இதனை ஒளவைப்பிராட்டியார் கூறிய "ஆறுவது சினம்" என்னும் அமுதவாக்கானுமுணர்க. கோபத்தை ஏன் அடக்கவேண்டுமெனக் கூறினுரெனில், இதனுல் விளையுங் கெடுதியை ஆன்றோர் அடியில் வரும் செய்யுட்களால் விளக்குகிறுர்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்கும் குட்ட நோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண் படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ" என்றும்,

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தால் நகுடனும் கோலமாற்றினன்
கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினன்
கோபத்தால் இறந்தவர் கோடி கோடியே"

# லோகங்கள்.

---

பூமியில் எங்கு பார்த்தாலும் பதார்த்தங்கள் நிறைந்திருக்கின்றன. இப்பதார்த்தங்களை ரசாயனசாஸ்திரிகள் பலவிதமாகச் சோதனை பண்ணிக் கடைசியில் அவைகள் துண்டு பண்ண முடியாமலிருக்கும்படியான நிலைமையை அடைகின்றன என்று ஸ்தாபித்திருக்கிறுர்கள். அப்பேர்ப்பட்ட நிலைமையை உடையன ஏறக்குறைய எண்பது விதமானவை-அவைகளை உயிரணு (Atoms) என்று சொல்வது வழக்கம்.

இவ்வெண்பதில் சில சில பொதுக்குணங்கள் அனேகமுடையன. அக்குணங்களின் விசேஷத்தைக்கொண்டு அவைகளை பிரிக்குமளவில், லோகங்கள் என்றும் அலோகங்கள் என்றும் இரண்டு சாதாரண பிரிவுகள் ஏற்படுகின்றன. இவை இரண்டிலும் சேராமல் இடைநடுவே உலாவும் சிலவும் உள. உண்மையில் இவைகளை இவைகளின் உரிப குணங்கள் கொண்டு ஆயுங்கால், அவைகள் சிற்சில சிறுபேதங்களுடன் ஒன்றன் மேலொன்று படிந்திருப்பது தவிர வேறில்லை. ஆயினும் இப்பதார்த்தங்களை, லோகங்கள், அலோகங்கள், லோகாலோகங்கள் என மூன்று வகையாக வகுப்பது மரபு.

இயற்கையில் இவைகள் உயிரணுக்களாய் இரா; ஒன்றோ, இரண்டோ, மூன்றோ முதலிய உயிரணுக்கள் சேர்ந்த ஒரு உடலணுவாய் விளங்கும். இவற்றின் தொகுதியே நாம் கண்கூடாகப்பார்ப்பது. ஆக இம்மாதிரி பின்னப்படுத்த முடியாத எண்பது மூலவஸ்துக்களில் பதினைந்தே அலோகமானவை. ஏனையவற்றில் சிறுபான்மை லோகாலோகங்களாயும் மற்றவை லோகங்களாயும் இவ்வுலகிலிருக்கின்றன. இவைகளெல்லாம் தனித்தனியாய் இயற்கையிலிருப்பது துர்லபம். அப்படியும் சில உள. ஆனால் அவை மிகக்கொஞ்சமே. லோகங்கள் அனேகமாய் கனி (Mines) களினின்றும் சுத்தம்பண்ணி எடுக்கவேண்டியதாயுள. இவ்வுலோகங்களைப்பற்றி சிறிது விவரமாய் ஆராய்வோம்.

தொன்று தொட்டு முன்னோர்கள்காலமுதல் தெரிந்தவையாயுள்ள லோகங்கள் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்று சொல்லப்படும் பஞ்சலோகங்களே. ஏனெனில் இவைகளே அவைகளின் சேர்க்கைப்பதார்த்தங்களினின்று இலகுவாய் பிரித்து சுத்தம் பண்ணக்கூடியன. இவைகள் பலவிதமாய் நம் வாழ்நாளின் பிரயோஜனத்துக்கு உபயோகப்பட்டு வருகின்றன. இவையல்லாமலும் உபயோகப்படும்படியான லோகங்கள் இன்னும் அநேகம்உண்டு. உதாரணமாக துத்தநாகம், கரம், நிக்கல், மக்னீஷியம், முதலியன இவை

களில் ஒவ்வொன்றையும் பற்றி ஆயும்போது நாம் அதனதன் (1) சரித்திரச்சுருக்கம், (2) சேர்ந்து விளங்கும் வஸ்துக்கள், (3) அகப்படும் இடங்கள் (4)சுத்தம் பண்ணும் விதங்கள், (5) குண விசேஷங்கள், (6)பிரயோசனங்கள் என்ற ஆறுபிரிவுகளிலும் விளக்கவேண்டும்.

ரசம் என்ற ஒரு லோகத்தைத்தவிர மற்றெல்லா லோகங்களும் (காற்றின் கிரம சீதோஷ்ணஸ்திதியில்) திடபதார்த்தங் (Solids) களே—ரசத்தையும் மிகக்குளிர்ச்சியினால் திடபதார்த்த மாயாக்கலாம்; ஆனால் சாதாரணமாய் திரவமாகத்தான் விளங்குகிறது. (2) உருகுந் தன்மையில் ஒன்றுக்கொன்று வித்தியாசமதிகமுளது. உதாரணமாக, கார உலோகம் (Potassium) 62.5 டிகிரியில்உருகுகிறது. பிளாட்டினமும் அதன்இனமும் பிராணவாயு (Oxygen) ஜலவாயு (Hydrogen) இரண்டினாலும் கிடைக்கும் அதி உக்கிர உஷ்ணத்தில் தான் உருகுகின்றன. (3) லோகங்கள் இறுக்கமாயிருக்கும்போது மந்தமாயிருக்கின்றன. அதாவது ஒளி ஊடுருவிச்செல்லுகிறதில்லை. மேலும், அவைகள் ஒளியை பிரதிபிம்பிக்கச்செய்கின்றன. (4) எல்லா லோகங்களும் கனமாயிருக்கின்றன. நமக்குத்தெரிந்த மட்டிலும் எல்லா திடபதார்த்தங்களிலும் மிகக்கனமாயிருப்பது பிளாட்டினம் என்னும் லோகமே. மிகுஇலகுவாயிருப்பதுவும் லிதியம் எனும் லோகதிட பதார்த்தமே. ரசாயனகுண ஒற்றுமையினால் கோர்வையாயுள்ள லோகங்கள் எல்லாம் கிட்டத் தட்ட ஒரே பரிமாண அடர்த்தியை உடைத்தாயிருக்கின்றன. உதாரணமாக, வெள்ளி, ஈயம் Sp. Gravity. (10·5; 11·3); இரும்பு, நிக்கல், கோபால்ட், தாமிரம் (7·8; 6·8; 8·9; 8·9·). (5) எல்லா லோகங்களும் உஷ்ணத்தைச் செலுத்துவதில் அதி மேலானது. ஆனால் அவைகளுள் வித்தியாசமுண்டு. சம உஷ்ணம் கொடுத்தால் சமகாலத்தில் 1000 அடி வெள்ளிக் கம்பியும் 736 அடி தாமிரக்கம்பியும் 532 அடி தங்கக்கம்பியும் 119 அடி இரும்புக்கம்பியும் 85 அடி ஈயக்கம்பியும் சமமான சூட்டை அடையும். இவை எல்லாவற்றிலும் வெள்ளியே அதிசீக்கிரமாய் உஷ்ணத்தைச் செலுத்துகிறது. (6) மின்சாரத்தையும் இலேசாய்ச் செலுத்

துவது லோகங்களே. மேற்சொன்ன கிரமப்படியே இக்குணத்திலும் அவை நிற்கின்றன. (7) அனேகமாய் எல்லா லோகங்களையும் தகடாயடிக்கலாம் சிலவற்றை உதாரணமாக, துத்தநாகத்தை, கொஞ்சம் சூடான நிலைமையில்தான் தகடாயடிக்கலாம். (8) அனேகலோகங்களை கம்பியாயிழுக்கலாம். ஆனால் முந்தின தன்மையும் இதுவும் ஒரோசியில் இருப்பதில்லை. எவ்வளவு இலகுவாய் தங்கத்தைத் தகடாயடிக்கலாமோ அவ்வளவு இலகுவாய் அதைக்கம்பியாய் இழுக்க முடியாது. ஈயமும் தகரமும் இலேசாய் தகடாக்க முடியினும் கம்பியாய் வருவது துர்லபம்; ஏனெனின் இத்தன்மை அதிகமாய் அந்தந்த லோகங்களின் ஒட்டுந்தன்மை (Tenacity) யைப்பொருத்து இருக்கின்றது. (9) எல்லாலோகங்களும் பிராணவாயுவுடன் சேர்ந்து ஒவ்வோர் பஸ்மங்கள் (oxides) ஆகின்றன. அவைகள் புளிப்புத்திராகவத்துடன் (aicds) சேர்ந்து பல உப்புக்கள் (salts) ஆகின்றன. ஆகலோகபஸ்மங்கள் எல்லாம் இத்தனிக் குணத்தை உடையன. இவைகளே லோகங்களின் முக்கிய பொதுக் குணங்கள்.

லோகங்களின் உபயோகங்கள் பலவிதமாயிருக்கின்றன-எல்லாம் மனிதனுடைய சௌகரியங்களையும் சுகத்தையுமே அதிகரிக்கின்றன. அவைகளின் (1) உபயோகத்துக்கும் (2) அருமைக்கும் (3) சுத்தமாக்கும் சுளுவுக்கும் தக்கபடி அவைகளின் விலை ஏற்படுகிறது. சில லோகங்களின் விசேஷங்களை ஆராய்வோம்.

தங்கம் மூலவஸ்து (element) வாகவே கிடைக்கிறது. ஆனால் சேர்த்துத்திரட்டுவது கஷ்டம். காற்றினாலும் சீதோஷ்ணத்தினாலும் ஜலத்தினாலும்அது மாறுதலை அடைகிறதில்லை. ஆதலினாலே இதை நாணயத்துக்காக சில தேசங்களில் உபயோகப்படுத்துகிறார்கள். பண்டைக் காலங்களிலும் இதே இக்காரணங்கொண்டு விலை மதிப்புக்கு ஓரளவையாய் ஏற்பட்டது. இது ஒரு நல்ல ஊதாவர்ணம் கொடுப்பதினாலே புகைப்படங்கள் அச்செடுப்பதற்கு உபயோகப்படுகிறது. இது இயற்கையில் நல்ல மஞ்சள் நிறத்துடன் ஜொலிப்பதால் நகைகளுக்கும் உப

யோகப்படுகிறது. இது மிகவும் மிருதுவானது. ஆனதுபற்றி நகைகளுக்கும் நாணயங்களுக்கும் உபயோகப்படுத்தும்போது கொஞ்சம் தாமிரம் கூடக் கலப்பது மரபு. அதை கந்தகத்திராவகமும் (sulphuric acid) வெடி யுப்புத்திராவகமும் (Nitric-acid.) ஒன்றும் செய்ய முடிகிறதில்லை. ஆனதுபற்றி அதற்கு மஹத்தான லோகம் அல்லது லோகராஜன் என்ற பெயருண்டு. அது உப்புவாயு (Chlorine) கொடுக்கும் திராவக (aquaregia) த்திஞலேயே கரைக்கப்படுகிறது. தங்கம் சேர்ந்தமணலை ஓடுந்தண்ணீரில் நன்ருய் அலசுவதிஞல் இலேசான மணல் நீருடன் சென்றுகனமான தங்கம் அடியில் தங்கும். மணலுடனல்லாது கல், பாறை இவைகளுடன் சேர்ந்திருந்தால் கல், பாறைகளை முதலில் பொடிப் பொடியாய் அரைத்து பின் ஓடுந் தண்ணீரில் அலசுவார்கள். இதுவே முற்கால முறைமை. இப்பவும் சில இடங்களில் அப்படித்தான். ஆனல் இப்படிச் செய்வதில் கொஞ்சம் தங்கம் சேதமாகி நஷ்டப் படுகின்றது. தங்கம் நுண்ணிதாய் பாய்ந்திருந்தால் அதை ரஸத்தில் கரைத்து பின்னர் அம்மிசிரத்தை காய்ச்சி ரஸத்தைவேறு பாத்திரத்தில் இறக்கி தங்கத்தை சுத்தமாய் இப்பொழுது பிரிக்கிருர்கள். இன்னும் வேறு சில ரசாயனவழிகளுமுண்டு. தாமிரங்கலந்த தங்கத்தைப் பொன் என்று சொல்வது உலக இயல்பு.

வெள்ளிக்கு தங்கத்தின் குணங்களில் அனேகம் உண்டு. இதுவும் மூலவஸ்துவாகவே இயற்கையில் கிடக்கிறது. அப்பொழுது அதன் கூட செம்பு, பொன் முதலியவை மிசிரமாயிருக்கின்றன. தவிரவும் வெள்ளி வேறு சில மூலவஸ்துக்களுடன் கலந்த சேர்க்கைப் பொருளாகவும் கிடைக்கிறது. இவைகளினின்று மூன்று இரசாயன வழிகளால் இது சுத்தமாக எடுக்கப்படுகிறது. இது பளபளப்பான ஒரு வெள்ளை லோகம். இதை ஆகாயக்காற்று சாதாரணமாக ஒன்றும் செய்வதில்லை. ஆனல் அனேக நாளாக அழுகிக் கிடக்கும் கிணறுகளினின்றும் பட்டணங்களின் சாக்கடைகளினின்றும் வெளிக்கிளம்பும் ஒரு வித துர்நாற்றக்காற்ருனது இதைக் கறுத்து விடச் செய்கிறது. இது "கந்தகமேறிய ஜலவாயு" (Sulphuretted hyd-

rogen) என்று சொல்லப்படுகிறது. வெள்ளியையும் இலகுவில் தகடாயடிக்கலாம். கம்பியாயும் நீட்டலாம். இது உஷ்ணத்தையும் மின்சாரத்தையும் தன்வழியாய் அதிசீக்கிரமாய் எளிதில் செலுத்துகிறது. இது திராவகங்களில் கரைகிறது. வெடியுப்பு திராவகத்தில் கரைத்து அதினின்று கிடைக்கும் வெள்ளி வெடியுப்புத் தண்ணீரையே (Silver nitrate solution) ஆஸ்ப்பத்திரிகளில் கண்வலிக்கு மருந்தாக சொட்டு சொட்டாய்க்கண்களில் விடுகிறார்கள். இதைத் தாமிரத்தோடு கலந்து நகைகளுக்கும் நாணயங்களுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். நம்நாட்டு அரைக்கால்ரூபாய் நாணயத்தில் பன்னிரண்டில் ஒரு பங்கு செம்பும் மற்றைய பதினொன்று பங்கு வெள்ளியுமாயிருக்கிறது. மற்ற கால் ரூ. அரை ரூ. முழு ரூ. இவைகளில் வெள்ளியின் பங்கு கொஞ்சம் வித்தியாசமுடையதா யிருக்கிறது. இது சில சாமான்களின் மேல் வெள்ளி (கிலிட்) முலாம் பூச உபயோகப்படுகிறது. மேலும், சாதாரணக்கண்ணாடியின் மேல் ஒரு ரசாயனவழியில் வெள்ளியை நுண்ணியதூளாய் படியச் செய்து அதை நிலக் கண்ணாடியாயும் முகக் கண்ணாடியாயுமாக்கலாம் இவையல்லாமலும் வெள்ளியின் சேர்க்கைப்பதார்த்தங்கள் சில புகைப்பட மெடுப்பதில் இன்றியமையாதன வாயிருக்கின்றன.

செம்பும் இயற்கைப் பொருளாயும் சேர்க்கைப் பொருளாயும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. இது ஒரு பளபளப்பான சென்னிற லோகம். இதையும் தகடாயுமடித்துக் கம்பியாயும் நீட்டலாம். ஆனால் வெகு சுத்தமாயிருக்கவேண்டும். கொஞ்சம் பிறகலப்புயிருந்தால் கூட அவ்வளவு சுளுவாய் அடித்து நீட்டமுடிவதில்லை. நாளாவர்த்தியில் ஆகாயக் காற்று இதை மாறுபடுத்துகிறது. இதைக் காய்ச்சினால் ஒரு கருப்பு தாமிரபஸ்மமாய் (Oxide) ஆகிவிடுகிறது. இது முக்கியமாய் மின்சாரம் செலுத்துவதற்கு உபயோகப்படுகிறது. மேலும் இது துத்தநாகத்துடன் கலக்கப்பட்ட பித்தளையாய் ஆக்கப்படுகிறது. இன்னும் தகரம் அலூமினியம் முதலியலோகங்களுடன் கலந்து கல

வை லோகங்களாய்க் கைத்தொழில்களிலும் சிற்பவேலைகளிலும் பெரும்பாலும் உபயோகப்படுகிறது.

துத்தநாகம் இயற்கைப்பொருளாய் கிடைப்பதில்லை. சேர்க்கைப் பொருள்களை முதலில் பஸ்பமாய் நீற்றி, பின் அதிக உக்ர உஷ்ணத்தில் நிலக்கரியுடன் (Coal) சேர்த்து சுத்தமாக்கப்படுகிறது. இது ஒளி மங்கின நீலநிறலோகம். சுலபமாய்உடையுந்தன்மையையுடையது. 100 டிகிரிக்கு மேல் 150டிகிரிக்குள் காய்ச்சின துத்தநாகத்தை தகடாயடித்துக் கம்பியாய் நீட்டலாம். 300டிகிரிக்கு மேல் காய்ச்சினால் ஒரு நிமிஷத்தில் பொடிப்பொடியாய் விடுகிறது. இது 430டிகிரியில் உருகி 930டிகிரியில் கொதிக்கிறது. சாதாரணமாய் நீரினாலும் காற்றினாலும் இதற்கு மாறுபாடுகிடைப்பதில்லை. ஆதலின் இரும்புப்பதார்த்தங்களை உருகும் துத்தநாகத்தில் முக்கி எடுத்து கூரைகளுக்கும் ஜலம் சேர்த்துவைக்கும் தொட்டிகளுக்கும், வலை பின்னுவதற்கும் உபயோகப் படுத்துகிறார்கள். இதைத் துத்தநாகத் தகடு என்று மாட்டுக் கொட்டில்களுக்கும், யந்திரசாலைகளில், ஜலத்தொட்டிகளுக்கும் நம்மவர்கள் உபயோகப் படுத்துகிறார்கள். உண்மையில் அவை உருகின துத்தநாகத்தில் தோய்த்து எடுத்த இரும்புத் தகடுகளே. மேலும் இது அனேக கலவை லோகங்களுக்கு முக்கியவஸ்துவாயிருக்கிறது. "ஜெர்மன்சில்வர்" சாமான்களை நம் நாட்டில் அபரிமிதமாய் ஜனங்கள் வாங்குகிறார்கள். அவைஎல்லாம், செம்பு, துத்தநாகம், நிக்கல் என்ற மூன்று லோகங்களிலான ஒரு கலவை லோகமாகிய "ஜெர்மன்சில்வரால்" செய்யப்பட்டதே. அந்தக்கலவைலோகம் வெள்ளி நிறத்தையும் உடைத்தாயிருப்பதால் அதற்கு "ஜெர்மன் வெள்ளி" என்று பெயர் வந்தது.

முறையே இம்மாதிரி இன்னும் பலலோகங்களை கற்க முயலவேண்டும். கற்பதின் பிரயோசனம் எண்ணிறந்தது. கொஞ்சம்தான் தெரிந்த அனேகலோகங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் இன்னும் கற்கப்பட்டு ஆராய்ச்சியிலிருக்கின்றன. அதி அற்புதமான

ரேடியம் என்னும் லோகம் வெகு விசித்திரமானது. அதன் அபூர்வ குணங்கள் அதிவிசேஷமாய்ச் சொல்லப்படுகின்றன. இது இடைவி டாத உஷ்ண சக்தியையும் மற்ற சக்திகளையும் கொடுத்து வருகிற தாம்.

"ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகாது".

ஆதலின் நம் நாட்டவர்கள் கற்றதை அனுபவசித்தாந்தத்துக்கு கொண்டுவர முயல வேண்டு மென்பதே நம் பிரார்த்தனை. கடவுள் அருள் புரிவாராக.

# பெண் கல்வி.

---

"எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்".

என்ற ஔவையின் அற்புத வாக்கின்படி, நமது சரீரத்திற்கு இரு கண்களும் எவ்வாறு பிரதானமாய் விளங்குகின்றனவோ அவ் வாறே ஒருவனுக்கு அறிவைப்புகட்டி, புத்தியை நல்வழியிற் செலு த்தக் கல்வியே நேத்திரமாய் விளங்குகின்றதாம். கடவுளின் சிருஷ்டி களெல்லாவற்றினும் உயர்ந்தது மானிடவர்க்கம். பகுத்தறிவும் விவேகசாரமும் ஆண், பெண் ஆகிய இருபாலரும் பெற்றுளர். ஆகையால் ஆண்பிள்ளைகளுக்கு கல்வி எவ்வாறு அவசியமோ அவ் வாறே பெண்களும் கற்கவேண்டியது முக்கியமான காரியம்.

முற்காலத்தில் நமது தேசத்தில் பெண் கல்வியானது எங்கும் பரவி, செழிப்புற்றோங்கி யிருந்ததென்பதை நாம் சரித்திரமூலமா யும் இதிகாச புராணங் களினின்றும் எளிதில் அறியலாம். சில நூற்றாண்டுகளுக்குப் பின், மகம்மதியர், நமது தேசத்தைக்கைப்பற் றிக் கொள்ளவே, பெண் கல்வியானது நிலை குலைந்து, மாசுபடர்ந்த மாணிக்கம் போலாய்விட்டது. அநேக நாட்களாக அவ்வித நிலை

மையிலேயே யிருந்த "மாதர்கல்வி, பின்னர், பரோபகாரத்தையே தமது வாழ்நாட்களின் பிரதான விரதமாகப் பூண்ட ஆங்கிலேயரின் பெருமுயற்சியால் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தற்கால நிலைமைக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

பெண்கள் கற்கவேண்டிய விஷயங்கள் அநேகமுள. சுகாதார விதிகளை முதலில் அவர்கள் கற்க வேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் அவரவர்கள் வசிக்கும் வீடுகளைச் சுத்தமாகவும் நல்ல சாற்றோட்ட முள்ளவைகளாகவும் வைத்துக் கொள்ளுதல் அவர்களுக்கு அரிதான காரியமாகும். தவிர, வரவுக்குமேல் செலவிடும் துர்வழக்கத்தினின்றும் விடுபடுமாறு பெண்களுக்கு கணிதசாஸ்திரப் பயிற்சியும் அவசியம் வேண்டும். இவ்வுலகினில் கடனில்லாமல் வாழ்பவரே எல்லாச் சுகங்களையும் அனுபவிக்க வல்லவர். ஒருமுறை கடன் வாங்கும் கெட்டவழக்கத்தைக் கைக்கொண்டால், பிறகு அத்துராப்பியாசமே மேன்மேலும் பிடிபட்டு, "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழிக்கிசைய, குடும்பமே வேருடன் நிலைகுலைந்து போகும். மேலும் தேகாரோக்கியமும், புத்தி கூர்மையுமடையப் பெற்று வலிமையும் பொருந்தியுள்ள வத்ஸர்களையடைவது சரீர சாஸ்திரப் பயிற்சி பெற்றோர்க்கே கூடுமாதலின், அவ்வித அறிவையும் நமது சகோதரிகளுக்கு புகட்டுதல் வேண்டும். சுருக்கமாக, நமது ஸ்திரீ ரத்தினங்கள் தமதுவாழ்நாட்களில் எவ்வித கடமைகளைச் செய்ய நேரிடுமோ அவற்றை யெல்லாம் அணுவளவேனும் பிசகாமல் சரிவரச் செய்யுமாறு அறிவைப் புகட்டுவதே கல்வி கற்பிப்பதின் முக்கிய நோக்கமாம். முதிர்ந்த பேரறிவுடைய ஓர் உத்தமி தனது ஆருயிர்க்காதலனுக்குக் கஷ்டம் வந்த காலத்தில் பெற்ற தாய் போலவும், புத்தி சொல்லுவதில் ஒப்பற்ற தந்தையைப் போலவும், துன்பசாகரமாகிய இம்மானிட வாழ்வைக்கடந்து செல்ல இணையற்ற இன்பத்தைச்சுரக்கும் கற்பரசியாகவும் நடந்து கொள்வாள்.

சுகாதார விதிகளை நமது சகோதரிகளுக்குக் கற்பித்தல் அத்தியாவசியமான காரியம் என்று மேலே எடுத்துக் கூறியதின் காரணம் என்னவென்றால், வீட்டை நேர்த்தியாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வதற்கும், அவ்வீட்டின்கண் வாழும் மனிதர்களின் குணாதிசயங்களமைவதற்கும் நெருங்கிய சம்பந்தமுள. ஒரு வீடானது எப்பொழுதும் அசுத்தமே குடிகொண்டு விளங்கப்பெற்று, நேர்மையென்பதைக் கனவிலுங் கண்டறியாமலிருந்தால், அவ்வில்லின்கண் வாழும் மனிதருடைய குணங்களும் தீய வழியிலேயே மேன் மேலும் சென்று, நல்லொழுக்க மென்பதை அணுவளவேனும் பெறாமல், சதா துன்மார்க்கத்திலேயே சென்று கொண்டிருக்கும். நமது சிறுவர்கள் வீட்டின்கண் பாலியத்தில் பெறும் பயிற்சியும் அப்பியாசமுமே, பிறகு முதிர்ந்த வயதில் பிரதிபிம்பம் போல் உலக நடக்கையில் தோன்றுகின்றன. ஆனதுபற்றி ஒரு குடும்பத்திலிருப்பவர் தங்கள் தங்களுக் கேற்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்து கொண்டு தமக்கு மேலுள்ள குடும்பத்தலைவருக்கும் பய பக்தியுடன் கீழ்ப்படிந்து நடந்து அவர் காலாலிடும் கட்டளைகளைச் சிரசால் வகித்து நடத்தியும் வருவார்களேயாகில், அவர்கள் தங்கள் பருவ காலத்தில் சிறந்த தேசாபிமானிகளாகவும், இராஜபக்தியுடையவர்களாகவும் இருப்பார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

"இளமையிற்கல்" என்றவாறு

மதவிஷயமான போதனைகளை பாலியத்தில் தமது புத்திரர்களுக்குக் கற்பிக்க, கற்றறிந்த தாய்மாரே தகுதியாவர். முதிர்ந்த கல்வியின்றி, ஸ்திரீகள் இராஜாங்க விஷயங்களில் பிரவேசிப்பது தவறுதலான காரியம். முற்றிலும் கற்றறிந்த பெண்மணிகள் அவ்வாறு முயலவே, ஆடவரின் ராஜாங்க பாரமானது குறைந்து, இருவருக்குமுள்ள ஒற்றுமையு மதிகரிக்கும். மேலும், இம்மையில் எல்லாச் சுகங்களையும்பெற்று மறுமையிலும் இன்பத்தை யடையுமாறு ஸ்திரீகள் என்றும் நல்லொழுக்கத்தையே கைப்பற்றி, தமது கணவருடன் நெடு

நாள் கூடி இல்லற தர்மத்தைக்குறைவின்றி நடத்துவதற் கேதுவாய் கணவனுடைய குறிப்பறிந்து நடத்தற்கும், மானம், கற்பு, பொறுமை என்னும் நற்குணங்களை யெல்லாம் அமையப் பெறுதற்கும் கல்வியே பிரதானமாயிருப்பதும் எளிதிற் புலப்படும்.

ஆதலால் இவ்வித உத்தம குணங்களை யெல்லாம் ஒருங்கே திரட்டி அமைக்க வல்ல கல்வியை நமது சகோதரிகளுக்கு அன்புடன் புகட்டி, அவர்களைக் களிப்புறச் செய்து நிபுணர்களாக்குவதே நமது வாழ்நாளின் முதற் கடைமையாகும். அவ்வாறு செய்யாமலிருப்பதே நாம் இவ்வுலகினில் தவிர்ந்தொழுகும் கடமைகளிற் றலைமையானது.

# சண்டையும் சமாதானமும்.

---

சண்டை, போர், யுத்தம் என்பன ஒரு பொருட் கிளவிகள். இருதிறத்தாரும் ஏதாவது ஒன்றன் நிமித்தம் தம்முள் மாறுபாடுற்று அதைச் சாதிப்பதன்கண் நிகழ்வதே சண்டையாகும். அது மிகவும் பொல்லாதது. அதன்மேற்செல்வாருக்கு என்றும் தீங்கே பெரும்பான்மையும் பயனாகும். துன்பத்துள் துன்பமாகிய பகையை ஒருவன் விலக்குவானாயின் அவனுக்கு இன்பத்துள் இன்பம் உறுதியாய்ப் பயக்கும். சமர் செய்து வெற்றி பெற்றார்க்கும் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் உண்டு. மற்றுத் தோற்றவருக்கோ அவை எண்ணிறந்தவை. ஆருயிர் மக்கட்சேதம், படைத்த நிதிசேதம், வாயில்லாப் பிராணிகள் சேதம்; கடையிற் கிடைப்பது மிகச் சொற்பமேயாகும்.

முக்கியமான சண்டையானது பேதமை, புல்லறிவு என்ற இருவகை நிலங்களில் முளைத்து காமம் வெகுளி என்ற நீர் பாய்ச்சப்பட்டுத்துணைக்கருவிகளுடன் நற்பயிராய் அறுப்புக்குத்தயாராகி விடு

கிறது. அது கொடிது கொடிது என்றான்றும்—பேதமை யென்பது ஒன்றுமறியாமை, புல்லறிவு, தான் சிற்றறிவினனாயிருந்தும் பேரறிவினனாய் மதித்துச் சான்றோர் உறுதிச் சொல் கொள்ளாமை. இவ்விருமையும் நல்வழியின்பாற்படா. வெகுளியோ கோபமாகும். "கோபம் சண்டாளம்" என்பர் பெரியார். கோபம் செய்பவர், அது தணிந்த பின்னர் எண்ணி எண்ணி வருந்துவது நினைத்தற் பாலதன்று. மேலும் சினமென்று சொல்லப்படும் சேர்ந்தாரைக் கொல்லி பிறவிக் கடலுள் அழுந்தாமல் வீடெய்தும் இனமாகிய புணையையும் சுடுமென்றோ? காமமோ மிகக்கெட்டது. ஆசைக் கோரளவில்லையன்றோ? ஆசைவலையிலகப்பட்டார் படாதபாடு படுவரன்றோ? முதலில் ஆசை உண்டாயப்பின்னர் அதை எய்துமாறு சிந்தனை பல செய்து கடையில் நடத்தையில் பிரவர்த்திக்க ஒருவனுக்கு பற்பல இடருமுண்டாய் இகலும் நிரம்பிவிடும். நற்காரியத்தில் ஆசைபிறத்தல் நன்றே; அது நன்மையே விளைவிக்கும். தீயவழியைப்பற்றிலோ காட்டுத் தீயைப்போல் பறறும்; விளைவும் தீமையே. இகல் நிரம்பியவிடத்து மனஸ்தாபம் பெருகி அடி பிடி சண்டைநகே அஸ்திபாரமாய் விடும். ஆதலின் பகையை நாம் விலக்க வேண்டும்; விலக்க முடியாது நம்பாற் பட்டவழி, நாம் பின்வாங்காது இன்னாரென்று காட்டிப் பகைஞரை வெல்வதே நமது கடமையாகும்.

சண்டை பலத்தவிடத்து உயிர்ச் சேதம் உறுதியாய் உண்டு. முக்கியமாய் ஜனசமூகத் தாருக்குள் ஏற்பட்டுவிட்டால், இருகக்ஷிகளுக்கும் உயிர்ச்சேதம் உண்டாவது, கணக்கிலடங்காது. மகாபாரத யுத்தத்தில் பாண்டவகௌரவர்கள் இரண்டு பேர்களுக்கும் எவ்வளவு சேதம் உண்டாயிற்று; எத்தனை உறவினர் உயிர் துறந்தார்கள்? எண்ணிறந்த தாய்தந்தையர்கள் தத்தம் மக்களை இழந்தார்கள்; எத்தனை ஸ்திரீகள் தங்கள் ஆருயிர்க் கணவர்களை இழந்தார்கள். அம்மம்ம! மனம் பதை பதைக்கிறது. அவைகளை யெல்லாம் படிக்குங்கால் பண்டைக் காலத்து மட்டுமல்ல; இக்காலத்தும், அவை யனைத்தும் உண்மையே. கொஞ்ச காலத்திற்கு முன் நடந்த போவர் யுத்தமே

ன்ன, பின் ருஷியா ஜப்பானிய யுத்தம் என்ன இவைகளெல்லாம் நடந்த காலத்து எவ்வளவு எவ்வளவோ சேதமென்று பத்திரிகைகளில் வாசித்திருந்தது ஞாபகம் வருகிறது. சண்டையைப் பற்றி நினைக்கும் போதே மனம் பதறுகிறதே. சமர் நடுவில் போய்விட்டால் எவ்விதமோ! வெடியும் குண்டும் புகையும் ஈட்டியும் கத்தியும் இன்னும் மற்றவைகளும் ஒன்றுக்கொன்று உருத் தெரியாது மருண்டு எவரையும் வெருட்டும்போது பகைவரில்லை நண்பரில்லை அயலாரில்லை உறவினரில்லை தனவானில்லை ஏழையில்லை சிறுவரில்லை பெரியவரில்லை. எல்லோருக்கும் பக்ஷபாதமின்றி ஒரே கதிதான் கிடைக்கிறது. சண்டையில் நின்று விட்டால் பின்வாங்குதல் ஒருவனுக்கு தர்மமே யில்லை. அவன் கோழையினும் கோழையே ஒரு பதருமாவான். திடமுள்ள ரணசூரவீரன் என்றும் திசை மெச்சப் பெயர்பெற வேண்டும்.

இன்னும் இடும்பால் இகல்மேற் செல்வாருமுளர். அவர்ஜெயமுற்றது நாம் கண்டிலம். சூரபத்மன், இராவணன், கம்சன், இரணியன், துரியோதனன், மதுகைடவர், கீசகன், மகாபலி இவர்களது சம்பத்து ஒருநாளும் அவர்களுக்கு நிலைநிற்கவில்லை. அவர்கள் அழிவே அடைந்தார்கள். சண்டையில் கவனிக்கும் நீதிகள்பல உள. பகைவரில் தப்பிவந்தவரை கைவிடலாகாது குண்டு குத்து கொண்டவரை உயிர் விடுக்கச் செய்யலாகாது. பகைவராயினும் காயம்பட்டவரைச் சிகிச்சையிலிருத்தல்வேண்டும். "இன்றுபோய் நாளை வாவென்று" ஸ்ரீராமர் விடுத்தனரன்றோ? ருஷிய ஜப்பானியயுத்தத்தில் காயம்பட்டவர்களுக்கு சிகிச்சைபண்ண எண்ணிறந்த அமெரிக்க, ஜப்பானிய ரோகசம்ரக்ஷணி ஸ்திரீகள் பலர் தாமாகவே முன்வந்து உதவிபுரிந்தனர். அவர் தர்மசிந்தனை இருந்தவாறு என்னே! என்னே!!

தற்காலம் சண்டை என்றால் அனேக சாதியார்களுக்கு வெறுப்பாயுளது. இருந்தும் ஒவ்வொருவரும் தரைச்சேனைகளையும் கடற்சேனைகளையும் பலவிதமாய்ச் சீர்திருத்திப் பலப்படுத்தி வேண்டிய

காலத்திற்கு ஆயத்தமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தற்கால நிமித்தம் இருக்கலாம்; ஆயினும் தற்காலப்போக்கு சமாதானத்தையே நோக்கியிருக்கிறது. ஜாதீய இராஜீய சம்வாதங்களைப் பொறுக்கி யெடுத்த மத்தியஸ்தருக்கு விட்டு அவர்கள் கொடுக்கும் தீர்மானத்தையே அனுஷ்டிப்பவர்களாயிருக்கிறார்கள். இவ்வழியில் தான் தற்கால சிரேஷ்டர்கள் உழைத்து வருகிறார்கள். இதுபொருட்டன்றோ காலம் சென்ற ஏழாம் எட்வார்ட் மகாசக்கிரவர்த்திக்கு **சமாதானசாதகன்** என்ற பெயர் கிடைத்தது. சமாதானத்தை விருத்திசெய்யும் புண்ணியவானுக்கு எட்டாயிரம் சவரன்கள் அல்லது இலக்ஷத்து இருபதினாயிரம் ரூபாய் பெறுமான ஒருபரிசு "சுவீடன்" தேசத்தில் காலஞ்சென்ற நோபேல் பிரபுவின் இஷ்டப்படி ஒவ்வொரு வருஷமும் அவர் சொத்தினின்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. சண்டையன்னியில் சமாதானமாய்ப் பலசங்கதிகளையும் ஓர் முடிவுக்குக் கொண்டுவரலாம். கொஞ்சம் தயை, க்ஷமை என்ற இரண்டுமே வேண்டற்பாலன. அவை இருந்துவிடின் எவ்வளவோ உலகினருக்கு லாபமுண்டு.

நாகரிகம் அதிகரிக்க அதிகரிக்க வெம்போர்க் கருவிகள் பல விதமாய் விர்த்தியடையினும், மிருகத் தன்மைபொருந்திய சண்டையை விலக்கிச் சமாதான வழிகளையே எல்லா விவகாரங்களிலும் அனுசரிப்பது தற்கால நோக்கம் என்பது சற்று உற்று நோக்கின், உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

வியாஸப்ரகாசிகை
முற்றிற்று.

3459

# பிழை திருத்தங்கள்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 1 | கைக் கோண்டு | கைக்கொண்டு |
| 4 | 8 | துன்பங்களுசம் | துன்பங்களும் |
| 12 | 13 | நரக துன்ப | நரக துன் |
| 15 | 11 | காப்பாற்து | காப்பாற்று |
| 17 | 14 | நம்மர் | நம்மவர் |
| 55 | 13 | பலகாரணக்களை | பலகாரணங்களை |
| 58 | 21 | பொருத்தாரை | பொறுத்தாரை |
| 76 | 11 | செல்வமீனு | செல்வமுமீனு |
| 76 | 12 | மெவனெ | மெவனோ |
| 76 | 15 | தருமைத்தை | தருமத்தை |
| 76 | 18 | ஆத்துச்சூடி | ஆத்திசூடி |
| 77 | 23 | கொடோல் | கொடேல் |
| 78 | 25 | ண்ணீர் | கண்ணீர் |
| 80 | 9 | எதிற்டி | எதற்கடி |
| 80 | 10 | போதுப் | போதும் |
| 86 | 15 | வீட்டைதல் | வீடடைதல் |
| 95 | 18 | விஷபத்தில் | விஷயத்தில் |
| 106 | 6 | காண்டு | கொண்டு |
| 108 | 15 | பறறும் | பற்றும் |
| 109 | 24 | ரோகசம்ரக்ஷணி | ரோகசம்ரக்ஷண |
| iii | | Worldy | Worldly |
| 100 | 13 | aicds | acids |

# சக்ரவர்த்தினி.

சென்ற ஐந்து வருடகாலமாக நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் இவர்களின் கல்வியபிவிர்த்தியின் நோக்கமாக "சக்ரவர்த்தினி" யென்னும் ஒரு மாதாந்தரப் பத்திரிகை நடத்தப் பட்டுவருகிறது. இப்பத்திரிகையில் சிறுசிறு நீதிக்கதைகளும், ஒழுக்கம், நற்குணம், முதலியவைகளைப் போதிக்கும் வியாசங்களும், கல்விமான்களால் எழுதப் பட்டு வருகின்றன. இது மாதந்தோறும் குறித்ததேதியில் தவறாமல் வெளியிடப் பட்டுவருகிறது. இதை கவர்ன்மெண்டார் மாதந்தோறும் ஐம்பது பத்திரிகைகள் வரையில் தருவித்து பெண்பாடசாலைகளுக்கு அனுப்பி வருகிறார்கள்.

இதன் வருடசந்தா ரூபா ... ... ... 2—0—0

Apply to:—

3459

மானேஜர்.

"சக்ரவர்த்தினி" ஆபீஸ்.

107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி.